# கிராம நலம்

மே.....1965




## விளைச்சலை அதிகரிக்க.....





தீவிர விவசாயப் பயிற்சி ஆரம்ப விழா
(பட்டுக்கோட்டை -20-4-65)







கிராம நலம்

மாடி 10 | மே 1965 | படி 8

# செல்வத்தின் பிறப்பிடம் எது?

மக்கள் எல்லோரும் எல்லாச் செல்வங்களும் நிறையப் பெற்று இன்பமாக வாழவிரும்புவது இயற்கை. பொருளாதார வாழ்க்கையில் இன்பம் கைகூடுவதற்குத் துணைசெய்வது செல்வமாகும். இந்தச் செல்வம் வெறும் பொருளால் மட்டும் உருவாகிவிடமுடியாது. இயற்கை வசதிகளும், மனித உழைப்பும் தக்க முறையில் ஒன்று கூடும் போதுதான், உண்மையான செல்வம் உண்டாகி, எல்லோருக்கும் பயன்படுகிறது.

இந்த அடிப்படை உண்மையை, நமது முதலமைச்சர் அவர்கள், சமீபத்தில், தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த பட்டுக்கோட்டையில் உள்ள கிராம சேவக்குகள் பயிற்சி நிலையத்திலே, விவசாயப் பயிற்சிக்கான புதிய பாடத்திட்டத்தைத் தொடங்கி வைக்கும்போது, பொருத்தமான முறையில் வற்புறுத்தி விளக்கம் கூறினர்.

“செல்வத்தின் பிறப்பிடம் எது”? என்ற கேள்வியை எழுப்பிய முதலமைச்சர், அக்கேள்விக்கு சிறந்த விடையும் அளித்தார். “நிலம்தான் செல்வத்தின் பிறப்பிடம். நிலத்தை உரிய முறையில் பயன்படுத்துவதன் மூலந்தான் மனித சமுதாயம் மேலும் வளம்பெற்று முன்னேற முடியும். எனவே நிலத்தின் மூலம் உற்பத்தியை—விவசாய உற்பத்தியை—பெருக்கப் புதிய புதிய முயற்சிகளும், அவற்றிற்கான பயிற்சியும் தேவை. தாங்கள் அறிந்தவற்றைக் கிராம மக்களிடையே பரவச் செய்து வரும் கிராம சேவக்குகளுக்குத் தீவிர விவசாயப் பயிற்சி அளிப்பது, நல்ல பலன் தரும் என்ற முறையில் இப்பயிற்சித் திட்டம் ஆரம்பமாகிறது” என்ற கருத்தினை விளக்கி, முதலமைச்சர் விரிவாகப் பேசினர்.

“அண்ணல் மகாத்மாவின் அடிச்சுவட்டில், நம்முடைய கிராமங்களில் மறுமலர்ச்சி உண்டாக்கும் பணியில், நாம் அனைவரும் ஈடுபட்டிருக்கிறோம். இதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள சமுதாய நலத் திட்டம் கிராமத்திற்கு ஒரு சில வசதிகளை ஏற்படுத்தும் திட்டம் மட்டுமல்ல; கிராமத்தில் செல்வம் கொழிக்க வகை செய்யும் திட்டமும் ஆகும். எனவேதான் விவசாயத்திற்கு முதலிடம் கொடுத்து, கிராமத்தில் பணி புரியும் கிராம சேவக்குகளுக்கு அதிகமாக விவசாயப் பயிற்சி, அவர்கள் பணி புரிவதற்குச் செல்லும் முன்பே கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டது. இதன் விளைவாகத் தமிழ் நாட்டில், விளைவு அதிகரித்துக் கொண்டுதான் வருகிறது. விவசாயிகளும் முயற்சியுடன்தான் பாடுபடுகின்றனர். ஆனல், மக்கள் தொகை வளர்ந்துகொண்டே வருகின்றது. இதை மனதில் கொண்டு, தஞ்சையில் தீவிர நெல்சாகுபடி திட்டத்தைத் துவக்கினோம். இப்பொழுது இந்தத் திட்டத்தை மற்றப் பயிர்களுக்கும், மற்ற மாவட்டங்களுக்கும் விஸ்தரித்துள்ளோம். இந்தத் திட்டங்களைச் சரியாக நிறைவேற்றவேண்டுமானல், அதற்குப் போதிய பக்குவம், போதிய பயிற்சி, போதிய தகுதி, போதிய அனுபவம் பெற்ற ஊழியர்கள் வேண்டும்” என்று முதலமைச்சர் எடுத்துரைத்தார்.

தீவிர விவசாயப் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள கிராம சேவக்குகளுக்கு அறிவுரை நல்கியும், வாழ்த்துரை வழங்கியும் பேசிய அவர், “நீங்கள் எல்லாம், கிராம நலப்பணியில் நல்ல முறையில் நம்பிக்கையோடு, பற்றேடு ஈடுபட்டிருக்கின்றவர்கள்; அத்தகைய நீங்கள், மேலும் இந்தப் பயிற்சியைப் பெறுவீர்கள் என்ருல், இந்தப் பயிற்சியை நல்ல முறையில் பயன்படுத்திக்கொண்டு, விவசாயிகளை ஊக்குவித்து, நம்முடைய விவசாய உற்பத்தி மேலும் பெருகவும், அதன்மூலம் தமிழ்நாட்டில் வளம் பெருகவும் கூடிய வகையில் நீங்கள் செயல்படுவீர்கள் என்று நம்புகிறேன்” என்று கூறி தீவிர விவசாயப் பயிற்சியைத் துவக்கிவைத்தார்.

**முதலமைச்சரின் துவக்கவுரைக்கு முன், விழாவில் பங்குகொண்டு பேசிய கூட்டு அபிவிருத்திக் கமிஷனர் திரு. கா. திரவியம் அவர்கள்**, நம் நாட்டில் பண்டை நாட்களில் வேளாண்மை பெற்றிருந்த **சிறப்பு** பற்றியும், இன்றைய நிலையில் அத்துறையில் செய்தாக வேண்டிய அவசரப்பணிபற்றியும், **அதில் கிராம சேவக்குகள் ஆற்ற வேண்டிய பங்கு பற்றியும்** விரிவுபட, அழகுற எடுத்துரைத்தார்.

## கூட்டு அபிவிருத்திக் கமிஷனரின் கருத்துரை

"யானை கட்டிப் போரடித்த அளவுக்கு செந்நெல் விளைச்சல் செழித்துக் கொழித்ததாகப் பாடல் பெற்ற பண்டைத் தமிழ் நாட்டிலே, இன்று உண்ண உணவுக்குத் தட்டுப்பாடும், அதன் காரணமாகக் கட்டுப்பாடும் தோன்றி உள்ளனவென்றால், அது இடைக்காலத்தில் இந்தியாவைப் பற்றியிருந்த அரசியல் சாபக்கேடு, பொருளாதாரச் சீர்குலைவு, கலாச்சார சிதைவு-இவற்றின் பரிதாபகரமானவிளைவுகளில் ஒன்றுதான். அன்று நெல் விளைந்ததுமட்டுமல்ல, நெல்லை ஒட்டி, நெல்லைச் சுற்றி நேர்மையும் தழைத்தது. பண்டை நாட்களிலே, வேளாண்மை ஒரு தொழில் முறையாக இருந்தது மட்டுமல்ல, அது ஒரு வாழ்க்கை நெறியாகவே அமைந்தது. உழைப்புக்கு வணங்கும் தன்மை, உண்மையை ஏற்கும் நேர்மை, பகுத்து உணரும் திறன், பகிர்ந்து உண்ணும் பண்பு, ஏழைகளிடம் பரிவு, எல்லோரிடமும் அன்பு ஆகிய நற்பண்புகளை, கலப்பை பிடித்து உழும் கல்வியானது போதித்தது. இன்று அந்தப் பண்புகளை மீண்டும் நிலைநாட்டி, கிராமங்களில் செழிப்பு மட்டுமல்ல, செழிப்பைச் சுற்றி அறநெறியும் அன்பு நெறியும் வளரச் செய்யவேண்டும். கிராமங்களில் புதுவாழ்வு மலரச் செய்து அந்த மலர்ச்சியின் காரணமாக மணமும் பயனும், நகரப் பகுதிகளுக்கும் பரவச் செய்யவேண்டும். இந்த நோக்கத்துடன், சுதந்திர இந்திய அரசாங்கம் வகுத்துள்ள சீரிய திட்டங்களில் முதன்மையானது, கிராம அபிவிருத்தித் திட்டம். இந்தக் கிராம, சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் உயிர்நாடி, கிராம சேவக்குகள்தான்," என்றார் அவர்.

கிராம அபிவிருத்திப் பணியில் இவ்வளவு முக்கிய பங்கு, பொறுப்பு வகிக்கும் கிராம சேவக்குகளிடம் எத்தகைய பண்புகள், மனப்பாங்கு, செயல்முறை அமைந்துள்ளன அல்லது அமைந்திருக்க வேண்டும் என்பதையும், கூட்டு அபிவிருத்திக் கமிஷனர் சுட்டிக்காட்டினார்.

"ஏழ்மை, எளிமை—ஆனால், எண்ணத்தில் உயர்வு, சிந்தனையில் செம்மை ஆகியவைதான் கிராம சேவக்குகளை ஒன்றாகப் பிணைக்கும் நற்பண்புகள். இன்பமும் துன்பமும் எல்லோர் வாழ்விலும் கலந்திருப்பது இயற்கை, என்றாலும் கிராம நலப் பணியில் ஈடுபட்டுள்ள இந்த கிராமசேவக்குகளோ துன்பத்தையே இதுவரை அனுபவித்தவர்கள். இன்பம் என்பது எதிர்காலத்திலாவது கிடைக்க இயலுமா என்ற நிலையில் உள்ளவர்கள். எனவே இவர்கள், இன்று தாழ்ந்துள்ள சமுதாயத்தை உயர்த்தப் பாடுபடத் தகுதி பெற்றவர்கள். அத்தகைய கிராம சேவக்குகள், பல்வேறு நற்பணிகளைப் புரியவேண்டும்; அவர்கள் மண்வளத்தைக் காப்பதோடு, மனித வளத்தையும் பாதுகாக்கவேண்டும்; ஊருக்கு உழைக்கும் உத்தமர்களாக விளங்கவேண்டும்; கிராம மக்களிடையே வாழ்ந்து, அவர்கள் கஷ்ட நஷ்டங்களில் பங்குகொண்டு, அவர்களுக்கு உற்ற தோழர்களாக இருக்கவேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன்தான், கிராம சேவக்குகளின் பொறுப்பும், அவர்களுடைய பணிகளும் வகுக்கப்பட்டன. ஆனால் உணவு நெருக்கடி ஏற்பட்டிருக்கின்ற நிலைமையையும் நிர்ப்பந்தத்தையும் அனுசரித்து இன்றுள்ள சூழ் நிலையிலே, பலநோக்குப் பணிபுரியும் கிராம சேவக்குகள் முதன்மையாக தலையான-பொறுப்பாக உணவு உற்பத்திக்காக விவசாயப் பணிகளிலே ஈடுபடவேண்டும் என்று, அரசாங்கம் கொள்கை வகுத்திருக்கின்றது. அந்தப் புதிய கொள்கை ஏற்பாட்டின்படி, அதற்கு இணங்க, விவசாய வேலைகளை இன்னும் செம்மையாகச் செய்வதற்காக, ஏற்கெனவே ஏழு ஆண்டுகள், எட்டு ஆண்டுகள் கிராமத்திலே பணியாற்றிப் பக்குவம் அடைந்து, நற்பெயர் பெற்று, மக்களின் நன்மதிப்பையும் நன்னம்பிக்கையையும் சம்பாதித்துள்ள சிறந்த ஊழியர்களான 100 பேர்களைத் தேர்ந்தெடுத்து, நம்முடைய மாநிலத்தில் நடக்கும் 7 கிராம சேவக்குகள் பயிற்சி நிலையங்களில் இரண்டைத் தேர்ந்தெடுத்து, அவற்றில் அவர்களுக்கு ஓராண்டு காலத் தீவிர விவசாயப் பயிற்சி நடத்துவதற்காகத் திட்டம் இயற்றப்பட்டுள்ளது" என்று, கூட்டு அபிவிருத்திக் கமிஷனர், பயிற்சித் திட்டத்தைப் பற்றி விளக்கம் தந்தார்.

முதலமைச்சர் அவர்களும், கூட்டு அபிவிருத்திக் கமிஷனரும் குறிப்பிட்டபடி, இப்பயிற்சிக்குத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ள கிராம சேவக்குகள் கிராம சேவையில் ஏற்கெனவே நல்ல அனுபவமும், பக்குவமும் பெற்றவர்கள்; சீரிய பணி மூலம் பொது மக்களின் நன் மதிப்பைப் பெற்றவர்கள். ஆகையால் இப்பயிற்சியின் பலனாக, அத்தகையவர்களது தொண்டு மேலும் சிறப்புடையதாக, பயனுள்ளதாக அமையும் என்பதில் ஐயமில்லை. தீவிர விவசாய உற்பத்தி சம்பந்தமாக, தாங்கள் ஆய்ந்துணரும் வழிமுறைகளையெல்லாம், அவர்கள் விவசாய மக்களிடையே பரவச் செய்து, நாட்டின் உற்பத்தி பெருகவும், உணவு நிலை மேலும் சீர் பெறவும், வழிசெய்வார்கள் என்று நம்புகிறோம்.




# பாரதத்துக்கு விழிப்பூட்டிய கவியரசர் தாகூர்

திரு. எஸ். டி. காசிராஜன் எம்.ஏ.

['ஜன கண மன' என்று தொடங்கும் நமது தேசியப் பாடலை இயற்றியவர் ரவீந்திரநாத் தாகூர். அவருடைய அமரத்துவத்துக்கு அந்தப் பாடலே சிறந்த சான்று.—ஆசிரியர்.]

குறுகிய பந்தங்களைக் கடந்து உலகக் குடிமகனாக வாழ்ந்தவர் கவியரசர் தாகூர். ஞான உள்ளமும், விரிந்த மனமும் கொண்ட அவர் உலகக் கவிஞர்கள் அரங்கில் எழு ஞாயிறுபோல விளங்கினார், இந்திய நாட்டின் இருபதாம் நூற்றாண்டை தாகூர் சகாப்தம் என்றே சொல்லலாம்.

கல்வி, செல்வம், ஞானம் ஆகியவைகளில் சிறந்த பண்பு மிக்க குடும்பத்தில் தோன்றியவர் தாகூர். இக் குடும்பத்தினர் பிரம்ம சமாஜம் என்ற சமரச சமயத்தில் ஈடுபாடு கொண்டிருந்தார்கள். இலக்கியப் படைப்பிலும் புகழ் பெற்றவர்கள். தாகூர் பிறந்தது முதலே அறிவின் மணத்தை நுகர்ந்தார். இலக்கியக் காற்றை சுவாசித்தார். இளமையிலேயே அன்னையை இழந்தார். வேலைக்காரர்களும் ஆசிரியர்களுமே அவரை வளர்த்தார்கள். அதனால் தாகூர், அவர்கள் பேச்சைக் கேளாமல் இஷ்டம்போல சுதந்திரப் பறவையாக வளர்ந்தார். விரைவிலேயே பள்ளிப் படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டார்.

தாகூர் குடும்பத்தினரின் ஜோரசன்கோ மாளிகை மிகப் பெரியது. பல கட்டடப் பகுதிகள் கொண்டது. அந்த மாட மாளிகையிலிருந்தபடியே சுற்றிலும் நடப்பதை உன்னிப்பாகக் கவனித்து வந்தார் தாகூர். சுற்றுப்புறங்களில் குடிசைகளில் வாழ்ந்த ஏழை எளிய மக்களின் வாழ்க்கை இரக்கமுள்ள அவர் நெஞ்சில் பதிந்தது.

தாகூர் சிறுவனாக இருந்தபோதே மோனமான கனவுகளில் லயித்து விடுவார், அவர் பள்ளி செல்லவில்லையே தவிர, அவரது மனம் உலகத்தைப் பார்த்து கற்றுக்கொண்டே இருந்தது. பால் மணம் மாறாத சிறுவனாக இருந்தபோதே அவர் கவி பாடத் தொடங்கிவிட்டார்.

ஆங்கிலப் புலவர்களாகிய ஸ்ரீமதி பிரௌனிங், ஷெல்லியைப் போன்று கவிதை உள்ளம் படைத்தவர் தாகூர். கட்டுப்பாடான மனப் பயிற்சி உடையவர் அல்ல. பதினைந்து வயதிலிருந்து இருபத்து மூன்று வயது வரை அவரது வாழ்க்கை மனம்போன போக்கில் போய்க்கொண்டிருந்தது. ஆனால் கவிதை ஆர்வம் மட்டும் வளர்ந்துக் கொண்டே இருந்தது, விடாது தொடர்ந்து எழுதிக்கொண்டே வந்தார். பலவிதமான மனப் போராட்டங்கள் அவர் கவிதையில் பிரதிபலிப்பதற்கு இதுவே காரணம். விக்டர் ஹியுகோ கூட தாகூரைப்போல் நானாவிதமான இலக்கிய மலர்களைப் படைக்கவில்லை. சிறுகதை, நவீனம், கவிதைகள், நாடகங்கள், அரசியல் விமர்சனங்கள், பொருளாதார கட்டுரைகள், மனோதத்துவ விளக்கங்கள் எல்லாவற்றையும் எழுதினார் தாகூர்.

### உலக மகா கவிஞனுக்கு சொந்த நாட்டில் கேலி

ஆனால், சொந்த நாட்டு மக்கள் அவரது பெருமையை உணரவில்லை. அவரது படைப்பின் சிறப்பு அவர்களுக்கு புரியவில்லை. சிறப்பை அன்னிய நாட்டினர்தான் முதலில் உணர்ந்தனர். தலைசிறந்த இலக்கிய படைப்புக்காக உலகத்தின் மிகச் சிறந்த நோபல் பரிசை அவர் பெற்ற பிறகுதான் சொந்த நாட்டு மக்கள் அவரைப் போற்றத் தொடங்கினர்.

நோபல் பரிசு கிடைப்பதற்கு ஆறு வருடங்களுக்கு முன்பே கல்கத்தா சர்வகலாசாலை தலைவராக இருந்த சர். அஸுடோஸ் முகர்ஜி, தாகூருக்கு இலக்கிய விற்பன்னன் பட்டம் கொடுக்கவேண்டுமென்று கூறினார். ஆனால் செனட் அதற்குச் சம்மதிக்கவில்லை. வங்காள மொழியில் தாகூர் ஒரு பண்டிதர் அல்ல. ஆதலால் அவருக்கு அப்பட்டம் கொடுக்கக்கூடாது என்று செனட் கூறிவிட்டது.

அதுமாத்திரமல்ல; தாகூரை பத்தாம் வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கு பரீட்சை அதிகாரியாக நியமித்து அவரை கௌரவிக்கலாம் என்று ஒருவர் கிண்டலாக சொன்னார்; வங்காளத்தில் உள்ள பத்திரிகைகள் அப்படி சொன்னவரைக்கூட கண்டித்தன. அதேசமயத்தில் தாகூரை கேலி பண்ணின தாகூருக்கு வங்காள மொழியை நன்கு எழுதத் தெரியாது என்று குறை கூறின. தாகூர் எழுதியதைப் பள்ளி மாணவர்களின் கேள்வித் தாளில் கொடுத்து, அதை சுத்தமான வங்காள மொழியில் திருத்தி எழுதுமாறு மாணவர்களைப் பணித்தனர் பண்டிதர்கள்;

ஆனால் தாகூர் மெய்ஞ்ஞானி என்ற உண்மை அவர்களுக்குப் புரியவில்லை. பேசும் மொழியிலேயே இனிமை மிக்க கவிதைகள் இயற்ற முடியும் என்பதை அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை.

தாகூர் எழுதிய ஆங்கிலத்தையும் குறை கூறினார்கள். ஒரு ஆங்கிலேய மாது அவருக்கு ஒரு சமயம் கடிதம் எழுதினாள். ''கீதாஞ்சலியின் ஆங்கில ஆக்கத்தை சி. எப். ஆண்ட்ரூஸ் எழுதியதாக கேள்விப்படுகிறேன். தாங்கள் தங்கள் புகைப்படத்தைக் கையெழுத்துப் போட்டு அனுப்புங்கள். அதோடு சி. எப். ஆண்ட்ரூஸின் முகவரியையும் எழுதியனுப்புங்கள். நான் அவருக்கு எழுதி அவருடைய போட்டோவை வாங்கி, தங்கள் இரண்டுபேரின் படங்களையும் கீதாஞ்சலியில் ஒட்டி வைத்துக்கொள்ள விரும்புகிறேன்.'' என்பதாகக் கூறினார்.

இப்படி விஷயம் தெரியாத விமர்சனங்கள் இருந்தபோதிலும் தாகூரின் ஆங்கில நடை மிக அற்புதமானது என்பதை இலக்கிய விமர்சகர்கள் அனைவரும் ஒப்புக்கொண்டனர். தவிரவும் தாகூர் 50 வயதிற்கு மேல்தான் ஆங்கிலத்தில் புலமை பெறத் தொடங்கினார் என்று அறியும் போது அவரது திறமைபற்றி ஆச்சரியப்படாமல் இருக்கமுடியாது.

## நிறை மனிதர்

தாகூர் ஒரு தலைசிறந்த கவிஞர் மாத்திரம் அல்ல. அவர் நிறை மனிதர். மூடநம்பிக்கைகளையும் குருட்டுத்தனமான பாரம்பர்யங்களையும் அவர் சாடினார். ஜாதிக் கொடுமைகளைக் கண்டித்தார். ஆனால், ஆணுக்கும் பெண்ணுக்கும் பேதம் காட்டாத, கவர்ச்சியற்ற ஏக தத்துவத்தை அவர் ஒப்புக்கொள்ளவில்லை. பெண் பெண்ணாகவே சக்தியின் பிம்பமாகவே இருக்கவேண்டும் என்று விரும்பினார். அன்புக்கும் ஆசைக்கும் உறைவிடமாக பெண் விளங்கவேண்டும் என்றார். பெண்கல்வியை வலியுறுத்தினார். இளமை மணத்தைக் கண்டித்தார். பெண்கள், ஆணுக்கு இளைத்தவர்கள் அல்ல என்றார். ஆனால் ஆண்-பெண், சமத்துவ சித்தாந்தத்தைக் கண்டித்தார்.

கவியரசர் தாகூர் விஸ்வபாரதி என்ற உன்னதமான கல்விக்கூடம் ஏற்படுத்தினார். நாட்டில் சிறந்த ஒரு அறிவு நிலையமாக அது இன்றும் சிறப்போடு இயங்குகிறது. தாகூரின் சமரசக் கருத்துக்களை அது போதிக்கிறது.

பிரிட்டிஷ் ஆதிக்க ஆட்சியை ஒழிக்க பாரத நாடு நடத்திய விடுதலைப் போராட்டத்தில் கவி தாகூரின் பங்கு மகத்தானது. இந்த நாட்டின் கோடிக்கணக்கான மக்கள் விழிப்புற்று எழுந்து விடுதலைப் படையில் சேர, விடுதலைக் கீதத்தை இசைத்துத் தந்தவர் அவர். பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்து அவருடைய அறிக்கைகளும் வாசகங்களும் மக்களை வீறு கொண்டு எழச்செய்தன. அறம்பாடிய அக்கவிகள் அந்நிய ஆதிக்க ஆட்சியையே சுட்டறுத்தன. அந்த மகாகவியின் ஜனகண மன கீதமே பாரத நாட்டின் தேசிய கீதமாக அமைந்தது.

தாகூரின் கவிதைகளில் வானத்தைப் போன்ற தெளிவும் கடலைப் போன்ற கம்பீரமும் இருக்கும். சுதந்திரச் சிந்தனை சிறகெடுத்துப் பறக்கும். உலகத்துக்குரிய கவிஞராக விளங்கிய அதே சமயத்தில் இந்தியப் பண்பாட்டின் காவலராகவும் விளங்கினார். அவருடைய எழுத்துக்கள் சிந்தனைக்கும் அறிவுக்கும்கூட வளமூட்டின.

தாகூர் போன்ற கவிஞர்கள், பல நூற்றாண்டுகளுக்கு ஒரு முறைதான் தோன்றுவார்கள். அவருடைய கவிதைகளைத் தலைமுறை தலைமுறையாக மக்கள் தொடர்ந்து படித்து அனுபவித்து மகிழ்வார்கள். ஆனால், அதுமட்டும் போதாது. இந்த நாட்டின் மேன்மையை உயர்த்துவதில் ஒரு சிறு பங்காகிலும் செய்ய ஒவ்வொருவரும் முற்பட வேண்டும். தாகூர் நினைவுக்கும் வாழ்வுக்கும் அதுவே நாம் செலுத்தக்கூடிய சிறந்த காணிக்கை.

---

"மனிதனுடைய அறிவுடன் இயற்கையின் வளங்களும் சேர்ந்தமையால், நாகரிகம் வளர்ந்துள்ளது. இவை இரண்டும் எப்பொழுதும் கூட்டாகவே இருத்தல் வேண்டும். அறிவின் மூலம் பெற்ற பயனை பலமான அறைகளில் போட்டுப் பூட்டி வைத்தால் அந்தப் பயன் கொஞ்சம் கொஞ்சமாகக் கரைவது உறுதி. சென்ற காலத்தில் சேகரித்து வைத்ததைக் கொண்டே நாம் நீண்ட நாட்கள் வாழமுடியாது. மனிதனுடைய இந்தப் புதிய சக்தியை நம்முடைய கிராமங்கட்கு பயன்படச் செய்ய வேண்டும்."

—கவியரசர் தாகூர்.

சிறு கதை

# இரண்டு கண்கள்

நாட்டின் வளமான வளர்ச்சிக்கு அடிப்படைத் தேவைகள் இரண்டு—உறுதியான நாட்டு எல்லைப் பாதுகாப்பு, தன்னிறைவான உள்நாட்டுப் பொருளாதாரம். இந்த இரு முனைகளில், பலமான போர் வீரர் படை வரிசையும், உழவர் பெரும் படையும் அவசியம் தேவை. நாட்டின் இரண்டு கண்கள் இவ்விரண்டும்!

திரு. உதயை மு, வீரையன்.

நீண்ட நேரம் ஓடிவந்த புகைவண்டி, களைப்பால் பெருமூச்சு விட்டுக்கொண்டே, அந்த ரயில் நிலையத்தில் நின்றது. மக்கள் அவசரம் அவசரமாக ரயிலைவிட்டு இறங்கிக் கொண்டிருந்தனர்.

அதுவரையில் அமைதியே உருவாக அமர்ந்திருந்த மணியன், தான் இறங்க வேண்டிய நிலையம் அது என அறிந்துக்கொண்டு அவசரமாக கனமான மூட்டையொன்றைத் தன் தோளிலே தொங்க விட்டுக்கொண்டே, இராணுவ உடையுடன் மிடுக்கோடு இறங்கினான்.

ரயில் நிலையத்தில் இருந்த பெயர்ப் பலகையை மீண்டும் ஒரு முறை பார்த்துக்கொண்டான், 'தில்லை விளாகம்' என்று பெயர்ப் பலகையில் எழுதப்பட்டிருந்தது.

தான் இறங்கிய இடம் தன் ஊர்தான் என்று உறுதிப்படுத்திக்கொண்டு, 'டிக்கெட்டை' 'கேட்டில்' கொடுத்துவிட்டு ரயில்வே நிலையத்தை விட்டு அவன் வெளியேறுவதற்குள் அங்கிருந்தோர் அனைவருடைய காட்சிப் பொருளானான்.

ஆமாம், இப்போதைய நிலையில் அவன் எல்லோருடைய பார்வைக்கு மட்டுமல்ல, ரசனைக்கும் இலக்கானவன் தான். ஆனால் அன்று சின்னஞ் சிறு ஊரில், அரைக்கால் சட்டையும், பனியனுமாக அவர்கட்கு எடுபிடியாக இருந்த இந்த 'மணிப்பயலை' யார் மதித்தார்கள்? ஆனால் இன்று? தாய்நாட்டின் எல்லையைக் காத்து நிற்கும் வீரர் படையைச் சேர்ந்தவன் என்ற பெருமையோடு பட்டாளத்து வீரனாக அல்லவா திரும்பியுள்ளான். அந்த மேம்பாட்டு எண்ணமே அவனை ஏறு நடை போடச் செய்தது.

சொந்த ஊரில், தில்லைவிளாகத்தில் காலடி எடுத்துவைத்து பத்தாண்டுகளுக்குமேல் ஆகிவிட்டது. எல்லோருமே புதியவர்களாக மட்டுமல்ல புரியாதவர்களாகவும் இருந்தார்கள். ஆட்கள் மட்டுமா புரியவில்லை? அந்த ஊரே அல்லவா, அவனுக்குப் புரியவில்லை?

ஒளியைப் பார்த்தறியாது எங்கும் கோட்டான்கள் கொக்கரித்துக்கிடந்த இருண்ட பகுதியான அந்த கிராமத்தில், இப்போது வெண்ணிலவோடு மின்விளக்குமல்லவா போட்டி போடுகிறது.

காலம் மாறிவிட்டது. ஆங்கில மொழி பாணியில் சொல்வதானால், பாலத்திற்கடியில் எவ்வளவோ தண்ணீர் ஓடிவிட்டது!

புகைவண்டி நிலயத்தை இரண்டாம் முறையாக சுற்றிப் பார்த்தான். நிலையத்திற்கு வண்டியோடு வருவதாக எழுதியிருந்த தந்தையைக் காணவில்லை.

அவனுடைய சொந்த ஊரான 'நாச்சிகுளம்' அங்கிருந்து ஒரு மைல் கூட இருக்காது. யோசனை செய்தால் காரியம் நடக்குமா? வண்டி வராவிட்டால் என்ன? 'நடராஜா சர்வீஸ்,' இருக்கவே இருக்கு! காலிலே 'பூட்ஸ்' ஒலிக்க, அந்த சின்னஞ் சிறு சாலையிலே, நெஞ்சுயர்த்திப்புறப்பட்டான்.

சின்னஞ் சிறுவனாக, இளங்காளையாக இருபது ஆண்டுகள் ஓடிவிளையாடிய அந்தப் பகுதி இன்று அவனுக்கே புரியவில்லை, கள்ளி முளைத்திருந்த இடமெல்லாம்இன்று கட்டிடங்களாகக்காட்சி அளித்துக் கொண்டிருந்தன. சந்து பொந்துகளெல்லாம் சாலைகளாக மாறியிருந்தன. பள்ளிகள் என்ன, மருத்துவமனைகள் என்ன, அடேயப்பா என்ன, மாறுதல்!

கால்கள் முன் நடைபோட, இதயம் பின்னடை போடத் தொடங்கியது.

தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த 'நாச்சிகுளம்' கிராமத்தில்தான் சங்கரம் பிள்ளை, மூன்று தலைமுறையாக வாழ்ந்து வந்தார். மூன்று 'மா'

நிலத்தையே மூலதனமாகக் கொண்ட அவருக்கு, குடும்ப பாரத்தில் மட்டும் குறைச்சல் இல்லே. பெரிய குடும்பம். வசவசவென்று குழந்தைகள், வருமானமோ ரொம்ப குறைச்சல். அந்த பெரிய குடும்பத்தில் மூத்த மகன் மணியன். வீட்டின் பொருளாதாரம் இடம் தராததினுல் எட்டாம் வகுப்போடு படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டு, வேலே தேடும் படலத்தில் இறங்கினுன். எட்டாம் வகுப்பு மட்டுமே படித்திருந்த அந்த இளேஞனுக்கு வேலே கொடுக்க யாரும் காத்துக்கொண்டிருக்கவில்லே. உழைக்க வேண்டும். பாடுபட்டுச் சம்பாதிக்க வேண்டும் என்று ஆர்வம் அந்த இளேஞனுக்கு இருந்தது. ஆனுல் அந்தப் பட்டிக்காட்டில் என்ன வேலே கிடைக்கும்?

அந்தச் சமயத்தில், நாடுகாக்கும் திருப்பணியில் ராணுவத்தில் சேர்ந்து பணியாற்ற சுதந்திர இந்தியாவின் எண்ணற்ற இளங்காளேயர்கள் தேவை என்ற தகவல் மணியனின் காதுகளுக்கு எட்டியது. இயற்கையாகவே தேசம், மக்கள் நலன், சுதந்திர ஆர்வம் உள்ளவன் மணியன். ஆகவே போர் வீரனுக ராணுவத்தில் தன் பெயரையும் ஒன்றுக அவன் பதிவு செய்துகொண்டதில் வியப்பொன்றுமில்லே. இரண்டாண்டுகளுக்கு முன்னுல் நயவஞ்சக சீனுவின் அக்ரமத் தாக்குதலே எதிர்த்து, தாய்த் திரு நாட்டின் எல்லேப் போரிலே வீர சாகசங்கள் பல புரிந்து கடமை வீரனுக, அன்று ஊரைவிட்டுப் போனவன் இன்றுதான் ரஜா பெற்று சொந்த ஊர் திரும்புகிறுன்.

''யாரு....மணியனு? வாப்பா !

''என்னப்பா ! என்னேத் தெரியலே, நான்தான் தங்கவேலு. .. என்கிட்டேதானப்பா நீ அஞ்சாங் கிளாஸ் வரையிலே படிச்சே....? சவுக்கியமா? ஆளே மாறிட்டியே.. நீ ராணுவத்திலேருந்து லீவு வாங்கிக்கொண்டு வர்றதா உங்கப்ப சொன்னுரு.. இல்லாட்டி உன்னே அடையாளம் கூட தெரியாது. மணியா.... நீ ரொம்ப கெட்டிக்காரம்பா.... நம்ம நாட்டையே காக்கிற பணியிலே இறங்கிட்டே! உன்னுலே இந்த ஊருக்கே பெருமை தம்பி!''

## கரும்பு சாகுபடியில் சாதனே

1963–64-ல் கரும்பு சாகுபடி சம்பந்தமாக, பிராந்திய ரீதியில் ஏற்பாடு செய்யப்பட்ட போட்டிகளில், தென்பிராந்தியத்திற்குள் மகா ராஷ்டிர மாநிலம் அதிக பரிசுகளேப் பெற்றது. எனவே ஒரு விசேஷ பரிசாக, அந்த மாநிலத்திற்கு வெள்ளி சுழல் கேடயம் வழங்கப்பட்டது. பூன மாவட்டத்தைச் சேர்ந்த திரு பௌதாஸ் வாமனராவ் ஜகதிப் என்பவர் 10 ஏக்கர் நிலத்தில் 365.53 டன் கரும்பு சாகுபடி செய்து, ரூ. 2,500 முதல் பரிசையும், ஒரு தங்கப் பதக்கத்தையும் பெற்றுர்.

மணியனுக்கு எதுவுமே பேசத் தோன்றவில்லே ஆசிரியப் பெருமகனுரின் அன்புப் பாராட்டு, அவனே சிறிது நேரம் திக்குமுக்காட வைத்துவிட்டது.

'என்ன தம்பி பேசமாட்டேங்கறே. உங்கப்பா சிங்காரம் பிள்ளே இருக்காரே, ரொம்ப கொடுத்து வச்சவரு. உன்போன்ற நன்மகனேப் பெற்றதிலே அவருக்குத்தான் எவ்வளவு பெருமை தெரியுமா?'

'ரொம்ப நன்றி சார்.... நீங்க என்னமோ சொல்றிங்க. அத்தனேக்கும் நான் தகுதி உடையவனு என்பது சந்தேகம். அதுபோகட்டும். எங்க அப்பா சௌக்கியமா இருக்காரில்ல?

''ஓ.... உங்க அப்பா, நீ போன ஆரம்பத்திலே ரொம்ப கஷ்டப்பட்டாரு. ஆனுல் மனுசனுக்கு கஷ்டம் கொஞ்ச நாளேக்கு, சுகம் கொஞ்ச நாளேக்கு .... இல்லேயா? உங்க நிலம் இருக்கே, அந்த மூணு 'மா' நிலம் அப்ப மோசம் பண்ணிடுச்சி. ஆனுல் இன்னேக்கு அந்த நிலம்தான் இந்த மாவட்டத்திலேயே அதிகமா விளேஞ்சி அரசாங்கப் பரிசை வாங்கித் தந்திருக்குன்னு பார்த்துக் கொள்ளேன். சரி, சரி.... சங்கரம் பிள்ளேக்கூட பின்னத்தூர் விவசாய பயிற்சி முகாமுக்கு போயிட்டு திரும்பிக்கிட்டிருப்பாரு. நீ போப்பா .... நான் பிறகு வந்து பார்க்கிறேன்,''

ஆசிரியர் காலே எட்டிப்போட்டார். மணியனின் கால்கள் நெடுநேர சிந்தனேக்குப்பின் மீண்டும் நடைபோட்டன. இப்போது அந்த ஊர் மட்டும் மாறவில்லே. ஒவ்வொரு குடும்பமும் மாறி இருந்தது. கிராமத்தில் எங்கு பார்த்தாலும் ஒரே சுறுசுறுப்பு, ஒரே மறுமலர்ச்சி. புது வாழ்வின் தொடக்கச் சாயல்கள், வளமான வாழ்வுப் பாதையை நோக்கி கிராமமே ஏறுநடை போடுகின்ற எக்காளக் காட்சி.

இந்த மாற்றம், இந்த வளர்ச்சி திடீரென எப்படி வந்தது? அவனுக்குத் தன் தொண்டை விட கிராமத்தில் நிகழ்ந்துள்ள இச் சாதனே பெரிதாகக் காட்சி அளித்தது. இத்தனே நாட்கள் நாட்டையே தாங்கிக்கொண்டிருப்பதாக எண்ணி இறுமாந்துக் கொண்டிருந்த அவனுக்கு, இந்த கிராமம் அறை கூவல் விட்டுக்கொண்டிருந்தது.

''வா, மணி....''

நிமிர்ந்து பார்த்தான். அவன் தந்தையும் அவனது இரு தம்பிகளும் ஆவலுடன் எதிரே வந்துகொண்டிருந்தனர். அப்படியே தம்பிமார்களேத் தழுவிக் கொண்டான்.

'இந்த வண்டி எப்போதுமே தாமதமாகத்தான் வரும். இண்ணேக்கு என்னமோ சரியா வந்திடுத்துஅதனுல்தான் நிலேயத்துக்கே என்னுல் வரமுடியலே', —தந்தையின் சமாதானம், இதை அவனு கேட்டான்.

"சரியப்பா, வீட்டுக்குப் போகலாம்," பத்தாண்டுகளுக்குப் பின் தன் வீட்டில் காலடி வைத்தான் மணி. மகிழ்ச்சி பொங்கி வழிந்தது.

"என்ன தம்பி, வாப்பா......எல்லாமே மாறிப்போச்சேன்னு பார்க்கிறியா?....காலம் மாறிப்போச்சில்லே?" அன்னையின் அன்புக்குரல்!

நீண்ட நாட்களுக்குப்பிறகு தாயின் குரலைக் கேட்கிருன்; ஒரு காலத்தில் அந்த வீடு அவனுக்கு வேம்பாகக் கசந்தது. இப்போது தேனுக மாறி சுவைத்தது. பிரிந்து கூடும்போதுதான் எவ்வளவு பெரிய மாற்றங்கள் தோன்றுகின்றன!

எதிரே கொட்டகையைப் பார்த்தான். நெடு நேரம் தாயைக்காணுது தவித்த கன்று இப்போது கண்டுவிட்ட களிப்பில் ஓடோடி வந்து பசுவின் மடியிலே முட்டியது; முட்டியவலி பசுவுக்குத் தோன்றியதாகத் தெரியவில்லை. கோபம் கொள்வதற்குப், பதில் அது பாலைக் கொடுத்துக் கொண்டிருந்தது. துன்பத்திலேதான் இன்பமே அடங்கிக் கிடக்கிறது.

வெளியில் யாரோ வரும் காலடி ஓசை கேட்டது. சங்கரம் பிள்ளையும், "வாங்க தம்பி வாங்க...." என்று எதிரே சென்று வந்தவரை அழைத்து வந்தார்.

உள்ளேவந்து அமர்ந்த அவரை மணியன் இரண்டு மூன்று முறை பார்த்தான். எங்கேயோ பார்த்த ஞாபகம்.

ஒரு விஞடிதான்!

"அடடே..நீ 'நல்லமுத்து' இல்லே?....நாம் இரண்டு பேரும் தானேப்பா ஒண்ணு படிச்சோம்." மணி உரத்த குரலில் கூவி அவரை தழுவிக் கொண்டான். நீண்ட நாட்களுக்குப்பிறகு, சந்தித்த மகிழ்ச்சி நண்பர்கள் இருவரையும் ஊமையாக்கி விட்டது.

"இந்த தம்பியை முன்னமே தெரியுமா, மணி? இந்த தம்பிதான் நமக்கு கைகொடுத்த தெய்வம்! குடும்பக்கட்டுப்பாடுமுறை எல்லாம் எடுத்துச் சொல்லி, விவசாயத்துக்குப் பணம், விதை, உரம் எல்லாம் கொடுத்து உதவுறாரப்பா. தீவிர சாகுபடி திட்டம்னு சொல்லி, நம்ம நிலத்தை நல்லா விளைய வச்சது இந்த தம்பிதாம்பா....நமக்கு மட்டுமில்லே, இந்த ஊருக்கே செய்யுது. அதெல்லாம் ஏன்? முன்னேயிருந்த ஊர் இப்ப எவ்வளவு மாறி இருக்குனு பார்த்ததில்லே....இதெல்லாம் தம்பியோட ஓய்வில்லாத வேலையின் பயன்?" தந்தை சங்கரம் பிள்ளை மணியனுச்குத் தெரிந்த வரை தெரியாதவகையில் அறிமுகப்படுத்திஞர்.

"நான் என்னங்க செய்யிறேன்? எல்லாம் அரசாங்கம் செய்யுது. நான் அதை வாங்கிக் கொடுக்கிறேன். அவ்வளவு தான்!" தன்னெதிரே உள்ள கிராமநல ஊழியராகப் பணியாற்றும் தன் நல்லமுத்துவை மணியன் கூர்ந்து கவனித்தான். தன்னைவிட தொண்டுள்ளம் கொண்ட தன் நண்பன் தன்னைவிட மேம்பாடான நிலையில் இருப்பதாக அவனுக்குத் தெரிந்தது.

"நல்லமுத்து, உன் தொண்டு மிகப்பெரிதப்பா.. உண்மையில் நாட்டின் உயிர் நாடியான கிராமங்களின் முன்னேற்றம்தான் நாட்டின் முன்னேற்றம். அந்தவகையில் பணியாற்றி வரும் நீதான் எல்லோரிலும் உயர்ந்தவன்" மணி பேச வில்லை. அவன் இதயம் பேசியது.

"மழையில்லாவிட்டால், தண்ணீர் எப்படியப்பா கிடைக்கும்?..புறத்திலிருந்து நீ நாட்டைக்காக்காவிட்டால் அகத்திலிருந்து நாங்கள் எதையப்பா ஆக்க முடியும்? உன் உயர்வு நாட்டுயர்வு?" என உணர்ச்சி வயப்பட்டு கூறிஞர் நல்லமுத்து.

"நான் ஒத்துக்கொள்ளமாட்டேன், தண்ணீர் இல்லாவிட்டால் மேகம் எப்படி தோன்றும்? மழை எப்படி பெய்யும்? நீங்களெல்லாம் அகத்திலிருந்து ஆதரவு தராவிட்டால் புறத்திலிருந்து நாங்கள் எப்படி போரிட முடியும்? உங்கள் உயர்வுதான் எங்கள் உயர்வு...." மணி, ஆணித்தரமாக நண்பனின் வாதத்தை மறுத்தான்.

படித்த பிள்ளைகள் இரண்டும் செய்யும் அறிவுப் போரை மற்றவர்கள் ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தனர்.

"படித்தவர்களிடம் நடக்கிற போராட்டமே இப்படித்தான்!. முக்கிய விஷயத்தை விட்டுவிடுவீங்க. இரண்டு கண்களிலே எதப்பா உயர்வு? இரண்டும் தானே வேண்டும். நீங்கரெண்டு பேருமே நாட்டின் இரண்டு கண்கள் போல! அதில் உயர்வு தாழ்வென்ன?"

"தம்பிகளா சாப்பிட வாங்க! பலகாரம் ஆறிப் போவுது" என்ற அன்னையில் அன்புக்குரல் உள்ளேயிருந்து கேட்டது. இரு நண்பர்களும் சாப்பாட்டை ஒரு கை பார்க்க எழுந்தனர்.

---

### லஞ்ச ஒழிப்பில் பஞ்சாயத்து உதவி

கிராமப் புறங்களில் லஞ்சம், பணம் கையாடல், பதுக்கல், கள்ள வியாபாரம் போன்ற ஊழல்களைக் கண்டு பிடிப்பதிலும் தடுப்பதிலும் பஞ்சாயத்துகள், பஞ்சாயத்து யூனியன் போன்ற அமைப்புகள், மாநில அரசாங்கத்திற்கு உதவும் ஏற்பாடு ஒன்று ராஜஸ்தானில் ஆரம்பமாகியிருக்கிறது. ஊழல்களைத் தடுப்பதில் இந்த அமைப்புகள் தீவிர ஒத்துழைப்பு தரும்படி, மாநில அரசாங்கம் கேட்டுக் கொண்டிருக்கிறது. ஊழல் விவகாரங்களைப் பற்றி மாவட்ட கலெக்டருக்கோ, மாநில அரசாங்கத்திற்கோ தகவல் அனுப்பும்படி பஞ்சாயத்து அமைப்பின் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

# படிப்படியாக வளர்ந்த பஞ்சாயத்து ஆட்சி

வான் முட்ட உயர்ந்த இமய மலைகளைப் பகைப் புலனாகக் கொண்ட லாஹூல், ஸ்பிதி ஆகிய பகுதிகளில் பஞ்சாயத்து ஆட்சி ஏற்பட்டதே ஒரு தனிக் கதை இதற்குப் பின்னால், ஒரு வரலாறே இருக்கிறது எனலாம்.

பஞ்சாப்பைச் சேர்ந்த இப்பிரதேசங்கள், நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்னால், அரசாங் கத்தின் போதிய கவனிப்புக்கு உள்ளாகவில்லை. மக்கள் நல அபிவிருத்தி விஷயத்தில் இப் பகுதிகள் புறக்கணிக்கப்பட்டிருந்தன என்றே கொள்ள வேண்டும். அங்கு, சரியான நிர்வாகம்கூட இல்லாமல் இருந்தது. 1940-க்குப் பிறகுதான் தாசில்தார் ஒருவர் நியமிக்கப்பட்டார்; கீலாங்கில் போலீஸ் நிலையம் ஒன்றும் ஏற்படுத்தப் பட்டது. அதற்குமுன், இங்கு நிர்வாகம் என்பது 'வாஸிர்' பதவி மூலம் நடைபெற்று வந்தது. வாஸிருக்கு நிறைய அதிகாரம் உண்டு. 'குலு' உதவி கமிஷனரின் ஒரு பொதுவான மேற்பார்வை தவிர, வாஸிருக்கு, நிர்வாக விஷயங்களில், சுதந்திரம் உண்டு. ஆனால் அப்போது நிர்வாகம் என்பது சட்ட ஒழுங்கு அமைதியை நிலைநாட்டுவது, நிலவரி வசூல், காடுகள் பராமரிப்பு ஆகியவை பற்றியதே ஆகும்.

இவ்வாறு இருந்த லாஹூலில், இன்று ஒழுங்கான முறையில் அமைக்கப்பட்ட 14 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. இப் பஞ்சாயத்துக்களுக்கான உறுப்பினர்கள் கால முறைப்படி மக்களால் தேர்ந் தெடுக்கப்படுகின்றனர். சட்ட சபையில் நிறை வேற்றப்பட்ட ஒரு சட்டத்தின்படி, கிராமப் பஞ்சாயத்துக்கள் என்பவை கிராம அபிவிருத்திப் பணிகள், ஊரின் அடிப்படைத் தேவைகளான குடிதண்ணீர், சாக்கடை, விளக்கு வசதி போன்ற வற்றை ஏற்படுத்தித்தருதல், மற்றும் இதர நிர்வாக, நீதி பரிபாலன அலுவல்களை மேற் கொள்ளும். இத்தகைய கிராமப் பஞ்சாயத்துக்கள் —13, லாஹூல் பகுதியில், 1944-ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் அமைக்கப்பட்டன. அதே பகுதியில் 14-வது பஞ்சாயத்து 1945-ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் உருவாயிற்று. 1961-ம் ஆண்டில் நடைபெற்ற பஞ்சாயத்துத் தேர்தலின் போது, ஜஹிமான் என்ற கிராமப் பஞ்சாயத்து சற்றுப் பெரியதாக இருந்ததால், அது இரண் டாகப் பிரிக்கப்பட்டு மூபிங் என்ற 15-வது பஞ்சாயத்து ஏற்படுத்தப்பட்டது.

1960-ம் ஆண்டில் திருத்தப்பட்ட பஞ்சாப் கிராமப் பஞ்சாயத்துச் சட்டத்தின்படி, 500-க்குக் குறையாத மக்கள் தொகை இல்லாத ஒவ்வொரு கிராமத்திலும் பஞ்சாயத்து எற்படுத்த வேண்டும். எனவே, சிறிய குக்கிராமங்களாயிருந்தால், மக்கள் தொகை 500 வரும்படியாக இரண்டு மூன்று கிராமங்களை ஒன்று சேர்த்து பஞ்சாயத்து அமைக்கப்படும். ஆனால் அந்த முறைகூட, லாஹூல் பகுதியில் ஒத்துவரவில்லை. இப் பகுதியில் மிகக் குறைந்த எண்ணிக்கையுள்ள மக்கள் வாழ்வதால், அவர்களும் இங்கு சிலரும் அங்கு சிலருமாகச் சிதறி இருப்பதால், பஞ்சாயத்து ஏற்படுத்த 500 மக்கள் இருக்க வேண்டும் என்ற விதி தளர்த்தப் பட்டது.

### பங்கு ஏற்க பெண்கள் தயக்கம்

கிராமப் பஞ்சாயத்துக்களில் ஷெடூல்ட் வகுப் பாருக்கும், பெண்களுக்கும் நிச்சயமாக இடம் கிடைக்கும்படி பஞ்சாயத்து சட்டத்தில் வகை செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் லாஹூல் பகுதி பெண்கள், தேர்தலில் பங்கு கொள்ள முன்வர வில்லை. தேர்தல் இல்லாமலே உறுப்பினர் பதவி வழங்கப்பட்டாலும் அதை ஏற்கவும் பெண்கள் விருப்பப்படவில்லை, எனினும் அவர்களை இவ் வகையில் ஊக்குவிக்க முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

பஞ்சாயத்துக்களுக்கு வரிகள் மூலமும், அரசாங் கத் துறைகளிடமிருந்தும் கிடைக்கும் மானியம் மூலமும், நன்கொடைகள் மூலமும் வருமானம்

கிடைக்கிறது. ஆனுல் மக்கள் தொகை குறைவாக இருப்பதால் வரி வருமானம் குறைவாகவே இருக்கும். எனினும் ஆண்டுக்கு ஆண்டு வருமானம் படிப்படியாக அதிகரித்து வருகிறது. இப் பஞ்சாயத்துக்களின் மொத்த வருமானம் 1950–51-ல் ரூ. 4,796 ஆக இருந்தது, 1961–62-ல் ரூ. 2,18,883 ஆக உயர்ந்தது.

இவ்வாறு வருமானம் சுமார் ஐந்து மடங்காகப் பெருகியிருப்பதால், பஞ்சாயத்துக்களின் நிதி நிலைமை பலம் பெற்று, பல்வேறு அபிவிருத்திப் பணிகளை இதுபோல் செய்ய சாத்தியமாகி இருக்கிறது. சாலை வசதி, நீர்ப்பாசன—விவசாய அபிவிருத்திகள் மற்றும் கல்வி, சுகாதாரம், சமூகக் கல்வி, கூட்டுறவு, கால்நடை பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### தேர்தலில் மக்கள் ஆர்வம் குறைவு

பஞ்சாயத்துத் தேர்தல்களில் மக்கள் ஆர்வம் காட்டுவது என்பது, இதுவரை காணப்படவில்லை. இதுவரை நடந்த தேர்தல்களில் உறுப்பினர்கள் எல்லாம் போட்டியின்றி, ஏகமனதாகவே தேர்ந்தெடுக்கப்பட்டனர். இந்த ஆர்வமற்றப் போக்குக்குக் காரணங்கள் பல. பஞ்சாயத்து முறை மூலம், கிராமங்களில் ஸ்தல சுய ஆட்சி அதிகாரம் தங்களுக்குக் கிடைக்கிறது என்பதை இன்னும் அவர்களால் உணரக்கூடவில்லை. மேலும் வருடத்தில் பாதி நாட்கள் கடும்பனி இருப்பதால் பஞ்சாயத்து போன்ற பொது அலுவல்களில் கவனம் செலுத்த அவர்களுக்குப் போதிய அவகாசம் இருப்பதில்லை. அதோடு, தேசிய விஸ்தரிப்புத் திட்டங்கள் இங்கு அமுல் செய்யப்பட்டு, மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ், அபிவிருத்திப் பணிகளுக்கு அதிக செலவு செய்ய வழிவகை ஏற்பட்டவரை, கிராமப் பஞ்சாயத்துக்கள், தங்கள் சொற்ப வருமானத்தைக் கொண்டு உருப்படியான காரியங்களைச் செய்ய முடியாமல் இருந்தது. ஆனுல், கடந்த சில ஆண்டுகளாக அபிருத்திப் பணிகள் இப்பகுதியில் நடைபெற்று வருவதால், இவற்றைத் தங்களுக்கு ஏற்ற வகையில் செவ்வனே நிறைவேற்றிக்கொள்ள பஞ்சாயத்து தான் தக்கச் சாதனம் என்பதை மக்கள் கொஞ்சம் கொஞ்சமாக உணரத் தொடங்கியுள்ளனர்.

### ஆண்டில் எட்டு மாதம் பனிக் கொடுமை

பஞ்சாப் மாநிலத்தின் இதர மாவட்டங்களைப் போன்று இந்த மாவட்டத்தில் பஞ்சாயத்து ஆட்சி முறையைப் பூரணமான அமுல் செய்ய இயலவில்லை. இதற்குச் சில காரணங்கள் உள்ளன. அவற்றுள் முக்கியமான ஒன்று, இந்த மாவட்டத்தின் இரண்டு டிவிஷன்களான லாஹுலும் ஸ்பிதியும் ஒன்றிலிருந்து ஒன்று மிகவும் விலகியிருக்கின்றன. வருடத்தில் எட்டு மாதங்கள் இவ்விரு பகுதிகளுக்கும் தொடர்பு இல்லாதபடி பனியின் கொடுமை ஆட்சிசெலுத்துகிறது. இந்த நிலைமையில் ஜில்லா பரிஷத் அமைத்தாலும்கூட, லாஹுல், ஸ்பிதியின் பிரதிநிதிகள் ஆண்டுக்கு ஒருமுறைக்கு அதிகமாகக் கூடுவது சாத்தியமாயிராது. ஆனுல், ஜில்லா பரிஷத் இல்லாத குறையைப் போக்கும் ஒரு மாற்று ஏற்பாடாக, பஞ்சாப் மலைவாசி மக்கள் ஆலோசனை கவுன்சில் இருக்கிறது. இது சட்ட பூர்வமாக அமைக்கப்பட்ட ஒரு குழு. இக் குழு ஆண்டுக்கு இரண்டு முறை கூடுகிறது, இக் கூட்டங்களுக்கு, வழக்கமாக முதன் மந்திரியே தலைமை வகிக்கிறுர். திருத்தப்பட்ட குழுத் தேர்தல் விதிகளின்படி லாஹுல், ஸ்பிதி பஞ்சாயத்து ஒவ்வொன்றிலிருந்தும் ஒரு பிரதிநிதி இக் குழுவில் அங்கம் வகிக்கிறுர். ஆகையால் இப் பகுதிகள் சம்பந்தமான தேவைகளை எடுத்துக் கூறவும், நிறைவேற்றிக்கொள்ளவும் மாநில மட்டத்தில் தக்க வாய்ப்பு இருக்கிறது.

இவ்வாறு, இமாலய அடிவாரப் பகுதியில், சரியான நிர்வாகம்கூட இல்லாமல் அபிவிருத்தி வேலைகள் எதுவுமே மேற்கொள்ளப்படாமல் இருந்த நிலைமை மாறி, இன்று சீரான பஞ்சாயத்து ஆட்சி முறை ஏற்படவும் மக்கள் தங்கள் தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்ளவுமான நல்ல நிலைமை உருவாகியிருக்கிறது.

---

## அடுத்த இதழில்

திருவெறும்பூர் உயர் அழுத்தக் கொதிகலன் தொழிற்சாலை (High Pressure Boiler Plant) பற்றிய சிறப்புக் கட்டுரை.

"அறியாமை இருள் அகல"—
கல்வி வளர்ச்சியைக் குறிக்கும் ஆய்வுக் கட்டுரை.

"வானமும் அழுததோ"—
திரு காந்தி சீடன் எழுதியது, சிறுகதை.

இவற்ருேடு

திரு சோம மகாதேவன் எழுதும்

"எல்லையில் நாம்"

ஓரங்க நாடகம் ஆரம்பமாகிறது.

# மரத்தடி பேச்சால் எழுந்த மன்றம்

**தமிழ் நாட்டு கிராமங்களில் சர்வ சாதாரணமான காட்சி ஒன்று உண்டு. அரச மரமும் வேப்ப மரமும் அருகருகே சேர்ந்து வளர்ந்திருக்க, அதைச் சுற்றி மேடை அமைந்திருக்கும். அந்த மேடையில், மரத்து நிழலில் அமர்ந்து சிலர் குதூகலமாகப் பேசிக்கொண்டிருப்பர். சில சமயம் பேச்சு வளர்ந்து வாய்ச் சண்டையும் ஏற்படலாம். ஆனால் இத்தகைய மரத்தடி பேச்சு மூலம் 'உருவான' காரியங்களும் நடக்கும் என்பதற்கு உதாரணம் இதோ :**

கோவை மாவட்டம், பிலிச்சி பஞ்சாயத்தைச் சேர்ந்த ஒரு குக்கிராமம் பெட்டதாபுரம். அங்கிருந்து 6 மைல் தூரத்தில் சமூகக் கல்வி அதிகாரிகளுக்கான பயிற்சி நிலையம் ஒன்று இருக்கிறது. அந்தப் பயிற்சியாளர்களின் நேரடிப் பயிற்சிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள கிராமங்களில் பெட்டதாபுரமும் ஒன்று.

கிராம மக்களுடன் பழகி, அவர்களது நிலைமைகளை அறிந்துகொள்வதற்காக பயிற்சி நிலயத்தைச் சேர்ந்த திரு சேதுராமன், பெட்டதாபுரத்திற்கு அடிக்கடி வந்துகொண்டிருந்தார். மரத்தடி மேடையொன்று பெட்டதாபுரத்திலும் இருக்கிறது. அங்கு கூடுபவர்களிடம் அவர் பேச்சு கொடுத்துப் பார்த்தார். ஆனால் அவருடன் கிராமவாசிகள் கலகலப்பாகப் பேசவில்லை. ஏதோ ஒரு கூச்சத்துடன் ஒதுங்கியே இருந்தார்கள். நாள் ஆக, ஆக, சேதுராமனிடம் கிராமவாசிகள் நன்குப் பழக ஆரம்பித்துத் தங்கள் விவகாரங்கள், பிரச்னைகளைச் சொல்லத் தொடங்கினர். ஆனால் இந்தப் பேச்சுக்களில் கிராமத்து இளைஞர்கள் அவ்வளவாக அக்கறை காட்டவில்லை, பெட்டதாபுரத்தில் மொத்தம் சுமார் 40 இளைஞர்கள் இருந்தார்கள். அவர்களில் பாதிபேர், பக்கத்திலுள்ள தொழிற்சாலை ஒன்றில் வேலை செய்பவர்கள். மற்றவர்கள் சிறு சிறு நிலம் வைத்துக்கொண்டு விவசாயம் செய்பவர்கள். இவர்கள் அனைவருக்கும் பொழுதுபோக்கு சினிமா பார்ப்பதுதான்.

### அசட்டை செய்த இளைஞர்கள் அக்கறை காட்டினர்

நாட்கள் செல்லச் செல்ல ஒரு 10 இளைஞர்கள் திரு சேதுராமனிடம் சிநேகமாகப் பழக ஆரம்பித்தனர். பல விஷயங்கள் குறித்து உற்சாகமாக விவாதிக்கவும் செய்தனர். ஒரு நாள் பயிற்சி நிலயத்திலிருந்து நான்கு பேர் வந்திருந்தனர். அவர்கள் இந்த இளைஞர்களுடன் பேசிக்கொண்டிருக்கும்போது, மற்ற பல கிராமங்களில் இளைஞர் மன்றம் இருப்பது பற்றியும் அதனால் பல நன்மைகள் விளைவது பற்றியும் எடுத்துரைக்கப்பட்டது. அதைக் கேட்ட ஒரு இளைஞர் "ஏன், நம் ஊரிலும் ஒன்று ஏற்படுத்தக்கூடாது?" என்று, ஆவலுடன் குரல் கொடுத்தார். "ஏற்படுத்தி என்ன செய்வதாம்?" என்று அடுத்திருந்தவர் கேட்டார். அதற்கு அந்த இளைஞர் "அதைப் பிறகு பார்ப்போம். இளைஞர்கள் எல்லாம் முதலில் கூடிப்பேசுவோம். பேசினால்தான் யோசனை பிறக்கும்," என்றார்.

அதன்படி, அடுத்த ஞாயிறன்று கிராம இளைஞர்கள் கூட்டம் நடந்தது, எட்டு இளைஞர்கள் மட்டுமே வந்திருந்தனர். எனினும் இளைஞர் மன்றம் அமைப்பதென்று முடிவு செய்யப்பட்டது. அடுத்த ஞாயிறு, மன்றத்தின் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். உறுப்பினர்கள் அதிக அளவில் சேராததும் ஒருவகையில் நல்லதுதான் என்றும், அதிகமான பேர் இருந்தால் மன்ற வேலைகள் சரிவர நடைபெறாது என்றும் கருத்து தெரிவிக்கப்பட்டது.

மன்றத்தின் அடுத்த கூட்டத்தில், கிராம பொதுக் கட்டிடத்திற்கு மின்சார இணைப்பு செய்யவேண்டும் என்றும், வானொலி பெட்டி வைக்கவேண்டும் என்றும் யோசனை கூறப்பட்டது. இந்த யோசனை பஞ்சாயத்து தலைவரிடம் தெரிவிக்கப்பட்டதற்கு இவற்றைச் செய்ய கொஞ்ச காலம் ஆகும் என்று சொன்னார். ஆனால் சமூகக் கல்வி நிலயம் இக் கிராமத்திற்கு வரவேண்டும் என்ற யோசனையை மட்டும் தலைவர் உடனே ஆமோதித்தார். சில மாதங்களாகியும், இவை எதுவும் நடைபெறவில்லை. ஆகையால் இளைஞர் மன்ற உறுப்பினர்கள், தங்களால் இயன்றதைச் செய்ய நினைத்து, தினசரி பத்திரிகைகள் இரண்டொன்றுக்குச் சந்தா செலுத்தி, பத்திரிகைகள் வரவழைத்து படிக்கத் தொடங்கினர்.

### ஓர் ஆண்டில் குறிப்பிடத்தக்க பணி

அதன் பிறகு ஓராண்டு காலத்தில், பெட்டதாபுரம் இளைஞர் மன்றம் குறிப்பிடத்தக்க பணிகளைச் செய்திருக்கிறது. சமூகக் கல்வி அதிகாரிகள் பயிற்சி நிலயம் ஏற்பாடு செய்த இளைஞர்கள் அணி, பொது சுகாதார அரங்கு, முதலியவற்றில் மன்ற உறுப்பினர்கள் பங்கு கொண்டனர். கலை, கலாச்சார நிகழ்ச்சிகளில் ஆர்வம் காட்டிவரும் அவர்கள் தாங்கனியாகாவிலிருந்து வந்திருந்த சமுதாய நல அபிவிருத்தி அதிகாரிகள் முன்பு, கலை நிகழ்ச்சி ஒன்றை சிறப்புற நடத்திக் காட்டினர். சில சிரமதான வேலைகளையும் சிறிய அளவில் மேற்கொண்டு செய்துள்ளனர். வீடுகளில் காய் கறித்தோட்டம் போடுவது சம்பந்தமாகப் போட்டி ஒன்று நடத்தி, மன்றம் பரிசு வழங்கியது.

கல்வியறிவு இல்லாத இளைஞர்களுக்காக, இரவு பள்ளி ஒன்றை நடத்த இளைஞர் மன்றம் உத்தேசித்திருக்கிறது. மன்ற உறுப்பினர் ஒவ்வொருவரும் தங்கள் நிலத்தில் கலவை எருக்குழி ஒன்றை தோண்ட முடிவு செய்துள்ளனர்.

பெட்டதாபுரம் இளைஞர்கள், தங்கள் மன்றத்தின் மூலம் மேலும் பல பணிகளில் ஈடுபடும் உறுதியோடும் உற்சாகத்துடனும் உள்ளனர்.

# பஞ்சாயத்தின் வளர்ப்புப் பிள்ளை

நாட்டிலுள்ள எத்தனையோ சிறுவர்களில், பகவான்சிங்கும் ஒருவன். அவன் ஒன்றும் அதிசயப் பிறவியல்ல. ஆனால் அவனுக்கு நேரிட்டுள்ள வாழ்க்கை முறை நூதனமானது.

மைசூர் மாநிலம், குல்பர்கா மாவட்டத்தைச் சேர்ந்த நரோனு கிராமத்தில் ராம்சிங் என்பவர் வசித்து வந்தார். அவருக்கு மகனாகப் பிறந்தவன் தான் பகவான்சிங். அவன், மூன்று வயதுக் குழந்தையாக இருக்கும்போதே அவனது தாய் இறந்துவிட்டாள். இந்நிலையில் குழந்தையைச் சீராக வளர்க்க, தந்தை ராம்சிங் அரும்பாடு பட்டார். தாய் இல்லாத குறை, குழந்தைக்குத் தெரியாதபடி எல்லா வசதிகளும் செய்து வந்தார். இவ்வளவு சீரும் செல்வமுமாக வளர்த்து வந்ததில் குழந்தை பகவான் சிங், ஓடியாடி விளையாடும் பாலகனாக, நல்ல உடற்கட்டு உள்ள சிறுவனாக வளர்ந்தான்.

ஆனால் உடல் வளர்ச்சிக்கு ஏற்ற மன வளர்ச்சி, புத்திகூர்மை பையனிடம் தென்படவில்லை. எனினும் பெற்ற மனம் கேட்கிறதா? பையன் 'மௌடீக'மாக இருக்கிறானே என்று சும்மா விட்டுவிட முடியுமா? எப்படியாவது கல்வி புகட்டி, தன் மகனையும் ஒரு மனிதனாக உலகில் உலவ விட ஆசைப்பட்டார், தந்தை. ஆகையால் பகவான் சிங்கைப் பள்ளியில் சேர்த்தார். ஆசிரியர்களும் முயற்சித்துப் பார்த்தனர், புண்ணியமில்லை. படிப்புக்கும் தனக்கும் ஒத்துவராது என்பதைப் பையன் நிரூபித்துவிட்டான் இனி என்ன செய்வது? மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கென தனி பள்ளிக்கூடம் எதுவும் அந்தக் கிராமத்தில் இல்லை. எனவே பகவான்சிங் பள்ளி செல்வது நின்றது. உண்ணுவதும் உறங்குவதுமாக, வீட்டோடு காலத்தைக் கழித்து வந்தான்.

## இந்தப் பிள்ளையை என்ன செய்வது ?

இந்தப் பிள்ளையின் எதிர்காலம் என்னவது என்று மிகவும் கவலையுற்ற ராம்சிங், தன்னால் இயன்ற அளவு பணம் சேமித்து வந்தார். சேமிப்புப் பணம் ரூ. 2,500 ஆக வளர்ந்தபோது, அந்தத் தொகையை நிச்சயமான—நிரந்தரமான வருமானம் வரக்கூடிய ஒரு இனத்தில் முதலீடு செய்து, தன் வகை கெட்ட பிள்ளையின் வாழ்க்கைக்கு ஒரு ஏற்பாடு செய்ய விரும்பினார். இதைப்பற்றி அவர், இரவு பகலாகச் சிந்தித்துக்கொண்டிருந்த நாட்களில், நோய்வாய்ப் பட்டார். நாட்கள் பல ஆயின. நோய் குணம் அடையவில்லை. மாறாக நிலைமை மோசமாகிக் கொண்டிருந்தது. தான் இனி பிழைக்கப் போவதில்லை என எண்ணிய ராம்சிங், கிராமப் பஞ்சாயத்துத் தலைவருக்கும், உறுப்பினர்களுக்கும் சொல்லியனுப்பினார். அவர்களும் வந்து சேர்ந்தார்கள். கண்களில் நீர் மல்க, கரம் குவித்து வணங்கி வரவேற்ற ராம்சிங், தன் படுக்கையருகில் நெருங்கிய பஞ்சாயத்துத் தலைவரின் கைகளைப் பிடித்தபடி ஒரு வேண்டுகோள் விடுத்தார்.

"ஊருக்குத் தந்தை நீங்கள்—இனி என் பையனுக்கு உற்ற தந்தையும் நீங்கள் தான் !......"

நிலைமையைப் புரிந்து கொண்ட தலைவர், "சரி, கவலையை விடுங்கள் ! உங்கள் மகன், இனி எங்கள் மகன் ! ஆமாம், அவன் பஞ்சாயத்தின் வளர்ப்புப் பிள்ளையாக இருப்பான்....போதுமா ;" என்றார்: "போதாது !", சூழ்ந்திருந்தோர் திகைப்புக்கிடையே, ராம்சிங் தொடர்ந்தார்," இன்னொரு பாரத்தையும் உங்களுக்குத் தரவிருக்கிறேன். என்னிடம் ரூ. 2,500 பணம் இருக்கிறது. அதைப் பத்திரமான வகையில் பயன்படுத்தி, அதில் வரும் வருமானத்தை—ஏழைப் பிள்ளைகளுக்கு விடுதி நடத்துகிறீர்கள், அல்லவா—அதன் செலவுக்கு உபயோகித்துக்கொள்ளவேண்டும் என்பது என் ஆசை. என் பையனை நீங்கள் காப்பாற்றுவதால், அதற்கு இது ஈடு அல்ல—ஈடு ஆக முடியாது. அது வேறு, இது வேறு. ஆனால் இரண்டும் பாரந்தான். ஏற்றுக் கொள்வீர்களா ?"

"செய்கிறோம் !" என்று ஒரே குரலில், பஞ்சாயத்துத் தலைவரும், உறுப்பினர்களும் உறுதிகூறினர்.

மன நிம்மதி அடைந்த ராம்சிங் சில நாட்களில் உயிர் நீத்தார்.

## மற்றவர்களுக்கு உணவளிக்கும் அனாதை !

பையன் பகவான் சிங், ஏழைகள் விடுதிக்குக் குடியேறினான். விடுதியில் இருந்த 40 சிறுவர்களோடு 41-வது சிறுவனாகச் சேர்ந்தான். அவன் இன்று ஏழைப் பிள்ளைகளில் ஒருவன்—அது மட்டுமல்ல, தாய்தந்தையற்ற அனாதை ! ஆனால், அவன் தன் விடுதியைச் சேர்ந்த அனைவருக்கும் ஒரு நாள் உணவளிக்கிறான் !

பகவான்சிங்கின் தந்தை விட்டுச் சென்ற ரூ.2,500 பஞ்சாயத்தின் மூலம், கிராம மக்களுக்குச் சிறுசிறு கடன்களாகத் தரப்படுகிறது. அதில் வட்டியாகக் கிடைக்கும் மாத வருமானம் ரூ. 40-ம் விடுதிக்காக—ஒரு நாள் செலவுக்கு—உபயோகிக்கப்படுகிறது. இந்தக் கணக்கு, அப்பாவி பகவான் சிங்குக்குத் தெரியாதுதான். அதேபோல், பஞ்சாயத்து வளர்ப்புப் பிள்ளை என்ற சிறப்பைத் தான் பெற்றிருப்பதும், அவனுக்குத் தெரியாதுதான்.

# கிராமத் தொழில் வளர்ச்சித் திட்டம்

**நான்குநேரி**

கிராமப் பொருளாதார நிலே, ஒரு புதிர் போன்றது. முழு நேர வேலே இல்லாமல், எண்ணற்ற கிராம மக்கள், நம் நாட்டில் உள்ளனர். வேலே செய்யத் தயாராக இருந்தும், போதுமான வேலே வாய்ப்புக் கிடைப்பதில்லே. கிராமத் தொழில்களுக்கு, திட்டமிட்ட முறையில் புத்துயிரூட்டினுல், கிராமப் பொருளாதார வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுவது நிச்சயம். அத்துடன், கிராமப்புறங்களில் வீணுகும் மனித சக்தியை (Idle Man-Power) திட்டமிட்ட முறையில் பயன் படுத்தவும், வேலேயின்மையைக் குறைக்கவும், இதன் மூலம் வழி பிறக்கும்.

கிராமப் பகுதிகளில் கிடைக்கும் மூலப் பொருட்களேக் கொண்டு, கிராமத் தொழில்கள் நிறுவப்பட வேண்டும். அத்துடன், வேலேயின்மை என்ற பிரச்னேயைத் தீர்த்தால்தான், கிராமப் பொருளாதாரம் செழிக்க முடியும். வீணுகும் மனித சக்தியைப் பயன்படுத்த வேண்டியது மிகவும் அவசியம். இதற்காகத் திட்டமிட்ட முறையில் கிராமத் தொழில்களே நிறுவி, கிராம மக்களுக்கு தொழில் நுட்ப அறிவு கிடைக்குமாறு செய்தல் வேண்டும். இந்தக் காரியங்களே எல்லாம் தக்க முறையில் செயல்படுத்தும் நோக்கத்தோடு, கிராமத் தொழில் வளர்ச்சித் திட்டம் உருவாகியுள்ளது.

பொதுவாக நம் நாட்டில் வேலேயில்லாத் திண்டாட்டம் குறைந்தபாடில்லே. கிராமங்களில் வாழ்க்கை நிலே, உயரவில்லே. எல்லாக் கிராம வாசிகளுக்கும் போதுமான வேலே வாய்ப்புகள் இல்லே. இந்தக் குறைபாடு நீங்க வழி என்ன? கோடிக் கணக்கான ரூபாய் மூலதனத்தில், பிரம்மாண்டமான தொழிற்சாலேகளே ஆரம்பிப்பது ஒன்று தான் வழியா ?

குறிப்பாக, கிராமங்களேப் பொறுத்தவரை, பிழைப்புக்கு வழியில்லாமல், வேலே வாய்ப்புகள் கிடைக்காமல் இருப்பவர்கள் அநேகம் பேர் உள்ளனர். பலர் விவசாயத்தை நம்பி வாழ்கின்றனர். ஒரு சிலர், பரம்பரையான கிராமக் கைத்தொழில்களில் ஈடுபட்டு, ஆனுல் போதிய வருவாய் இல்லாமல் வளம் நிறைந்த வாழ்வு பெற முடியாமல் அவதியுறுகின்றனர்.

எனவே கிராமங்களிலேயே சிறு தொழில்களேப் புதிதாகத் தோற்றுவிப்பதும், ஏற்கனவே உள்ள குடிசைத் தொழில்கள், கைவினேத் தொழில்கள் முதலியவற்றை ஊக்குவிப்பதும், கிராம மக்களின் வாழ்க்கை நிலேயை உயர்த்தத் தக்க சிறந்த வழியாகும்.

இன்றைய நவீன உலகிற்கு ஏற்ப, புதுப்பாணியில் பொருட்களேத் தயாரிக்கவேண்டும். அவற்றிக்குக் கிராக்கி ஏற்படும் அளவுக்கு, உற்பத்தி செய்யும் சக்தியும் இருக்க வேண்டும். அதற்குக் கிராமக் கைவினேஞர்கள், நவீன இயந்திரக் கருவிகளே உபயோகிப்பதும், புதிய முறைகளே அறிவதும், அதற்குரிய தொழில் நுட்பப் பயிற்சியைப் பெறுவதும் அவசியமாகும். அதேபோல், கைவினேஞர்கள் அல்லாத மற்ற சாதாரண மக்களே ஓரளவு பயிற்சி கொடுத்த பிறகு, ஈடுபடுத்தக் கூடிய சிறு ரகத் தொழில்களே, கிராமங்களில் ஆரம்பிக்க வேண்டும்.

பாரத நாடு முழுவதற்குமே, இத்தகைய கிராமத் தொழில் மறுமலர்ச்சிக்கு வழி வகுக்கும் நோக்கத்தோடு, திட்டக் கமிஷன், ஒரு புதிய திட்டம் வகுத்தது. அதன் அடிப்படையில், எல்லா ராஜ்யங்களிலும், இத்தகைய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. நமது மாநிலத்தில், சேலம் மாவட்டத்தில் ஓமலூர் வட்டாரம், திருநெல்வேலி மாவட்டத்தில் நாங்குநேரி வட்டாரம், செங்கற்பட்டு மாநிலத்தில் ஸ்ரீபெரும்புதூர் வட்டாரம் ஆகிய மூன்று பகுதிகள் இந்தப் புதிய பணிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டன.

இம் மூன்று வட்டாரங்களுள் ஒன்முன நாங்குநேரி வட்டாரம், தமிழ் மணங்கமழும் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தது. இலக்கிய வளர்ச்சி, தொழில் வளர்ச்சி ஆகிய இரு துறைகளிலும் ஏறு நடை போடுகிறது திருநெல்வேலி மாவட்டம். முத்தும், முத்தமிழும் கொழிக்கும் பகுதி திருநெல்வேலிச் சீமை. 'வேதம் தமிழ்செய்த மாறன்' பிறந்த ஆழ்வார் திருநகரியும், தமிழ்க் கடவுள் முருகன் நிலவும் திருச்செந்தூரும், அகத்தியர் வாழும் பொதிகைமலே, அழகு பொங்கும் குற்றுலச் சிரருவி, தத்திக் குதித்துத் தளர்நடை பழகும் தண்பொருநை நதி, இவை அத்தனேயும் தன்னகத்தே கொண்டுள்ளது, திருநெல்வேலி மாவட்டம். மகாகவி பாரதியார் தோன்றிய எட்டயபுரம், திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தது,

அடிமையிருளில் பாரதநாடு சிக்கித் தவித்த அக்காலத்திலே, விடுதலே முரசு கொட்டி, சுதேசித் தொழில் வளர்ச்சிக்கு வித்திட்ட 'கப்பலோட்டிய தமிழர்' வ. உ. சிதம்பரனுர் தோன்றியது இம் மாவட்டத்தில்தான். இம்மாவட்டத்தில் உருவாகி வரும் பத்தமடைப் பாய் பாரத நாட்டின் கைத்தொழிலின் மேன்மைக்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டு. முத்துக் குளிக்கும் தொழில், இம்மாவட்

டத்திற்கே உரிய தனிச் சிறப்பு வாய்ந்த தொழி லாகும். தூத்துக்குடி துறைமுகம் இம்மாவட் டத்துத் தொழில் வளர்ச்சிக்கு அடிப்படையாக இயங்குகின்றது. அமல் நடத்தப்பட்டு வரும் தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகத் திட்டம் நிறை வேறியதும், இம்மாவட்டம், தொழில் வளர்ச்சியில், மிகச் சிறந்த மாவட்டங்களில் ஒன்ருகத் திகழ்வது உறுதி.

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள நாங்குநேரி வட்டாரப் பகுதியின் பரப்பு 705 சதுர மைல்கள். இப்பகுதியில் நாங்குநேரி, களக்காடு, இராதா புரம், வள்ளியூர் பஞ்சாயத்து யூனியன்கள் அடங்கி யுள்ளன. இவ்வட்டத்தின் மக்கள் தொகை 3·37 லட்சமாகும். இங்கு கிராம மக்கள், குறைந்த வரு வாய் பெறும் வேலேயில் இருந்தும், வேலேயே இல்லா மல் இருந்தும் வருந்துகின்றனர். இங்கு விளேயும் முக்கிய பொருள்கள் நெல், சோளம், பருத்தி, நிலக் கடலே, எள், மிளகாய், வரகு, முதலியன. ஆண்டுதோறும் சுமார் 40 லட்ச ரூபாய் மதிப் புள்ள நிலவாகை இலே தூத்துக்குடி துறைமுகத்தின் மூலம் ஏற்றுமதி செய்யப் படுகின்றது. வேறு பல மூலிகைகளும், மருந்து சரக்குகளும் ஏற்றுமதி யாக்கப்பட்டு அமெரிக்கா, இங்கிலாந்து, மேற்கு ஜெர்மனி போன்ற நாடுகளில் நல்ல மருந்துக் கலவைகள் ஆக்கப்படுகின்றன. இத்தகைய மூலப் பொருள்களேக் கொண்டு இப்பகுதியில் மருந்துப் பொருட்கள் செய்யும் ஆலே ஒன்றை ஏற்படுத்தும் வாய்ப்பு உள்ளது. அத்துடன் இப்பகுதியிலுள்ள மேற்கு மலேத் தொடரையடுத்த சிற்றூர்களில் முசுக்கொட்டைச்செடி பயிர் செய்து, பட்டுப்பூச்சி வளர்த்து பட்டு உற்பத்தி செய்வதற்கான வாய்ப்பு மிகுதியாக உள்ளது. இப்பகுதியில் கடற்கரை ஊர்களாகிய உவரி, இடிந்தகரை, ஊத்தங்குழி, கூட்டப்புழி என்ற முக்கிய நான்கு இடங்களிலும் பெரும்பகுதி சுரு மீன் பிடிக்கப் படுகிறது. இவ் விடங்களில் தற்சமயம் சுருமீன் ஈரலில் இருந்து எண்ணெய் தயாரிக்கப்பட்டு கள்ளிக்கோட்டையி லுள்ள அரசினர் சுத்திகரிப்பு நிலேயத்திற்கு அனுப்பப்படுகிறது.

## வாய்ப்புள்ள தொழில்கள்.

இங்கே பூமியில் மறைந்து கிடைக்கும் பொருட் கள் சுண்ணும்புக்கல், செம்மணல், 'கிராபைட்' (Graphite) ஆகியவை. இப்பகுதியில் சுமார் 500 குடும்பங்கள் சுண்ணும்புத் தொழிலில் ஈடுபட் டுள்ளன. இத்தொழில் ஒழுங்கற்ற முறையில் நடக்கிறது. வழக்கம்போல் இடைத்தரகர் சுரண் டல் இத்தொழிலிலும் உள்ளது. தயாரிக்கப்படும் முறையும் மிகப் பழைய முறையே. விறகு அதிக மாக விரயமாகிறது. இது தவிர்க்கப்படக்கூடி யது. நவீனக் காளவாய் நிறுவி சுண்ணும்பு உற் பத்தியை சிற்றளவுத் தொழிலாகச் செய்யலாம். சில இடங்களில் இத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்காகக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. நாட்டில் சிமெண்டு பற்ருக்குறை இருப்பதால் சுண்ணும்புத் தொழிலுக்கு இப்பகுதியில் நிரம்ப வாய்ப்புள்ளது.

கடற்கரையில் உள்ள பகுதியில் சுமார் 56 ஆயிரம் டன் செம்மணல் காணப்படுகிறது. இது சென்னேக்கும் பம்பாய்க்கும் ஆண்டுதோறும் 500 டன் அளவு ஏற்றுமதியாகிறது. இச் செம்மணல், சாணைகற்கள், உப்புத்தாள் முதலிய பொருட்கள் தயார் செய்வதற்கு உதவுகிறது.

இப்பகுதியில் கால்நடைகளின் தோல் இம்மாவட் டத்திலுள்ள தோல் பதனிடும் சாலேகளில் சிறிய அளவு பயன்படுத்தப்படுகிறது. எஞ்சியது. திண்டுக்கல் பகுதிக்கு ஏற்றுமதியாகிறது. எலும்பும் கொம்பும் மாவட்டத்திலுள்ள எலும்பு ஆலேகளில் பயன்படுத்தப்படுகின்றன.

புலால் உணவிற்காக, செம்மறி ஆடு வளர்ப் பதற்கு இப்பகுதி மிக்க வசதியுள்ளது. ஏர்வாடியில் தற்சமயம் ஆட்டுத்தோல் பதனிடும் சாலேயுள்ளது. தோல் பதனிடுவோர், கிராமங்களில் சிதறிக் கிடக் கின்றனர். தகுந்த இடத்தில், நல்ல பதனிடும் சாலே ஏற்பட்டால், சிதறிக்கிடக்கும் தொழி லாளர்கள் அருகில் வந்து குடியேறுவார்கள்.

## பனேமரத் தொழில்கள்

"இருந்தாலும், இறந்தாலும் யானே ஆயிரம் பொன் பெறும்" என்பார்கள். யானே போன்றது பனே. இதன் பொருட்களனேத்தும் பயன்படு கின்றன. இப்பகுதியில் பனே மட்டையிலிருந்து தும்பு தயாரிக்கப்பட்டு, தூத்துக்குடி துறைமுகத்தின் மூலம் அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடு களுக்கு ஆண்டுதோறும் சுமார் ரூபாய் அறுபது லட்சம் மதிப்புள்ள தும்பு ஏற்றுமதியாகிறது. ஏற்றுமதியாகும் தும்பின் பெரும்பகுதி, நாங்குநேரி, திருச்செந்தூர் வட்டாரங்களிலுள்ள மரங்களிலிருந்து எடுக்கப்படுவதாகும். தும்பைக் கொண்டு, அந்த நாடுகளில், சுரண்டி சுத்தம் செய்யும் 'பிரஷ்' தயார் செய்கிருர்கள். பனே ஈர்க்குகள் ஏற்றுமதியாகி, வெளி நாடுகளில் துடைப்பமாகச் செய்யப்படுகின்றன. தற்போது நம்நாட்டில்மோட்டார், ரயில் போக்கு- வரத்தும், தொழிற்சாலேகளும் மிகுந்து விட்டதால் பிரஷ் தேவை படிப்படியாக அதிகரித்துவருகின்றது. எனவே இவைகளின் தேவைக்கும் பிறநாட்டுத் தேவையை நிறைவேற்றவும் இத்தகைய பிரஷ் உற் பத்தி இன்றியமையாததாகிறது. இந்த நாரை இறக்குமதி செய்து, செய்பொருள் பலவாகச் செய்யும் மேலேநாடுகளிலுள்ள சிறந்த தொழில்நுட்ப உதவியுடன் இந்த பிரஷ் உற்பத்திச்செய்யும்நிலேயம் இங்கு அமைக்கப்படவேண்டும். இங்கு பிரஷ் செய்து ஏற்றுமதியாளுல் இத்தொழிலேச் சார்ந்து வாழும்

மக்கள், நல்ல ஊதியம் பெறுவர். இத்தகைய தொழிற்சாலை ஏற்பட்டால் துணைத் தொழில்கள் பல பெருகும். கொல்லர், தச்சர் போன்ற தொழிலாளர்களுக்கும் கூடுதலான வேலை வாய்ப்புக்கள் பிறக்கும். நாரைப் பிரித்துப் பக்குவம் செய்ய, சிறிய கருவிகள் கண்டுபிடித்துக் கொடுக்கவேண்டியுள்ளது. இதனால் கிராம மக்கள், நாரைப் பிரித்து, கூடுதல் சம்பளம் பெறுவதுடன், அதை ஒழுங்காக்கிப் பக்குவப் படுத்தவும் முடியும்.

பனை ஓலைப்பொருட்கள்.—மெல்லிய பனை ஓலையிலிருந்து கனமானதும் நேர்த்தியானதுமான ஓலைப் பாய்கள் உற்பத்தியாகின்றன. பாய் முடையும் தொழிலாளர் இப்பகுதியில் சுமார் நாலாயிரம் பேர் உள்ளனர்.

பதனீர்த் தொழில்.—இப்பகுதியில் பதனீர் இறக்குவோர் சுமார் 12,000 பேர். 101 முதனிலைக் கருப்புக்கட்டி கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இதில் பனைமரத்திற்குச் சொந்தக்காரரும் பனையேறுபவர்களும் உறுப்பினராக உள்ளனர். இச் சங்கங்கள் நிதிப் பற்றாக்குறையினால் அதிக முன்னேற்றம் காண முடியவில்லை.

மண்பாண்டம் செய்தல்.—இப்பகுதியிலும் அடுத்துள்ள அம்பை, நெல்லை வட்டங்களிலுள்ள குளங்களில் நல்ல களிமண் நிரம்பக் காணப்படுகிறது. இது ஓடு, செய்வதற்குத் தகுதியானது, மண்பாண்டத் தொழிலாளர்கள் இங்கு 500 பேர் உள்ளனர். இத்தொழிலாளர்கள் தனித்தனியே தம் தொழிலை நடத்தி குறைந்த வருவாய் பெறுகின்றனர். மேலும் வியாபாரிகள், இடைத்தரகர், கடன் கொடுப்பவர் இவர்களின் சுரண்டலுக்கு இரையாகின்றனர். மாவடியிலும் தெற்கு விஜய நாராயணத்திலும் மண்பாண்டத் தொழிலாளருக்கு கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாகியுள்ளன; நாங்குநேரி வட்டாரத்தில் திருவேங்கட நாதபுரத்தில் ஒரு தொழில் கூட்டுறவுச் சங்கம் பதிவு செய்யப்பட்டுள்ளது. தொழிற் திட்டத்தின் கீழ் நாங்குநேரி ஊராட்சி ஒன்றிப்பால், அதற்குரிய தொழிற்கூடமும், நவீன கருவிகளும், இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

செங்கல் செய்தல்.—இப்பகுதியில் ரதமான களிமண் மிகுதியாகக் கிடக்கிறது. சுமார் 300 பேர் செங்கல் உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ளனர். ஆனால் அவர்கள் குறைந்த கூலிக்கே அமர்த்தப்படுகின்றனர். இத்தொழிலாளர்கள் கூட்டுறவுசங்கங்கள் அமைப்புமுறைமுதலியவற்றை அறியச்செய்தல் வேண்டும். ஏற்கனவே ஐந்து கூட்டுறவுச் சாலைகளை கதர் கிராமத் தொழிற் கழகம் பதிவு செய்துள்ளது. செங்கல் உற்பத்திக்கு மேலும் சில கூட்டுறவுச் சங்கங்களை அமைக்கும் வாய்ப்புள்ளது. இதனால் விவசாயிகளுக்கு வேலையில்லாத காலத்தில் வேலை கிடைக்கும் வேலையாகப்படாத நிலையும் இதனால் ஓரளவு குறையும்.

ஓடு உற்பத்தி.—இங்கு ஓடு உற்பத்தி செய்யும் நிலையங்கள் 15 உள்ளன. இந்த ஓடுகள் மாவட்டத்துக்குள்ளும் வெளியே மதுரை வரையிலும் லாரிகளில் அனுப்பப்படுகின்றன. கிராமங்களில் வீடுகளுக்கு மேற்கூரை அமைப்பதற்கு மிகுதியாகப் பயன்படுகின்றன.

இங்குள்ள கிராமங்களில், பனை ஏறுதலுக்கு அடுத்தப்படியாக பருத்தி நெசவுதான் பெருந் தொழிலாக உள்ளது. சர்வோதய சங்கம் இயங்கி வருவதால், இப்பகுதியில் கதர் நெசவும் நடக்கிறது. கைராட்டையில் நூற்போர் சுமார் 3,650 பேர்களும், அம்பர் ராட்டையில் நூற்போர் சுமார் 250 பேர்களும் இருக்கின்றனர். கதர் நெசவாளர்கள் சுமார் 260 பேர் உள்ளனர்.

## கரும்பு வயலில் கறிகாய் பயிர் ; நல்ல லாபம் கிடைக்கும்.

கரும்புக் கரணைகளை விதைத்த வரிசைகளுக்கிடையில், விரைவில் பலன் தரக்கூடிய கறிகாய்களை கரணைகளை போடும் போதே விதைத்தால், கறிகாய்களால் கூடுதலாக லாபம் பெறலாம். இதனால், கூடுதலான செலவு ஒன்றும் ஏற்படுவதில்லை. மேலும் கரும்புப் பயிருக்கு பசுந்தாள் உரம் கிடைத்து விடுகிறது.

மைசூர் மாநில தோட்டக்கலைத் துறை வல்லுனர்கள், சோதனைகள் மூலம் இதைக் கண்டுபிடித்துதுள்ளனர்.

பீன்ஸ், பட்டாணி இரண்டும் இந்த வகையில் முக்கியமாக சிபாரிசு செய்யப்படுகின்றன. இவைகளால், பசுந்தாள் உரம் கிடைக்கிறது.

(ஆதாரம்– Farm News, New Delhi.)

## 1962-லும் தமிழ் நாட்டிற்கே !

### குடும்பக் கட்டுப்பாடு பணிக்கான தேசியப் பரிசு.

குடும்பக்கட்டுப்பாடு சம்பந்தமான வேலைத் திட்டங்களில், மிகச் சிறந்த சாதனைகளுக்கான தேசியப் பரிசு 1962-ம் ஆண்டிலும் தமிழ் நாட்டுக்குக் கிடைத்திருக்கிறது. இதற்கு முந்திய ஆண்டும் தமிழ் நாடே இப்பரிசைப் பெற்றது. குடும்பக் கட்டுப்பாட்டுக்கான தேசியப் பரிசு, இத்துறையில் சிறப்பாகப் பணியாற்றி வரும் ராஜ்யத்திற்கு வழங்குவதற்கென ஏற்படுத்தப் பட்டதாகும்.

கைத்தறி நெசவில் 850 தறிகளுள் 680 தறிகள், ஏழு கூட்டுறவுச் சங்கங்களால் ஆளப்படுகின்றன. வள்ளியூர் பகுதியில் நான்கு சங்கங்கள் உள்ளன.

கோரைப்பாய் நெய்தல்.—தளக்காடு ஏர்வாடி, துலுக்கர்பட்டி ஆகிய இடங்களில் கோரைப்பாய் நெய்தல் நன்கு நடைபெறுகிறது. இங்குள்ள முதலாளிகள், வர்த்தகர்கள், திருச்சி மாவட்டத்திலிருக்கும் கோரையை வாங்கி வந்து தொழிலாளர்களுக்குப் பகிர்ந்து கொடுத்து, குறைந்த கூலியில் வேலை செய்யச் சொல்கின்றனர். இத்தொழிலாளர்களுக்கென தொழிற்கூட்டுறவுச்சங்கங்களை அமைக்க வேண்டும். தேவையான மூலப் பொருட்களையும் தொழிற் கூடங்களையும் பிற உதவிகளையும் செய்தால் பாய் நெய்வோரின் வருமானம் அதிகரிக்கும்.

இங்குள்ள ஒரு பெரிய தொழிற்சாலை நாங்குநேரியிலுள்ள சுந்தரம் டெக்ஸ்டைல்ஸ் என்ற நூற்பாலைதான். 12,500 கதிர்களுள்ள இந்த ஆலையில் நெட்டிழைப் பருத்தியிலிருந்து 80 ஆவது எண் நூல் நூற்பு நடைபெறுகிறது.

பெரும்பாலான கிராமத் தொழில்கள் பண்டைகால முறையில் நடைபெறுகின்றன. இவ்விதத் தொழில்களில்முக்கியமானவை நூற்றல், நெய்தல், தச்சுவேலை, கொல்லுப்பட்டறை வேலை, செக்கில் எண்ணெய்த் தயாரித்தல் கைக்குத்தல் அரிசி தயாரித்தல். சுண்ணும்பு தயாரித்தல், தோல் பதனிடுதல், செருப்பு செய்தல், கோரைப்பாய் நெய்தல், பனை ஓலை முடைதல், கரும்புக் கட்டிக் காய்ச்சுதல், தேனீ வளர்த்தல், கற்ருழை நார் எடுத்தல், பனை நார் எடுத்தல், வாழை நார் எடுத்தல், மீன் பிடித்தல், பீடி சுற்றுதல் முதலியவைகளாகும்.

கிராமக் கைத்தொழில் வளர்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நாங்குனேரி வட்டாரத்தினைப்பற்றி ஓர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. கிராமக் கைத்தொழில் வளர இப்படிப்பட்ட திட்டங்கள் அவசியம் தேவை. ஆனால், கிராமங்களில் நிலவும் வேலையின்மையையும், மக்கள் போதிய வேலையின்றி இடர்ப்படுவதையும் முழுமையாகவோ, நிரந்தரமாகவோ தீர்க்க இவை மட்டும் போதா.

விவசாய வளர்ச்சியை எந்த அளவுக்குப் பெருக்க முடியுமோ. அந்த அளவுக்கு பெருக்க வேண்டும். நாடு அனைத்திற்குமான பொருளாதார அபிவிருத்தியை ஐந்தாண்டுத் திட்டக்கால அளவிலோ, நீண்ட கால அளவிலோ காண முயலவேண்டும். எந்த அளவிற்கு பெரிய தொழில்கள் பெரிய நகரங்களுக்கு அப்பால் அமைக்கப்படுகின்றனவோ அந்த அளவுக்கு, கிராமச் சிறு தொழில்களும் சிரமைப்புத் தொழில்களும் வளர்ச்சியடைந்து அந்தப் பிரதேசங்கள் தொழில் மயமாகிவிடும். ஆனால், இந்தக் கிராமத் தொழில் வளர்ச்சித் திட்டம் ஒரு வரையறைக்குட்பட்ட நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டது. அதாவது, சிறு தொழில்களை அபிவிருத்தி செய்தலே இதன் நோக்கமாகும். கிராமக் கைத்தொழில்களுடன், விவசாயச் சார்புடைய தொழில்கள் இதனுள் அடங்கும்.

(அடுத்த இதழில் படங்கள்).

## உணவு அமைச்சரின் ஆஸ்திரேலிய விஜய பலன்.

மத்திய அரசாங்க உணவு-விவசாய அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம், அண்மையில் தாம் ஆஸ்திரேலியாவுக்கு விஜயம் செய்ததினல் ஏற்பட்டுள்ள பலன்கள் பற்றி விவரித்துள்ளார். பெரிய அளவான ஆறு ரொட்டி தயாரிப்பு யூனிட்டுகளை ஆஸ்திரேலிய சர்க்கார் இந்தியாவுக்கு அன்பளிப்பாக வழங்கி யிருக்கின்றனர் என்றும், அவை ஆஸ்திரேலியத் தொழில் நுட்ப உதவியுடன் ஆறு பெரிய நகரங்களில் அமைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். இந்த யூனிட்டுகள் இங்கே வெற்றிகரமாக இயங்குமேயாகில், இத்தகைய யூனிட்டுகளை இந்தியாவிலேயே தயாரிப்பதற்காகவும், முதலில் ஆஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படவேண்டியிருக்கிற உறுப்புகளை சப்ளை செய்வதற்காகவும் ஒப்பந்தம் ஒன்றை முடிக்க ஆஸ்திரேலிய சர்க்கார் ஏற்பாடு செய்வார்கள். விவசாய உற்பத்திப் பாணிகள், முறைகள், ஆடு வளர்ப்புத் திட்டங்கள், கால்நடைப் பண்ணைகள் ஆகியவற்றை நேரில் கண்டு ஆராய்ந்து வருவதற்காகவே தாம் ஆஸ்திரேலியாவுக்கு விஜயம் செய்ததாகவும், விவசாய ஆராய்ச்சித் துறையிலும், உணவு தானியக் கிடங்குகளை அமைப்பதிலும் ஆஸ்திரேலியாவின் ஒத்துழைப்பையும் உதவியையும் பெற சாத்தியக்கூறுகள் உள்ளன என்றும் அவர் கூறினர்.

நான்காவது திட்டகாலத்துக்குத் தேவைப்படும் ரசாயன உரங்களை இறக்குமதி செய்வதற்கான நீண்டகால ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன என்றும், அதே சமயத்தில் உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் திரு. சுப்பிரமணியம் கூறினர். நான்காவது திட்டத்தின் நான்காவது ஆண்டில், ரசாயன உரத் தேவைகள் முழுவதையும் உள்நாட்டுத் தயாரிப்பிலிருந்தே சப்ளை செய்வது சாத்தியமாகலாம் என்றும் அவர் கூறினர்.

# கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் விவசாயிகட்குக் கடன் வசதி

திரு வி. கே. அப்பண்டராஜன், ஐ.ஏ.எஸ்.;
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்.
சென்னை.

மனிதனின் அடிப்படைத் தேவை உணவு. அதனுல் தான், ''உழுவார் உலகத்தார்க்கு ஆணி'' என்கிருர் வள்ளுவப் பெருந்தகை. அந்த உழவுத் தொழில் வளர, நாட்டில் வளம் பெருக, விவசாயப் பெருங்குடி மக்கட்கு அத் தொழிலில் ஆர்வமும் பற்றும் பெருகும் வகையில், எல்லா வகையான வசதிகளும் செய்து தரப்படல் வேண்டும். கூட்டுறவுச் சங்கங்கள், விவசாயத்திற்கான கடன் வசதிகளை விவசாயிகட்கு அளிக்கின்றன. இந்தக் கடன் வசதிகளை அளிக்கின்ற முறையில், உழவுத் தொழிலின் முக்கியத்துவத்தை முன் வைத்து, கையாளப்பட வேண்டிய வழிமுறைகளைக கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அவர்கள், சிறந்த முறையில் விளக்கியுள்ளார், இக் கட்டுரையில்.

—ஆசிரியர்

விவசாயக் கடன் முறை சிறந்ததாக அமைய வேண்டும். அப்படிச் சிறந்ததாகக் கருதப்பட வேண்டுமென்ருல், அம்முறையானது, கீழ்க்கண்ட முக்கிய அம்சங்களை உள்ளடக்கியதாக இருக்கவேண்டும்.—

* உற்பத்தி கண்ணேக்குடன் கடன் முறை அமையவேண்டும்.

* உரிய காலத்தில் கடன் வழங்கப்பட வேண்டும்.

* கடன் எந்தக் காரியத்திற்குக் கொடுக்கப்படுகிறதோ அதற்குப் போதுமான அளவினதாக இருக்கவேண்டும். தேவைக்கு அதிகமாகவோ குறைவாகவோ கடன் அளிக்கக்கூடாது.

* எந்தக் காரியத்திற்காக வழங்கப்படுகிறதோ அதற்காகவே கடன் பயன்படுத்தப்படுகிறதா என்பது உறுதிப்படுத்தப்படவேண்டும்.

கடன் பெறுவதற்கான நடைமுறை எளிதாக இருக்கவேண்டும்; அவசியமற்ற கட்டுப்பாடுடனும் சிக்கலுடனும் இருக்கக்கூடாது.

* விவசாயிகளிடம் உபரி வருமானம் இருக்கும் காலத்திற்கு தகுந்தாற் போல கடனைத்திருப்பிக் கட்டும்கெடு தேதியை நிர்ணயிக்க வேண்டும்.

* விவசாயிகளிடம் சிக்கனத்தை வளர்க்க கடன் முறை உதவ வேண்டும்.

கடன்முறை உற்பத்திக்கு வழி கோலாவிட்டால் விவசாயிகட்கு நன்மை உண்டாகாது. கடன் தொகை பயனற்ற காரியங்களுக்குச் செலவிடப்படும். பின்பு திருப்பிச் செலுத்துவதும் கடினமாகிவிடும். கடன் உரிய காலத்தில் வழங்கப்படாவிட்டால், அக்கடனை வேறு காரியங்களுக்குப் பயன்படுத்தும் வாய்ப்பு ஏற்படும். இதனுல் உற்பத்தி பாதிக்கப்படும், விவசாயிகளின் வருமானம் குறையும், கடன் வசூல் தடைப்படும், போதுமான அளவு கடன் வழங்காவிடின், உற்பத்தியைப் பெருக்க உரிய அளவு விதை, உரம், எரு, மருந்துகள் போட முடியாது. இதனுல் உற்பத்தி பெருகும் வாய்ப்பு குறைகிறது. மற்ற அமைப்புகளையோ தனியாரையோ நாடி மீதித் தொகையைப் பெறவேண்டிய கட்டாயம் ஏற்படும். அளவுக்கு அதிகமாகக் கடன் கொடுத்தால் வீணை செலவுகட்குப் பயன்படுத்தப்படும். அவ்வாறே, குறைந்த அளவாக இருந்தாலும் மற்ற காரியங்கட்குச் செல

விடப்படும். உழவர்களுக்குக் கடன், பணமாகவும் பொருளாகவும் தேவைப்படும். ஏனெனில் பயிர்ச் செலவில் ஒரு பகுதி விதை, உரம் முதலியன வாங்கப் பயன்படுத்தப்படும். அந்த அளவுக்குக் கடனைப் பொருளாகவே (அதாவது, விதை உரம் என்ற உருவில்) அளிப்பது நல்லது.

2. கடன் பெறுவதற்கான நடைமுறை எளிதாக இல்லாவிட்டால் உழவர்கள் அதில் ஈடுபாடு கொள்ளமாட்டார்கள். தனியார் அல்லது மற்ற அமைப்புகள் கடுமையான நிபந்தனைகளுடன் கடன் தந்தாலும் அங்குக் கடன் வாங்குவது மேல் என்று செல்வர். எளிய நடைமுறை இன்றி, உரிய காலத்தில் கடன் வழங்க இயலாது, இந்த ஒரு குறையினால் மேலே குறிப்பிட்ட நோக்கம், பயன் போன்ற மற்றக் கொள்கைகளும் நிறைவேறாமல் போய்விடும், கெடு தேதி, உபரி வருமானம் இல்லாத காலத்தில் வந்தால், மற்ற இடங்களிலிருந்து கடன் வாங்கியே இந்தக் கடனை அடைக்க வேண்டி இருக்கும். இதனால்' தவணை தவறிய கடன் அதை வசூலித்தல் போன்ற சிக்கல்கள் ஏற்படும் விவசாயிகள் தங்கள் நிதி வசதிகளையும் பெருக்கிக்கொண்டு, தங்களை நம்பி வாழ்பவர்களாகவும் தன்னிறைவு, பெற்றவர்களாகவும் வளரவேண்டும், வெளியில் கடன் வாங்குவதை முழுவதும் நம்பி இருக்கக்கூடாது. இதற்கு சிக்கனத்தையும் சேமிப்பு உணர்ச்சியையும் அவர்களிடையை வளர்க்க வேண்டும். இம்முறையில் விவசாயிகட்கு அளிக்கும் கடன் வசதி முறை அமையவேண்டும்.

தமிழ் நாட்டில், கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாகக் கடன் வழங்கும் முறை, மேலே கூறிய அம்சங்களை உள்ளடக்கியதாக விளங்கும்படி அப்போதைக்கப்போது திருத்தி அமைக்கப்பட்டு வருகிறது. கூட்டுறவுச் சங்கங்கள் ஆண்டுதோறும் சுமார் 45 கோடி ரூபாய் குறுகிய கால, மத்திய காலக் கடனை விவசாயக் காரியங்கட்கு வழங்கி வருகின்றன. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் இந்தத் தொகை ஆண்டொன்றுக்கு ரூபாய் 80 கோடியாக உயரும். இவ்வாறு கடன் வழங்குதல் பெரிய அளவில் விஸ்தரிக்கப்படுகையில் கடன்முறையில் மேலே கூறிய அம்சங்கள் யாவும் இருக்கின்றனவா என்பதை உறுதிப்படுத்துவதை வலியுறுத்தவேண்டியது அவசியம். இல்லாவிட்டால், கடன் விஸ்தரிப்பு ஒழுங்காகன முறையில் செல்லாது. இந்த நோக்கத்தைக் கருத்தில் கொண்டு, இந்த ஆண்டு 'முதல் ஆண்டுக் கடன் அளவுப்பட்டியல் என்ற முறையைக் கொண்டு வர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**ஆண்டுக் கடன் அளவுப் பட்டியல்—முக்கிய அம்சங்கள்**

இந்த முறையில் முக்கிய அம்சங்களாவன

(1) கிராம நாணயச் சங்கத்தின் உறுப்பினராக உள்ள ஒவ்வொரு விவசாயிக்கும் உச்சக் கடன் அளவு நிர்ணயிக்கப்படும். இந்த அளவு அவர் பயிரிடும் மொத்த நிலப்பரப்பு, சாகுபடி செய்யும் பயிர் வகைகள் இவைகளைப் பொறுத்து அமையும். சொந்த நிலமும், குத்தகை நிலமும் சேர்த்துக் கணக்கிடப்படும். ஒவ்வொரு வகைப் பயிருக்கு அந்தந்தப் பகுதிகளில் ஆகும் பயிர்ச் செலவை அடிப்படையாக வைத்து, இந்தக் கடன் அளவு நிர்ணயிக்கப்படும். ஒரு ஏக்கருக்குக் குறிப்பிட்ட பயிருக்கு எந்த அளவு கடன் தருவது என்று விதை, உரம் பயிர்ச் செலவு இவற்றை ஒட்டி வரையறுக்கப்படும். இந்த அளவுகள் கொண்ட பட்டியலை மத்திய வங்கியும் பரிசீலனை செய்து அனுமதிக்கும். ஆண்டுக் கடன் அளவுப் பட்டியல் ஒரு ஆண்டு முழுவதும் நடைபெற இருக்கும் சாகுபடிக் காரியங்களையெல்லாம் உள்ளடக்கித் தயாரிக்கப்படும். ஒரு ஆண்டின் முக்கிய சாகுபடிப் பருவம் துவங்குதற்கு மூன்று மாதங்கள் முன்பே பட்டியல் தயாரிக்கும் வேலை ஆரம்பமாகும். அதாவது ஜூலையில் சாகுபடி வேலைகள் ஆரம்பமாகும் என்றால் ஏப்ரல் மாதம் முதல் பட்டியல் தயார் செய்யும் பணி துவங்கி ஜூன் மாதத்திற்குள் கடன் அளவுகள் நிர்ணயிக்கப்பட்டு அனுமதிகள் பெறப்படும்.

(2) ஆண்டுக் கடன் அளவுப் பட்டியலில் பின்வரும் விவரங்கள் அடங்கியிருக்கும்; உறுப்பினரின் பெயர் பங்குத்தொகை, நிலஅளவு சாகுபடி செய்யும் பயிர்வகைகள் முதலிய விவரங்கள் இருக்கும். அவைகளோடு விதை உரம் முதலியன வழங்குவதாயின் எந்த வகை எவ்வளவு விதை, உரம் என்பதும் இருக்கும். கடன் தவணைகளில வழங்கப்பட இருப்பதால்' சாகுபடிப் பருவம், எருவிடும் பருவம் இவற்றை ஒட்டி கடன் வழங்கும், தேதிகள், தொகைகள் நிர்ணயிக்கப்படும். இவை ஒரு விவசாயி, ஆண்டு முழுவதும் சாகுபடி செய்ய இருக்கும் எல்லா பயிர்களின் தேவைகளைப் பொருத்து இருக்கும். அவ்வாறே கடனைத் திருப்பிச் செலுத்தும் கெடு தேதிகளும் பட்டியலில் குறிக்கப்படும். இத் தேதிகள் அறுவடைக் காலத்தை ஒட்டி அமையும். அப்போது தான் விவசாயிகளிடம் உபரியாகப் பணம் புழங்கும். வசூல் எளிதாகும்.

(3) ஆண்டுக்கான கடன் அளவு நிர்ணயிக்கப்பட்டதும், குறிப்பிட்டப்பட்ட கெடு தேதிகளுக்கும் தொகைகளுக்கும் உட்பட்டு உழவர்கள் விருப்பப்படி கணக்கிலிருந்து பணம் பெறுவதும், திருப்பி கட்டுவதும் அனுமதிக்கப்படும். ஒவ்வொரு முறை கடன் வாங்குவதற்கும் அனுமதி தேவையில்லை. எப்படி ஒரு தொழிற்துறையைச் சேர்ந்தவர் பாங்கியில் ஓவர் டிரேப்ட் (over draft) அல்லது காஷ் கிரடிட் (Cash credit) கணக்கை விருப்பப்படி இயக்குகிறாரோ அவ்வாறே விவசாயியும் இந்தக் கணக்கை மேலே கூறிய வரையறைகளுக்கு உட்பட்டு இயக்கலாம்.

(4) இந்தக் கணக்குகளைச் சரிவரக் கையாளவும், இந்த முறை வெற்றி பெறவும் இப்போதுள்ள தனிநபர் உச்சக்கடன் அளவுகள் தளர்த்தப்படும் ஒவ்வொருவருக்கும் பயிர், நில அளவு, விற்பனைக்குரிய உபரிமாசூல் அளவு, திருப்பி செலுத்தும் சக்தி இவைகளை ஒட்டி ஆண்டுக் கடன் அளவு நிர்ணயிக்கப்படும். ஒவ்வொரு உறுப்பினரின் முழுத் தேவையையும் எந்த வரம்புமின்றி கடனாக அளிப்பதுதான் இலட்சியமாக இருக்க வேண்டும். ஆனால் கூட்டுறவுச் சங்கங்களிடம் போதிய நிதி வசதிகள் இல்லாமையால் ஒவ்வொருவருக்கும் வரம்பு நிர்ணயிக்கப்படுகிறது. இப்போதுள்ள வரம்புகள் தளர்த்தப்பட்டு ரூ. 10,000 என தனி நபர் உச்சக் கடன் அளவு நிர்ணயிக்கப்படும். கரும்பு பயிரிடப்படும் பகுதிகளில் பயிர்ச் செலவின் அளவு ஏக்கருக்கு ரூபாய் 800 முதல் 1000 வரை இருப்பதால், வரம்பை உயர்த்துவது அவசியமாகிறது.

(5) ஆண்டுக்கடன் அளவுப் பட்டியல் திட்டம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் இருக்கின்ற பகுதிகளிலும் நடைமுறைக்கு வரும். தனியார் ஆலைகள், கடன் தொகையைக் கரும்பு விலையிலிருந்து பிடித்துத்தர இசைய வேண்டும். இந்தப் பகுதிகளில் நபர் ஜாமீன் பேரில் கொடுக்கும் கடன் அளவு ரூ. 5,000 ஆக உயர்த்தப்படும். அதற்கு மேல் அடமானத்தின் பேரில் கடன் வழங்கப்படும். இப்போது அடைமானப் பத்திரங்கள் வாங்கப்படுகின்றன. ஆனால் 1961-ம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 33-ம் பிரிவில் சங்க உறுப்பினர் சங்கத்தில் வாங்கும் கடனுக்காக தம் நிலங்களை ஈடுகாட்டுவதற்கு உறுதிமொழி தர வகை செய்யப்பட்டுள்ளது. அடமானத்திற்குப் பதில் இந்த உறுதிமொழியே போதும் இந்த உறுதிமொழி முறையைச் செயல் படுத்துவதற்கான விவரங்கள் பரிசீலிக்கப்படுகின்றன. உறுதிமொழி அளித்தல் நடைமுறைக்கு வந்துவிட்டால், கடன் வழங்குவது மேலும் எளிதாகும்.

(6) மாசூல் விற்பனைத் தொகையிலிருந்து கடன் தவணைகளை வசூலித்தல் இந்த முறையின் மற்றொரு அம்சம். சர்க்கரை ஆலைகளில் கரும்பு விற்பனைத் தொகையில் இருந்து கடன் தவணைகள் பிடிக்கப்படும் என்று மேலே கண்டோம். அவ்வாறே நெல், நிலக்கடலை போன்ற பயிர்களுக்கும் விற்பனைச் சங்கங்கள் வாயிலாக மாசூல் விற்பனை செய்து அத்தொகையிலிருந்து கடன் தவணை வசூல் செய்யப்படும். திறமையாக இயங்கும் விற்பனைச் சங்கங்கள் இந்தககடன்—விற்பனை இணைப்புத் திட்டத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படும்.

(7) விவசாயிகளிடம் மாசூல் விற்பனையின் போது உபரி வருமானம் இருக்குமாதலால் சிக்கனநிதி குறிப்பிட்ட விகிதத்தில் வசூலிக்கப்படும். ஐந்து ஏக்கர் அல்லது அதற்குக் குறைவாக நிலம் உள்ள விவசாயி ஒரு ஏக்கருக்கு நஞ்சையாயின் ஒரு ரூபாயும், புஞ்சையாயின் அரை ரூபாயும் சிக்கன நிதியாகக் கட்ட வேண்டும்; ஐந்து ஏக்கருக்கு மேல் உள்ளவர்பட்கு இந்த விகிதம் முறையே இரண்டு ரூபாய், ஒரு ரூபாய் ஆகும், சிக்கன நிதியின் பேரில் 6 சதவீதம் வட்டி தரப்படும். கரும்பு சாகுபடி செய்பவர்களுக்குச் சிக்கன நிதி விகிதம் சற்று அதிகமாக இருக்கும். சங்கத்திற்கு ஒவ்வொரு உறுப்பினரும் எடுத்துள்ள பங்கு முதல் அதிகரிக்கப்படும், மற்ற வகை டிபாசிட்டுகள் வசூலிக்கவும் ஏற்பாடுகள் விரிவாக்கப்படும்.

### இதில் உள்ள நன்மைகள்

ஆண்டுக் கடனளவுப் பட்டியல் முறையில் பல நன்மைகள் உள்ளன. (1) ஒவ்வொரு முறையும் கடன் மனுக்கள் தயாரித்தல், பரிசீலித்தல், அனுமதி தருதல் போன்றவைகள் தவிர்க்கப்படுவதாலும், சாகுபடி காலத்திற்கு முன்பே கடன் அளவுகள் நிர்ணயிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்படுவதாலும் கடன் உரிய காலத்தில் துரிதமாக வழங்குவது எளிதாகிறது. (2) ஒரு ஆண்டிற்குரிய சாகுபடித் திட்டத்தை ஒட்டி கடன் தேவைகள் முன் கூட்டியே கணிக்கப்படுவதால், போதுமான அளவு கடன் தருவது முடியும் (3) ஆண்டு முழு

---

### கிராமங்களுக்குத் தாருங்கள்

“மனிதன் தன் வாழ்க்கை வசதிகளில் மட்டுமல்லாமல், வாழ்வில் கூட அஸ்திவாரம் வரை தோண்டிக்கொண்டே போகிறான். அவனுடைய உடம்பையே தின்கின்ற நிலைக்குச் சென்று விட்டான். கண்ணை மூடிக் கொண்டு பொருட்களை வீணடிக்கும் நிலையைக் கிராமங்களிற் காணலாம். வாழ்வின் ஒளியை மங்கச் செய்து, உயிருடன் இருப்பதன் இன்பம் குறைக்கப்பட்டு, சமுதாயக் கூட்டுறவுத் தொடர்பு கிராமங்களில்தான் துண்டிக்கப்படுகிறது. சமுதாயத்தில் இரத்த ஓட்டம் குறைந்துள்ள இந்த உறுப்புகளுக்கு நல்ல இரத்த ஓட்டம் கிடைக்குமாறு செய்வதே நம்முடைய கடமையாக இருக்க வேண்டும். மேலும் செல்வத்தையும் அறிவையும் கிராமங்கட்குக் கொணர வேண்டும். வாழ்வதற்குத் தேவையான இட வசதியும், உழைப்பதற்கும், ஓய்வெடுப்பதற்கும், மகிழ்வதற்கும் தேவையான நேரத்தையும், சுய மதிப்பைத் தரக்கூடிய கௌரவத்தையும் உலகின் பிற பகுதிகளில் வாழும் மனிதர்களுடன் உறவு கொண்டாடக்கூடிய முறையில் பரிவையும் தருவதுடன், எப்பொழுதும் இரண்டாவது ஸ்தானத்தையே அவர்கட்குத் தரும் பழக்கத்தையும் ஒழிக்க வேண்டும்.”

—கவியரசர் தாகூர்.

வதும் கடன் அளிப்பதற்கு பதில் பயிர் செய்யும் பருவங்களை ஒட்டி பொருளாகவும் பணமாகவும் கடன் தருவதால் கடனை உற்பத்திக்காகச் செலவிடுவதை உறுதிப்படுத்த முடியும் (4) அறுவடையின் போது கெடு தேதி வருவதாலும், மார்கெட்டிங் சங்கத்தின் மூலம் விற்பதாலும் கடன் வசூல் எளிதாகிறது. (5) கூட்டுறவு இயக்கத்தில் உள்ள நிதி வசதிகளை அதிகபட்சம் பயன்படுத்துவது இந்த முறையில் இயலும். சாகுபடிப் பருவங்கள் மாவட்டத்திற்கு மாவட்டம், ஒரே மாவட்டத்தின் பகுதிக்கு பகுதி மாறுவதால் ஒரு பகுதியில் கடன் தேவையற்றபோது, தேவையுள்ள இன்னொரு பகுதிக்கு வழங்கலாம். விவசாயி தவணைகளில் கடன் வாங்கி தவணைகளில் செலுத்துவதால், பணம் முடங்குவதில்லை, லேவாதேவி அதிகரிக்கும், (6) இந்த முறையில் சங்கத்தின் நிதிவசதிகளையும், உறுப்பினரின் சேமிப்பையும் பெருக்க வலியுறுத்துவதால், மற்றவர்களைச் சார்ந்திருப்பது குறைந்து, தன் நிறைவு தன்னம்பிக்கை ஏற்படும்.

இந்த முறையை அமுலாக்கச் சங்கங்கள் சரியான அளவினதாக, வங்கியைப் போல் இருக்க வேண்டும் ; ஒவ்வொரு சங்கத்திற்கும் அலுவலகமும், முழு நேரச் செயலாளரும் தேவை; அதாவது, ஒவ்வொரு சங்கமும் தனித்தியங்கும் சக்திவாய்ந்ததாக இருக்க வேண்டும். இப்போது பல சிறிய சங்கங்களும் உள்ளன. எனவே கிராமச் சங்கங்களைத் தனித்தியங்கும் சக்தி வாய்ந்தவைகளாக மாற்றி அமைக்கத் திட்டம் வரைந்து செயல்படுத்தப்படும்.

ஆண்டுக் கடன் அளவுப் பட்டியல் முறையைத் தமிழ்நாடு முழுவதும் படிப்படியாக அமுலாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஆண்டு தோறும் குறுகிய காலக் கடனாக வழங்கும் தொகையில் மூன்றில் ஒரு பகுதி சுமார் ரூபாய் 12 கோடி இந்த முறையின்கீழ் நடப்பு ஆண்டில் வழங்கப்படும். அடுத்த இரண்டு ஆண்டுகளில் ஆண்டுக்கு மூன்றில் ஒரு பகுதி வீதம் இந்த முறை விஸ்தரிக்கப்படும். நடப்பு ஆண்டில் தஞ்சாவூர், செங்கல்பட்டு, மதுரை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களிலும், சர்க்கரை ஆலைகள் உள்ள பகுதிகளிலும், கூட்டுறவு விவசாய வங்கிகள் உள்ள இடங்களிலும் இந்த முறை அமுலுக்குக் கொண்டு வரப்படும்.

இந்த முறையின்கீழ் இப்போது குறுகிய காலக் கடன்கள் மட்டுமே வரும். மத்தியகால நிதிவசதிகள் குறைவாக இருப்பதால் அவைகளைச் சிக்கனமாகப் பயன்படுத்துவது அவசியம். மத்திய காலக் கடன் பற்றிய நடைமுறைகளையும் திருத்தி அமைத்து இந்த முறையின்கீழ் கொண்டு வருவது நல்லது. அதற்கான முயற்சிகள் நாளடைவில் எடுக்கப்படும். அதிக முதலீடு தேவையான நிலச்சீர்திருத்தத் திட்டங்கள் இந்த முறையில் வரா ; அவைகட்கு நில அடைமான வங்கிகள் இப்போது போல் தொடர்ந்து கடன் வழங்கும்.

விவசாய உற்பத்தியைப் பெருக்கவும் கடன் முறையைத் திருத்தி அமைக்கவும் கொண்டு வரப்படும் இந்த முறைக்குத் தமிழ் நாட்டின் விவசாயிகள் அனைவரும் நல்லாதரவு அளிக்கவேண்டும்.

---

### போலி நாகரீகம்

"இன்றுள்ள அனைத்தும் செல்வத்தில் வாழும் ஒட்டுண்ணிகள் நாகரிகம். பணம் சம்பாதிப்பது மட்டுமல்லாமல், பணத்தை வணங்குவதும் முக்கியமாகி விட்டது. இந்தப் பொய்த்தெய்வம் மனிதனிடம் காணப்படும் நன்மைகளை அழித்து விடுகிறது. வேறு எக் காலத்திலும் மனிதன் இந்த அளவு தனக்குத் தானே பகையாக இருக்கவில்லை. இந்த பணப் பசியைப் போல வேறு எதுவும் இவ்வளவு கொடுமை உடையதாகவும், சம நோக்கு அற்றதாகவும் இருக்கவில்லை. இந்த அகோரமான யானைப்பசிதான் நவீன நாகரிகத்தின் விளைவாகும் ; இப்பசியைப்போக்கச் செய்யப்படும் முயற்சிகள் வேறு எல்லாவகையான முயற்சிகளையும் தோற்கடித்து மேலோங்கி விடுகிறது.

பேராசை சமுதாயவிரோதமானதூண்டுதலாகும். இவை அனைத்தும் மனிதனுடைய சமுதாய நுண்ணறிவை வலுவிழக்கச் செய்கின்றன. ஒவ்வொரு படியிலும் அகமுகப் போராட்டத்தை உண்டாக்குகிறது. மனிதனுடைய சமுதாய வாழ்க்கையைக் கொடூரமாக வெடிக்கச் செய்து அவனுடைய வாழ்வை முடிக்கின்ற வரையில் இந்த நிரம்பாத பேராசை முடிவுறுவதில்லை."

—கவியரசர் தாகூர்.

# பட்டுக்கோட்டையில் ஒரு பாசறை

சென்ற ஆண்டு பிற்பகுதியில், நம் நாட்டில் கடுமையான உணவு நெருக்கடி ஏற்பட்டபோது, அப்போதைய நிலைமையைத் தற்காலிகமாகச் சமாளிப்பதோடு, அடிக்கடி பயங்கர உருவெடுக்கும் இப்பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதுபற்றியும் நாட்டுத்தலைவர்கள் ஆழ்ந்த சிந்தனை செலுத்தினார்கள். அச்சமயம் மத்திய உணவு, விவசாய அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள், பார்லிமெண்டில் நிகழ்த்திய உரையொன்றில், "உணவுப் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வுகாண ஒரே வழி, உள்நாட்டில் உற்பத்தியைப் பெருக்குவதுதான். ஆகையால் தீவிர விவசாய உற்பத்திக்கு ஓர் ஏற்பாடாக, கிராம சேவக்குகளை விவசாயப் பணிக்கே முழுமையாகப் பயன்படுத்த யோசித்துள்ளோம். இது பற்றிய திட்டம் விரைவில் அறிவிக்கப்படும்", என்று கூறினார். அதன்படி இந்திய அரசாங்கம் வெளியிட்ட திட்டத்தைத் தமிழ்நாடு அரசாங்கம் ஏற்று, கிராம சேவக்குகளுக்குத் தீவிர விவசாயப் பயிற்சி அளிக்க வழிமுறைகளை வகுத்து, சென்ற டிசம்பரில் ஆணை பிறப்பித்தது. அதன்படி, பயிற்சித் திட்டத்தைச் செயல் படுத்தும்—துவக்கி வைக்கும்—விழா பட்டுக்கோட்டையில் நடைபெற்றது.

விவசாயம் மட்டுமன்றி, வேறு பல கிராம நலப் பணிகளிலும் கிராம சேவக்குகளுக்குப் பயிற்சி அளிக்கும் நிலையங்களில் ஒன்று, பட்டுக்கோட்டையில் ஏற்கெனவே இருந்து வருகிறது. அங்கே புதிய முடிவுப்படி, விவசாயப் பணிகளில் தீவிர விசேடப் பயிற்சி அளிக்கும் திட்டந்தான் இப்போது துவங்கியிருக்கிறது. களத்தில் போர் புரியச்செல்லும் வீரர்களுக்கு உரிய எல்லாவிதப் பயிற்சிகளையும் தருவதுபோல், பஞ்ச ஒழிப்புப் போரில் பங்குகொள்ள இருக்கின்ற இந்த 'வீரர்களுக்கு' வேண்டிய பயிற்சி ஆரம்பமான அந்த விழா எளிமையில் அழகும், அமைதியில் வீரமும் இயைந்ததாக அமைந்திருந்தது.

ஏப்ரல் 20-ம் தேதி, செவ்வாய்க்கிழமை காலை 9 மணி. பட்டுக்கோட்டையில் வானம் மப்பும் மந்தாரமுமாக இருந்தது. தூய வெண்ணிறக் கதராடை அணிந்த கிராம நலப் பணியாள மாணவர் களும், புத்தாடை உடுத்திய மாதர்சங்கப் பெண்களும், உழைத்து உரமேறிய திண்தோள் உழவர் திருக்கூட்டமும் பட்டுக்கோட்டை கிராம நலப் பயிற்சி நிலையத்தை அடுத்துள்ள வெளிப்புறத்தில், மேற்கு நோக்கி ஆவலுடன் காத்து நின்றார்கள்—நமது மாநில முதலமைச்சரின் வரவை எதிர்நோக்கி. திடீரென்று புழுதியைக் கிளப்பிக்கொண்டு நாலைந்து கார்கள் விரைந்து வந்தன. 'அதோ! அமைச்சர் வந்துவிட்டார்'—சிறுவர்களும் சிறுமிகளும் உற்சாகத்துடன் மகிழ்ச்சி ஒலி எழுப்பினர். உடனே மேளங்கள் முழங்கின; தாரைகள் ஒலித்தன; முரசுகள் அதிர்ந்தன. பெரியவர்கள் முகத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடியது.

வந்த முதலமைச்சரை, கூட்டு அபிவிருத்தி கமிஷனர் திரு கா. திரவியம் அவர்கள் வரவேற்க, கிராம நலப் பணியாள மாணவர் ஒருவர் மாலை சூட்டி விழாப் பந்தலுக்கு அழைத்துச் சென்றார். அந்தப் பந்தலிலே ஒரு மூலையிலே நான்கு அடி உயரத்தில் ஒரு வெள்ளைச் சுவர். அதன் மத்தியில் ஒரு பட்டுத்துணி, எதையோ மறைத்துக்கொண்டு தொங்கியது. அதன் அருகில், அமைச்சர் வந்தவுடன் பூபாள இராகத்தில் இரு மாணவர்கள், ஆண்டவன் துதி இனிமையாகப் பாடினார்கள். பின்பு அமைச்சர், அந்தச் சுவரிலுள்ள பட்டுத்துணியை நீக்கினார். பளிச்சென்று தெரிந்தது பளபளக்கும் கருங்கல் பலகை. அதன் மத்தியிலே 'கிராம நலப் பணியாளர் தீவிர விவசாயப் பயிற்சி மாணவர் விடுதி' என்று அழகாக பொறிக்கப்பட்ட எழுத்துக்கள் மின்னின. "இந்த விடுதிக்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 1·50 லட்சமாம். ஒரு வருடத்திற்குள் இதைக்கட்டி முடித்து விடுவார்களாம். விடுதியின் அமைப்பு, புதுவிதமாக இருக்குமாம்"—இவ்வாறு பலப்பல பேசிக்கொண்டார்கள், அங்கே குழுமியிருந்தோர்.

பின்பு முதல் அமைச்சர், கூட்டு அபிவிருத்தி கமிஷனர், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு பி. என். வேதநாராயணன்—மூவரும் தென்னங்கன்றுகளை நட்டுவிட்டு, பயிற்சி நிலையத்திற்குள் பிரவேசித்தார்கள். நிலையத்தின் வாயிலிலே தூய கதரணிந்த கிராம நலப் பயிற்சியாளர்கள், வீரர்கள் போல் வரிசையாக அணி வகுத்து நின்று, தங்கள் அன்புக் கரங்களைத் தூக்கி, சிரம் தாழ்த்தி எல்லோரையும் புன் முறுவலுடன் வரவேற்றார்கள். பூ வண்ணக்காட்சி போலவும், மலர் போட்டிக் கென அமைக்கப் பெற்றதைப்போலவும் அழகு மிகு செடிகளாலும் வண்ண மலர்களாலும் அமைத் திருந்தார்கள், விழா மேடையை. மண்டபத்துக்குள்ளே மாணவர்களும், விவசாயிகளும், பஞ்சாயத்து அலுவலர்களும் தலைவர்களும் நிறைந்திருந்தனர். விழா ஆரம்பித்தது. இறை வணக்கத்துடன் பயிற்சி யாளர் தலைவர் திரு. ஜி. பன்னீர்செல்வம் அமைச்சர் அவர்களையும் ஏனையோரையும் வரவேற்றுப்பேசினார்.

அடுத்து கூட்டு அபிவிருத்திக் கமிஷனர் திரு. திரவியம் அவர்கள், பயிற்சித் திட்டத்தை விளக்கிப் பேசினார். பயிற்சியைத் துவக்கிவைத்த முதலமைச்சர் அவர்கள், தம் உரையின் இறுதியில் "பயிற்சி பெற வந்துள்ள உங்கள் எல்லோருக்கும் என்னுடைய நல்வாழ்த்துக்கள்" என்று ஆசி கூறினார். (பேச்சுக்கள் விவரம் 1, 2 பக்கங்களில் காணலாம்).

நன்றி உரைக்குப்பின், நாட்டுப்பண் பாடப்பட்டது. அங்கு குழுமியிருந்த அத்தனை பேரும், ஒன்று சேர்ந்து ஒரே குரலில் நாட்டுப்பண் பாடியது, விழித்தெழுந்த பாரத சமுதாயத்தின் வீரக் குரலென கம்பீரமாக ஒலித்து இந்த விழாவிற்கு நல்ல முத்தாய்ப்பு வைத்தது. (படங்கள் 22, 23-ம் பக்கம்)

—நமது விசேட நிருபர்—திரு அ. வே. ரா.

சென்னை அடையாறு புற்றுநோய் ஆஸ்பத்திரியின் 10-வது ஆண்டு விழாவை, அண்மையில், மத்திய அரசாங்க சுகாதார அமைச்சர் டாக்டர் சுசீலா நய்யார் ஆரம்பித்து வைத்தார். ஆஸ்பத்திரியில், 'பக்தவத்ஸலம் அறுவை சிகிச்சைப் பிரிவையும்' திறந்து வைத்த அவர், அங்கு நோயாளிகளுடன் உரையாடுவதைப் படத்தில் காணலாம்.





இராமேசுவரத்தில் புயலால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு, இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் சார்பில் உதவி அளிக்கப்பட்டது.

மத்தியப் பிரதேசத்திலிருந்து அண்மையில் சென்னை வந்திருந்த ஆதிவாசிகள், சுகாதார அமைச்சர் திருமதி ஜோதி வெங்கடாசலத்தைச் சந்தித்தனர்.












# திருந்திய விவசாய முறைகளில் கிராமசேவக்துகளுக்கு நேரடிப் பயிற்சி










திருச்சியை அடுத்த திருவெறும்பூரில் நிர்மாணிக்கப்பட்டுள்ள உயர் அழுத்தக் கொதிகலன் தொழிற்சாலையை, உப ராஷ்டிரபதி டாக்டர் ஜாகிர் ஹுசேன், மே 1-ந் தேதி துவக்கி வைத்தார்.



திருச்சிராப்பள்ளியில், அரசாங்கக் கிளை அச்சகத்தை, மே 1-ந் தேதியன்று முதலமைச்சர் திரு. எம். பக்தவத்ஸலம் திறந்து வைத்தார். விழாவிற்கு, செய்தித்துறை அமைச்சர் திரு. ஜி. பூவராகன் தலைமை வகித்தார்.

திருவெறும்பூர் தொழிற்சாலையின் பொதுத் தோற்றம்.



# பாரத நாட்டு மாதரசிகள்

## அன்னை சாரதா தேவியார்

திருமதி வெ. அலமேலு, சென்னை-7.

**ஸ்ரீ சாரதா தேவியார், ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரின் பத்தினித் தெய்வமும் முதல் சிஷ்யையும் ஆவார். மகளிர் குலத்திற்கே அவர் ஓர் இலட்சியத் திருஉருவம். அவரது வாழ்வு தூய்மையும், எளிமையும், பக்தியும், ஞானமும், அருளும், தொண்டும் நிறைந்திருந்தது. உலக மக்கட்கு அவர் ஞானத்தாய். பெண்மைக்கு அவர் ஓர் இலக்கியம்.**

பெண்மைக்கு ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தவர் அன்னை சாரதா தேவியார். அவரது பெண்மையில் மனைமாட்சியும், தாய்மையின் பொலிவும், துறவும் ஒன்று சேர்ந்து உச்சநிலை அடைந்து திகழ்ந்தன. புனிதமடைந்த பெண்மை, பாரதப்பெண்டிர் குலத்திற்கே எத்தகைய பெருமையைப் பொழியவல்லது என்பதற்கு அன்னை சாரதா தேவியார் ஒரு சான்றுவார். 'பெண்ணிற் பெருந்தக்க யாவுள' என்று போற்றிப் புகழ்கிற வள்ளுவப் பெருந்தகையின் கூற்றுக்கு சீரியதொரு உதாரணமாக நின்று நிலவுகிறவர் அன்னையார். அன்னை பராசக்தியின் இயல்பாகிய பெண்மை பாரத நாட்டின் உயிர்நாடி. 'தீதிலா வடமீன்போன்ற தெய்வக் கற்புக்கு' இலக்கணமான பாரதநாட்டு மாதரசிகளின் திருக்கூட்டத்தில் திலகம் போன்று திகழ்கின்றவர் அன்னை சாரதாதேவி.

### பிறப்பும் வளர்ப்பும்

மேற்கு வங்க மாநிலத்தில் பாங்கூரா மாவட்டத்தில் ஜெயிராம்பாடி என்னும் கிராமத்தில் இராமச்சந்திர முகோபாத்யாயர் என்ற ஏழை அந்தணர் வசித்து வந்தார். அவர் பண்பாளர். சீரிய நெறி நின்று வாழ்வு நடத்திய பெருந்தகையாளர். அவர் மனைவியார் சியாமா சுந்தரி தேவி. கொழுநனுக்கேற்ற குணவதி. இத் தம்பதிகளுக்கு 1853-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 27-ம் தேதி, நம் சாரதா தேவி திருமகளாகத் தோன்றினார்.

நம் நாட்டில் மற்ற கிராமத்துச் சிறுமிகளின் வாழ்க்கை முறை எப்படி அமைந்திருக்குமோ, அதைப்போலவேதான் சாரதா மணியின் இளமைப் பருவமும் சென்றது. ஆனால் தன்னுடைய அறிவைப் பெருக்கிக் கொள்வதற்கான சீரிய வாய்ப்புகள் சாரதா மணிக்குப் பெரிதும் கிடைத்தன. நற்குடியில் பிறந்ததின் பயன் வீணாகப் போகவில்லை. ஆனால் அதைவிட அவருடைய எதிர்கால வாய்ப்பு பொலிவுடன் திகழ்ந்ததற்கு அவளைக் கைபிடித்த மகாபுருஷனின் தொடர்பே மிக முக்கியமான காரணமாகும். அலிதார் என்ற திருநாமம் கொண்ட ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரின் மனைவியாக சாரதாமணி அமைந்தது அவருடைய வாழ்க்கைக்கே ஒரு திருப்புமையம் போல் அமைந்துவிட்டது.

### கொண்டான் குறிப்பறிந்து நடந்த குணவதி

பக்கத்து கிராமத்தில் வசித்துவந்த நற்குடி ஒன்றில் பிறந்த சுகாதாருக்கு சாரதாமணியை திருமணம் செய்துவைத்தனர். திருமணம் நடந்த காலை ககாதாருக்கு வயது 24. சாரதாமணிக்கோ வயது ஆறு. இந்தியாவில் இல்லறம் ஓர் உயர்ந்த வாழ்க்கை முறையாக எப்பொழுதுமே கருதப்பட்டு வந்துள்ளது. தம்பதிகளின் மனது முற்றிலும் பண்பட்டபிறகு, உலக நன்மையின் பொருட்டு இரண்டொரு சத்புத்திரரைப் பெற்றெடுத்து பின்பு ஞான வாழ்க்கையை கைக்கொள்ளுதலே இல்லற வாழ்க்கையின் நோக்கமாகும்.

ஸ்ரீ இராமகிருஷ்ணர் பிறவி ஞானி, பால்யப் பருவத்தில் இருக்கும் மனைவியை விட்டு அவர் ஏழு ஆண்டுகள் தக்ஷிணேஸ்வரத்தில் கடுந்தவம் புரிந்து

விட்டு, பின்பு ஊருக்கு திரும்பினர். அப்பொழுது சாரதாமணிக்கு வயது பதினறு. குழந்தை பருவத்தினுடைய விளையாட்டு இயல்புகள் மெள்ள மெள்ள மறைந்து, அறிவு வளர்ச்சி பெறத் தொடங்கியிருந்தாள். இதுநாள்வரையில் மனைவியைப்பற்றி சிந்தியாதிருந்த ஸ்ரீ இராமகிருஷ்ணர் இப்பொழுது தமது பொறுப்பை உணரலானர். இம்மைக்கும் மறுமைக்குத் தம் இளம் மனையாளுக்கு தாமே கதி என்பதை அறிந்த ஸ்ரீ இராமகிருஷ்ணர், அவளை அன்புடன் வரவேற்றார். கணவன்பால் ஒளிர்விட்டுப் பொலிந்த புனிதத்தையும், அவர் காட்டிய அன்பினின்று வடிந்த தெய்வத்தன்மையையும், சாரதை ஒருவாறு புரிந்துகொண்டாள். ஆண்டவனை வழிபடுவது ஒன்றே பிறவிப்பயன் என்று அந்த இளமங்கைக்கு எடுத்தோதினர் கணவர். கடவுளிடத்து பக்தி பூணுதல், உலகத்தவர்க்கு தன் கடமைகளைத் திருந்தச்செய்தல் முதலியன அவளுக்குக் கற்பிக்கப்பட்டன. அன்புடன் ஸ்ரீ ராமகிருஷ்ணர் புகட்டிய இம் மேலான எண்ணங்கள் சாரதையின் மனதில் ஆழப்பதிந்தன. அதற்கெல்லாம் மேலாக தன் கணவரின் பவித்திரமான அன்புக்கு தான் பாத்திரமானதை எண்ணி அவள் ஒப்பில்லா மகிழ்ச்சி கொண்டாள். சாரதாதேவியின் வாழ்க்கையில் பிற்காலத்தில் ஏற்பட்ட பெரும் மாறுதலுக்கு இதுவே முதல் காரணமாயிற்று எனலாம்.

ஸ்ரீ இராமகிருஷ்ணர் தன்னுடைய இல்லாளிடம் கொண்டிருந்த அன்பில், அவர் செயலில், தனிச் சிறப்பு ஒன்று விளங்கிற்று. தாம் கடைப்பிடித்த இலட்சியத்தையே தன் தலைவிக்கும் புகட்டத் தொடங்கினர். இக் கடமையை ஆற்றுவதற்காக, அவர் அவளோடு கூடிவாழ்ந்த வாழ்க்கை தாம் அடைந்துள்ள மனப்பக்குவத்தைச் சோதிக்கவும் நிலைக்களனுக அமைந்தது. இரண்டாவதாக, அவ் வாழ்க்கையின் பயனுக ஸ்ரீ இராமகிருஷ்ணருடைய ஞானவாழ்க்கை உலகுக்கு எவ்வளவு பயன் பட்டதோ அவ்வளவு பயன் சாரதாதேவியாரின் வாழ்க்கையினின்றும் உண்டாயிற்று.

ஸ்ரீ இராமகிருஷ்ணருடைய மனப்பாங்கை விளக்க கீழ்க்கண்ட சம்பவத்தைக் குறிப்பிடலாம். ஒரு நாள் அவர் தம் மஞ்சத்தில் சாய்ந்துகொண்டிருக்கையில் சாரதா அவருக்கு விசிறி வீசிக்கொண்டிருந்தாள். அப்பொழுது அம் மெல்லியலாள் தன் கணவரை நோக்கி, ''நீங்கள் என்னை எவ்வாறு கருதுகின்றீர்கள்?'' என்று கேட்டாள். அதற்கு ஸ்ரீ இராமகிருஷ்ணர், ''இங்கு ஆலயத்தின் கண், எழுந்தருளியிருக்கும் ஜகன்மாதாவே ஒரு வடிவெடுத்து என்னை ஈன்று வளர்த்தாள். இப்பொழுது மற்றொரு வடிவெடுத்து எனக்கு குற்றவேல் புரிகின்றாள். பெண்ணுலகு அனைத்தும் பராசக்தியின் வடிவு என்னும் உண்மை என் மனதினின்று மறைவதில்லை'' என்றார். இத்தகைய திருக்காட்சியே, ஸ்ரீ இராமகிருஷ்ணரின் புனித வாழ்க்கைக்கு ஆதாரமாயிற்று. கணவரானவர் எவ்வாறு பரமார்த்திகத்தை இலட்சியமாகக் கொண்டிருந்தாரோ, அங்ஙனமே அவருக்கேற்ற பதிவிரதையான ஸ்ரீ சாரதாதேவியாரும் அதையே இலட்சியமாகக் கொண்டிருந்தார். கொண்டான் குறிப்பறிந்து நடந்த குணவதி அல்லவா அவர்!

### கணவனுக்கேற்ற கற்புக்கரசி

தூய்மையே வடிவான தேவியாரின் மகிமையை முதன் முதலில் அறிந்துகொண்டவர் அவர் கணவரே. வாழ்க்கைத்துணை என்ற சொல்லுக்கு ஏற்பத் தமது ஆத்மீக வாழ்க்கைக்கு தேவியார் எத்தகைய உதவி புரிந்தார் என்பதும் பரமஹம்ஸ

## உற்பத்தி பெருக—ஐந்து வேலைத் திட்டங்கள்

தீவிர உணவு உற்பத்தித் திட்டத்தை மேற்கொள்வதன் மூலம் உணவுப்பொருட்கள், இதர பொருட்கள் உற்பத்தியை அதிகரிக்க, தமிழ்நாடு அரசாங்கம் உத்தேசித்துள்ளது. அதாவது, அதிக பரப்பளவைச் சாகுபடியின் கீழ்கொண்டு வரவும், சாகுபடியிலுள்ள நிலங்களில் தீவிரச் சாகுபடி முறைகளை மேற்கொள்ளவும் முயற்சி செய்யப்படுகிறது. இம்மாநிலத்தின் பல்வேறு ஆராய்ச்சி நிலையங்களில் வகுத்துள்ள நடைமுறைகள் முழுவதும் மேற்கொள்ளப்படுகின்றன. ரசாயன உரங்கள் பசுந் தழை உரங்கள், கலவை எருக்கள் ஆகியவைகளை அதிகபட்ச அளவுக்குப் பயன்படுத்தவும் நவீன வேளாண்மை முறைகளைப் பயன்படுத்தவும் குடியானவர்களுக்கு ஊக்கமளிக்கப்படுகிறது. வேளாண்மை உற்பத்தி இலக்கை எய்த அடியிற்கண்ட வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன :—

(1) ஊற்றுக்கிணறுகள், துளை ஊற்றுக்கிணறுகள், வடிமுனை குழாய்க்கிணறுகள், ஆகியவற்றை அமைத்தல்.

(2) தவணைக்கொள்முதல் முறையில் நீர் இறைக்கும் இயந்திரங்களை விற்பனை செய்வதன் மூலம் இறைவைப் பாசன வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல்.

(3) நவீன வேளாண்மைக் கருவிகளை வழங்குதல்.

(4) பெரிய, சிறு பாசனத்திட்டங்களை நிறைவேற்றுதல்.

(5) மண்வளப்பாதுகாப்புத்திட்டங்களை மேற்கொள்ளுதல், புன்செய்ச் சாகுபடித் திட்டங்களை மேற்கொள்ளுதல்.

தேவருக்கும் நன்கு தெரியும். அவர்களுக்கிடையே நெருங்கிய ஆத்மீக ஒருமைப்பாடு ஏற்பட்டிருந்தது. இருவர் கருத்தும் உயர் நோக்கத்தில் ஒருமித்து இருந்தனவாதலால், கணவன் சேகரித்த ஞானச் செல்வம், பதிவிரதையின் உள்ளத்திலும் ஞான விளக்கினை ஏற்றுவதாயிற்று.

'கொழுநன் தொழுதெழுவாள்' பெய்யெனப் பெய்யும் மழை, என்பது உலக வாக்கு. இந்த இலட்சியம் பாரத மாதரசிகளின் கருத்தில் தோய்ந்து நின்று நிலவுகின்ற ஒன்றாகும். இக் கோட்பாட்டையே ஸ்ரீ சாரதா தேவியாரும் கடைப்பிடித்தார். கடவுளே தமக்கு கொழுநனாக வாய்த்துள்ளார், என்பது அம்மையாரின் கருத்து. பக்தியோடும் தியானத்தோடும் கூடிய திருத்தொண்டினாலேயே ஆத்மசாதனமாகிறது. அதைத்தான் ஸ்ரீ இராமகிருஷ்ணர் சாரதா தேவிக்குப் புகட்டினார். அன்னை சாரதா தேவியார் பதினைந்து ஆண்டுகள் தக்ஷிணேசுவரத்தில் தன் கணவருடன் தங்கியிருந்தார். அதற்கிடையில், ஏதோ சில சமயங்களில் மட்டும் தமது பெற்றோரைப் பார்க்க ஜெயராம்பாடிக்குச் சென்று வருவார். மற்றபடி கணவருக்குத் தொண்டு செய்வதே அவருடைய குறிக்கோளாக இருந்தது.

### உயர்ந்த நெறி நின்ற உத்தமத் தம்பதிகள்

தம் நாயகரிடம் அவர் கொண்டிருந்த பக்தியோ சொல்லில் அடங்காதது. எந்த உயர் நோக்கத்தைப் பிறவிப் பயனாக கணவன் பாராட்டினாரோ, அதே நோக்கத்தை மனைவியும் ஏற்றுக்கொண்டார். மேம்பாடான வாழ்க்கையிலும் அருள்நெறியிலும் இருவர் கருத்தும் ஒருமித்திருந்தன. தூய வாழ்க்கையையும் புலன் அடக்கத்தையும் அவர்கள் அணிகலமாகக் கொண்டனர். பண ஆசையை முற்றும் துறந்த மேலோராக இருவரும் திகழ்ந்தனர். ஒரு மார்வாரி பக்தர் ஸ்ரீ ராமகிருஷ்ணரது சபரக்ஷணைக்காகப் பதினாயிரம் ரூபாய் அவருக்கு நிதியளிப்பதாக வந்து வணங்கி வேண்டினார். இராமகிருஷ்ணர் இணங்கவில்லை. பிறகு அக்கொடையாளி, அந்நிதியை சாரதா தேவியாரின் பெயரிலாவது அளித்துவிட விரும்பினார். "ஏன், நீயாவது அதை ஏற்றுக்கொள்ளலாமே. என்ன சொல்கின்றாய்?" அன்னையாரைக் கேட்டார் ஸ்ரீராமகிருஷ்ணர். அன்னையாரோ, உடனே தங்கு தடையின்றி, "அது எவ்வாறு தகும்? நான் பொருள் படைத்திருப்பது தாங்கள் படைத்திருப்பதற்கு ஒப்பாகும். ஏனென்றால், என் உயிர், உடல் உடைமையனைத்தும் தங்களுடையன. ஆதலால், அந்நிதியை நான் ஏற்பது முறையன்று" என்றார். மிக உயர்ந்த கருத்துக்களை இலட்சியமாகக் கொண்ட பண்பாளராகத் திகழ்ந்தனர் கணவனும் மனைவியும்! ஞான வெள்ளத்திலே முகித்தெழுந்து இறைவன் புகழ்பாடும் அவர்களுக்கு பணம் ஒரு தூசுக்குச் சமானமாக இருந்ததில் வியப்பொன்று மில்லை!

ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு சில ஆண்டுகளாகவே தொண்டையில் வலி ஏற்பட்டு, சிரமப்பட்டுக் கொண்டிருந்தார். 1885-ம் ஆண்டில் கல்கத்தாவில் சியாம்புகூர் என்னும் இடத்திற்கு சிகிச்சைக்காக அவர் அழைத்துச் செல்லப்பட்டார். பரமஹம்சரை வாட்டிய பிணி அதிகரித்துக்கொண்டே போயிற்று. ஸ்ரீசாரதாமணி தேவியார் குருதேவரது அருகாமையில் இருந்து அவரைக் கவனித்துக் கொண்டார். ஆனாலும் பிணி குறையவில்லை. ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸரின் இறுதிக் காலம் நெருங்கியது. 1886-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் பதினாறும் நாள், அதிகாலையில் ஸ்ரீ இராமகிருஷ்ணர் தன் ஊன் உடல் நீத்துப் பேரொளியில் புகுந்தார். உறுதியும், விவேகமும், வைராக்கியமும் கொண்டவராயினும், கணவரின் மரணம் அன்னைக்குத் தாங்கவொண்ணாத துயரினை அளித்தது. கணவரின் பிரிவுக்குப் பிறகு, உயிருடன் இருக்கும்பொழுது கணவர் தனக்கு ஆக்ஞை இட்டிருந்ததற்கு இணங்க, பல க்ஷேத்திரங்களுக்கும் தீர்த்த யாத்திரை புறப்பட்டார் சாரதா தேவியார். 1910-ம் ஆண்டில் அன்னையார் தம் தீர்த்த யாத்திரையின் ஒரு பகுதியாக சென்னைக்கும் வந்திருந்தார். அன்னையாரின் ஆத்மீகப் பெருவாழ்வு இதற்குள் பரிபூரண நிலையை அடைந்து வந்தது. யாத்திரை முடிந்து தன் கிராமத்தில் வந்து தங்கிய அம்மையார், கிராமத்துக்கு தம்மை நாடி வந்த சிஷ்ய கோடிகளுக்குக் குற்றேவல் புரிவதில் அடைந்த ஆனந்தம் அளவிட முடியாதது.

அன்னையாரின் அருளுக்குப் பாத்திரமாக மேல்நாட்டிலிருந்து சகோதரி நிவேதிதை, சகோதரி கிறிஸ்தீன், சகோதரி தேவமாதா முதலாயினோர் இந்தியாவுக்கு வந்தனர். அவர்கள் எல்லோரும் கல்வியில் தேர்ச்சி பெற்றவர்கள். நேர்த்தியான மேல்நாட்டு வாழ்க்கை முறையில் ஈடுபட்டவர்கள். அதையெல்லாம் பொருட்படுத்தாது, தெய்வத் தன்மையோடொத்த தன்மை வாய்ந்த இந்திய அன்னைமார்களின் வாழ்க்கை முறையை அன்னையாரிடமிருந்து கற்றுக்கொள்ள இந்தியாவை வந்தடைந்தனர். அன்னை சாரதா தேவியாரோ, அவர்களைத் தம் சொந்த புதல்விகளெனக் கொண்டு, ஆசார அனுஷ்டானத்தில், அன்றாட வாழ்க்கை முறையில் அடியோடு மாறுபட்ட அவர்களிடம் ஆத்மிக வாழ்க்கையையும் பேரன்பையும் ஆதாரமாகக் கொண்ட அன்னையார் மாறாத இணக்கத்தை ஏற்படுத்தினார். இந்தியத் தாயின் அருள் நிலை உலகத்தவரைத் தம்மகத்து எடுத்து அணைத்துக் கொள்ளவல்லது என்பதற்கு இதுவே சான்றாகும்.

சில ஆண்டுகள் சென்று, அன்னையார் மெலிந்த உடலுடன் கல்கத்தாவுக்கு வந்து சேர்ந்தார். மண்ணுலகில் அவர் வாழ்க்கை முடிவதற்கான அறிகுறிகள் தென்பட்டன. 1920-ம் ஆண்டு ஜூலை மாதம் 21-ம் தேதி ஸ்ரீ சாரதா தேவியார் பூத உடல் நீத்துப் பொன் உடல் எய்தினார். அவர் மேனி, தக்க சடங்குகளுடன் ஸ்ரீ இராமகிருஷ்ண மடத்தின் தலைமை இடமாகிய பேலூர் மடத்தில் கங்கைக் கரையோரத்தில் தகனம் செய்யப்பட்டது.

அன்னையாரின் பூத உடல் மறைந்தது என்றாலும் அன்னையாரின் வாழ்க்கை முறை எந்நாளும் இந்நாட்டில் நிலைத்திருக்கும். மகளிர் குலத்தின் மங்காத ஒளி விளக்கு அன்னை சாரதா தேவி. பர்த்தாவுக்கேற்ற பதிவிரதை. கொண்டான் குறிப்பறிந்து நடந்த குணக்குன்று. பெண்ணினத்துக்குப் பெருமை தேடித்தந்த ஞானச் சுரங்கம்! 'பாரத நாட்டு மாதரசிகளில்' மிகச் சிறந்து விளங்குபவர்களில் ஒருவர் ஸ்ரீ சாரதாமணி தேவியார்!

கல்வி—

கண்டெடுத்த

கருவூலம் போல்

இனிக்கிறது!

# கங்கைக் கரை ஓரம் கமழும் புதிய மணம்

அன்றும் இன்றும், கல்வியும் கலாச்சாரமும் தழைத்தோங்கும் சிறப்பு பெற்றதுதான் கங்கைக் கரையோரம். ஆனால் அதே கங்கைக் கரையில், கல்வி அறிவே இல்லாத மக்கள் வாழும் கிராமமும் இருக்கிறது. பெயர்—கோத்காளி குர்மிபாரா. மேற்கு வங்க மாநிலம், நாதியா மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு குக்கிராமம் அது. அங்கு வாழ்பவர்கள் மகதோஸ் என்னும் ஒரு வகுப்பினர். அவர்களது மூதாதையர் பீகார் மாநிலத்திலிருந்து வந்து இங்கு குடியேறினார்கள். அவர்கள் பெரும்பாலும், சொந்தமாக நிலம் ஏதும் இல்லாத விவசாயத் தொழிலாளர்கள். பொருளாதார நிலையில் மிகவும் பின்தங்கியவர்கள்.

வறிய வாழ்க்கை நிலையில் இருந்த அவர்கள், கல்வியைப் பற்றி எண்ணிப் பார்த்ததே இல்லை. அண்மைக் காலம் வரை கூட, அவர்கள் தங்கள் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பவில்லை. காலம் காலமாக இப்படித்தானே இருந்து வருகிறார்கள் என்பதற்காக, இனியும் அறியாமை இருளில் கிடந்து உழலும்படி விட்டுவிட முடியுமா? அவர்களது சகோதரர்களான கோடானு கோடி இந்திய மக்கள் கல்வி ஒளி பெற்று, முன்னேற்றப் பாதையில், செல்வ வள வாழ்வை நோக்கி, வெற்றி நடை போடும்போது, இந்த மக்களை மட்டும் விட்டு விடலாமா?

எனவே, நாடெங்கும் அமுல் செய்யப்பட்ட சமுதாய நல அபிவிருத்தித் திட்டம் இந்தப் பகுதிக்கும் கொண்டுவரப்பட்டது. அப்போது, இத்திட்டத்தின் கீழ், இக்கிராமத்தில் சமூகக் கல்வி நிலையம் ஒன்று நிறுவப்பட்டது. இதில் வியப்புக்குரியது, மகிழ்ச்சிக்குரியது என்னவென்றால், கர்நாடக ஜனங்கள் எனக் கருதப்பட்ட இக்கிராம மக்கள், நிலையம் ஏற்பட்டச் சில நாட்களுக்கெல்லாம், நிலையம் சம்பந்தமாக அலாதி அக்கறை காட்டத் தொடங்கினர். கல்வியறிவற்ற பெரியவர்கள் பலரும் நிலையத்தின்பால் கவரப்பட்டனர். அத்தகையவர்கள் சுமார் 20, 25 பேர் தினசரி நிலையத்தில் கூடுவது வாடிக்கையாயிற்று. முதியோர் கல்வி போதனை சீராக நடைபெறத் தொடங்கியது. நாள் முழுவதும் உடல் உழைப்பால் அலுத்துவந்தபின், அயர்வு அகல வசதியானதொரு இடத்தில் அமர்வதும், அதே நேரத்தில் எழுதப்படிக்கக் கற்றுக்கொள்வதும், வயது வந்த அவர்களுக்கு ஒரு புது அனுபவமாக இருந்தது. இதுவரை இன்னதென்று தெரியாதிருந்த எழுத்துக்களின் வரிவடிவத்தைப் புரிந்து எழுதுவதும், ஒவ்வொரு எழுத்துக்கும் ஒரு ஒலி உண்டு என அறிந்து அதை வாய்விட்டு உச்சரிப்பதும், ஒரு நான்கைந்து எழுத்துக்களைச் சேர்த்து ஒரு வார்த்தையை உருவாக்குவதும், அவர்களுக்கு இனம் புரியாத ஒரு இன்பத்தைத் தந்தது. அதிலும் குறிப்பாக, தத்தம் பெயரைப் பிழையில்லாமல் எழுத முடிந்தபோது, எல்லையில்லா குதூகலம் அடைந்தனர். தேடிக் கிடைக்காத செல்வம் தேடாமல் கிடைத்ததுபோல, திடீரெனக் கண்டெடுத்த கருவூலம்போல, கல்வி அவர்கள் இதயத்தில் இன்பத்தேன் பாய்ச்சியது.

இந்த நிலையத்தில், முதியோர் கல்வி வகுப்புக்கு வருபவர்கள் கூட்டமாகச் சேர்ந்து புகை பிடித்தல், கலகலப்பாக ஒருவருடன் ஒருவர் பேசிப் பழகுதல் போன்று குதூகலமாகப் பொழுது போக்கவும் முடிகிறது. ஆனால் வீணான வம்புப் பேச்சுக்களுக்கு அங்கு இடம் கிடையாது. மாறாக மகாபாரதம், ராமாயணம் போன்ற புராண இதிகாசக் கதைகளைக் கேட்டுப் பயன்பெற வாய்ப்புண்டு. முதியோர் கல்வி மூலம், ஓரளவு தேர்ச்சி பெற்றவர்கள் இத்தகைய கதைப் புத்தகங்களை பக்தி பாவத்துடன் படிக்க மற்றவர்கள் ரசித்துக் கேட்பர். சில சமயம் இவர்கள் ஏழெட்டு பேர் சேர்ந்து பஜனை செய்வதும் உண்டு.

பழைய போக்கு மாறுகிறது—புதுத் தெளிவு பிறக்கிறது.

சமூகக் கல்வி நிலையம் வேறு வகையிலும் பயன்படுகிறது. அங்கு கூடும் கிராமவாசிகள் தங்கள் பிரச்னைகளைச் சொல்லி விவாதிக்கின்றனர். பயிர்களை அழிக்கும் பூச்சிகளை எப்படி ஒழிப்பது, என்னென்ன மருந்துகளை உபயோகிக்கவேண்டும் என்பனபோன்ற தகவல்களை விவசாயிகள் கேட்டுத் தெரிந்து கொள்கின்றனர். அதேபோல் உணவு உற்பத்தியைப் பெருக்குவது சம்பந்தமான நவீன விஞ்ஞான முறைகளைத் தெரிந்து கொள்வதிலும் அவர்கள் அக்கறை காட்டுகின்றனர். இவ்வாறு சமூகக் கல்வி நிலையம் என்பது வெறும் பொழுது போக்குக்குரிய இடமாக இல்லாமல், அங்கு முதியோர் கல்வி பெறவும், தங்கள் அன்றாட பிரச்னைகளுக்கு ஒரு தீர்வு அல்லது தெளிவு காணவும் வாய்ப்பளிக்கும் இடமாகவும் இருப்பதால் இந்த நிலையம், நாளுக்கு நாள் கிராம மக்களிடையே முக்கியத்துவம் பெற்று வருகிறது இந்த நிலையத்தின் மூலம், அவர்கள், நவீன உலகின் ஒளியை மெல்ல மெல்லப் பெற்றுவருகிறார்கள் என்றால் மிகையாகாது. ஆகையால், கிராம மக்களின் பழங்கால போக்குகளை மாற்றி, நவீன உலகுக்கு அவர்களை அழைத்துச் செல்ல, சமூகக் கல்வி நிலையம் போன்றவற்றின் பணி அவசியம் என்ற கருத்து மெய்ப்பிக்கப்பட்டு வருகிறது.

பஞ்சாயத்து வசூலிக்கும் வரித்தொகை வெளியே எங்கும் செல்வதில்லை ; மாறுக தங்களுக்கே, தங்கள் நன்மைக்காகவே செலவு செய்யப்படுகிறது என்பதை நன்கு உணர்ந்த கிராம மக்கள், ஏற்கனவே இருந்த வரியைவிட அரைபங்கு....

# அதிக வரி செலுத்த முன்வருகிறுர்கள் !

ஹைதரா்பாத் மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு சிறு கிராமம், கெரெவெள்ளி. அங்கு சுமார் 1,500 மக்கள் வாழ்கிறுர்கள். 'கெரெ' என்ற கன்னடச் சொல்லும், 'வெள்ளி' என்ற தெலுங்குச் சொல்லும் சேர்ந்து உருவான பெயர் கெரெ வெள்ளி. பளிங்குபோன்று தெளிந்த நீருடைய குளம் என்று பொருள். பெயருக்கு ஏற்ப, சமுதாய நலத் திட்டத்தின் கீழ் எதிர்பார்க்கப்படும் பணிகள் எல்லாம் இங்கு செவ்வனே நடைபெற்றுவருகின்றன.

இத்தகைய முன்னேற்றம் கண்டுவரும் கெரெ வெள்ளி, ஆந்திர பிரதேசத்தைச் சேர்ந்த தெலிங்காளு பிராந்தியத்திற்குள் மிகச் சிறந்த கிராமமாக 1963-ல் தேர்ந்தெடுக்கப்பட்டு, மாநில அரசாங்கத்திடமிருந்து ரூ. 15,000 ரொக்கப் பரிசு பெற்றது.

### பரிசுக்குரிய தகுதிகள்

கெரெவெள்ளி, பரிசுக்குரிய தனது தகுதியைப் பலவகைகளில் நிரூபித்துக் காட்டியிருக்கிறது. தெலிங்காளு பிராந்தியத்தைச் சேர்ந்த ஒன்பது மாவட்டங்களில், கெரெவெள்ளி பஞ்சாயத்து ஒன்றுதான் 100-க்கு 100 வரி வசூல் செய்தது. வரிப் பாக்கி இல்லை என்பது மட்டுமல்ல ; அக்கிராமத்தில் ஒருவரும் காலங்கடந்து வரி செலுத்தியதும் இல்லை. அத்துணை ஒழுங்குடன் வரி வசூல் நடந்திருக்கிறது. இக்கிராமத்தில், 186 கலவை எருக்குழிகள் வெட்டப்பட்டன. இந்த அளவுக்கு, தெலிங்காளு பிராந்தியத்தில் வேறு எந்தக் கிராமத்திலும், குறிப்பிட்ட ஆண்டில், குழிகள் வெட்டப்படவில்லை. கிராம பஞ்சாயத்து "பாங்கு," ஒன்று, இங்கு நல்ல முறையில் இயங்கி வருகிறது; நவீன விவசாயக் கருவிகள், ரசாயன உரங்கள், இதர விஞ்ஞான சாதனங்கள் முதலியவற்றைப் பயன்படுத்துவதிலும் கெரெவெள்ளி முன்னணியில் நிற்கிறது. இவை மட்டுந்தானு ? இந்தச் சின்னஞ் சிறிய கிராமத்தில், வெல்ல உற்பத்திக்காக கூட்டுறவு தொழில் சங்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய பணிகளைச் செம்மையாகச் செய்வதில் உண்மையான ஆர்வமும் அக்கறையும் கொண்ட பஞ்சாயத்து உறுப்பினர்கள் பஞ்சாயத்து கூட்டங்களுக்குத் தவறுமல் வருகிறுர்கள். அவர்களது 'ஆஜர்' அளவைக் கணக்கிட்டால், சராசரி 95 சதவிகிதம் என்றுகிறது. இதுவும் ஒரு சாதனை என்பதில் ஐயமில்லை.

அவசியமான, அவசரமான காரியங்களில் கெரெ வெள்ளி மக்கள் எவ்வளவு துடிப்புடன் செயல் படுகிறுர்கள் என்பதற்கு ஒரு உதாரணம், ஹைதராபாத்—பம்பாய் ரயில் மார்க்கத்திலுள்ள விகாராபாத் ரயில் நிலையத்திற்கு தங்கள் கிராமத்திலிருந்து இணைப்புச் சாலையை மிகத் துரிதமாகப் போட்டு முடித்ததாகும். இதில் துடிப்பு, வேகம் காட்டிய அவர்கள் இந்த நான்கு மைல் சாலையைப் போடுவதற்கான செலவில் நான்சில் ஒரு பகுதியை நன்கொடையாக அளித்தார்கள்.

சீன ஆக்கிரமிப்பை யொட்டி, தேசிய நெருக்கடி ஏற்பட்டபோது, அன்றைய அவசரப் பணிக்குத் தங்கள் பங்காக, தலைக்கு ஒரு ரூபாய் வீதம் மொத்தம் ரூ. 1,425 நிதி தந்தனர் இக் கிராம மக்கள்.

### பஞ்சாயத்துத் தலைவரின் அடக்கம்.

இத்துணை காரியங்களைச் சீரும் சிறப்புமாகச் செய்வதற்கு, கிராம சுய ஆட்சி இங்கு தழைத்தோங்குவதற்கு ஒரு முக்கிய காரணம் கெரவெள்ளி மக்கள் அனைவரும் ஒற்றுமையாக, தங்களுக்குள் கோஷ்டிப் பிளவுகள் ஏதுமின்றி இருப்பதும், பஞ்சாயத்துத் தலைவரிடம் அசையா நம்பிக்கையும், மிகுந்த மதிப்பும் கொண்டிருப்பதும்தான் என்று பிளாக் அபிவிருத்தி அதிகாரி திருப்தியுடன் கூறுகிறுர்.

ஆனுல், அசல் கிராமவாசியும், விவசாயியுமான பஞ்சாயத்துத் தலைவரோ, தற்பெருமை கடுகளவும் இல்லாமல்,"இந்த சாதனைக்கெல்லாம் காரணம் எனக்கு உற்றத் தோழர்களாக அமைந்த ஆறு பஞ்சாயத்து உறுப்பினர்களும், எனக்கு எந்த நேரத்திலும் அளிக்கும் மனப்பூர்வமான ஒத்துழைப்புதான்'' என்கிறுர். அவர், பஞ்சாயத்

(34-ம் பக்கம் பார்க்க)

# நேருஜி விரும்பிய இலட்சிய கிராமக் கூட்டுறவு

"சுய சக்தியால் இயங்கக்கூடிய பொருளாதாரப் புரட்சி கிராமங்களில் ஏற்படுவதற்கான பலமுள்ள அஸ்திவாரத்தை கிராமப் பஞ்சாயத்து, பள்ளிக்கூடம் இவற்றின் துணைக்கொண்டு கிராமக் கூட்டுறவு மூலம் நிறுவ முடியும். ஆனால் அதற்குரிய கூட்டுறவு எத்தன்மையதாய் இருக்கவேண்டும் ? விவசாய உற்பத்தி பெருகுவதற்கான எல்லாத் தேவைகளையும் மக்களின் அன்றாட தேவைகளையும் நேர்மையான முறையில் திறமையாக வழங்கக்கூடிய பல்நோக்கு பணிகொண்ட கூட்டுறவாக இருத்தல் வேண்டும். நான் கனவு காணும் உண்மையான கிராமக் கூட்டுறவு இது தான்!" என்று மறைந்த தலைவர் நேருஜி ஒருமுறை டில்லிக்கருகில் கூட்டுறவாளர்கள் கூட்டம் ஒன்றில் கூறினர்.

நாட்டின் தலைநகரான டில்லியிலிருந்து 22 மைல் தூரத்தில், அலிபூர் பிளாக்கைச் சேர்ந்த கோகா என்ற கிராமம் இருக்கிறது. அங்கு நேருஜி கனவு கண்ட கிராமக் கூட்டுறவின் அம்சங்கள் எல்லாம் நிறையப்பெற்ற கூட்டுறவுச் சங்கம் ஒன்று செயல்பட்டு வருகிறது.

இக்கிராமம் அங்கம் வகிக்கும் அபிவிருத்தி வட்டாரத்தின் தலைமைக் கிராமமான அலிப்பூர், ஒரு வகையில் தனிச்சிறப்பு பெற்றதாகும். இந்தியாவிலேயே சமுதாய நல அபிவிருத்தித் திட்டம் முதன் முதலில் (1952, அக்டோபர் 2) அமுலானபோது அதற்கான துவக்கவிழா அலிப்பூரில்தான் நடைபெற்றது. அப்போது, இந்த இயக்கத்தை நாட்டுக்கு அர்ப்பணித்து பேசிய நேருஜி, "நாட்டின் பொருளாதார வாழ்வில் ஒரு புதிய புரட்சிக்கு வழி காட்டும் ஒளியை, இக் கிராமம் உமிழும் என நம்புகிறேன்" என்று கூறினர்,

அதுமுதல், அலிப்பூர் கிராமம், கிராமப்புனருத்தாரணத்திற்கான பல வேலைத் திட்டங்களுக்கு ஒரு பரிசோதனைக் கூடமாக இருந்து வருகிறது, அந்த முறையில கிராமக் கூட்டுறவு சம்பந்தமாகவும் பரிசோதனைகள் நடந்து இருக்கின்றன.

### நெடுநாட்களுக்கு முன்னதாகவே....

இவையெல்லாம் ஆரம்பமாவதற்கு நெடுநாட்கள் முன்னதாகவே, கோகா கிராமத்தில் கூட்டுறவு சங்கம் ஒன்று இயங்கிவருகிறது. அது ஒரு கடன் வழங்கும் சங்கமாக 1937-ல் பதிவாயிற்று. அப்போது அதில் 13 உறுப்பினர்களே இருந்தனர். மொத்த பங்கு மூலதனம் ரூ. 130 தான். வேறு பல கடன் வழங்கும் சங்கங்களைப் போன்றே, இதுவும் தன் உறுப்பினர்களுக்குச் சிறுசிறு கடன்களை விநியோகிக்கும் ஒரு சின்னஞ்சிறிய சங்கமாகவே 1947 வரை இருந்துவந்தது.

பிறகு கூட்டுறவு சங்கங்களைப் பலப்படுத்தும், புத்துயிர் ஊட்டும் திட்டத்தின் கீழ் இச்சங்கமும் உதவி பெற்றது. அதன் பலனாக சங்க உறுப்பினர்களுக்குக் கடன், நிதி உதவிகள் ரூ. 7,000 வரை அளிக்கப்பட்டது. 1957-ல் பலநோக்குச் சங்கமாக விரிவுபடுத்தப்பட்டு, அதன் பங்கு மூலதனத்தில் அரசாங்கம் ரூ. 10,000 முதலீடுசெய்தது பிறகு 1961-ல் பஸ் போக்குவரத்து நடத்த சங்கம் அனுமதிக்கப்பட்டது, இந்த முறையில் ஜோகாவுக்கும் டில்லிக்குமிடையே ஒரு பஸ் விடப்பட்டது. மறுபடி 1964 ஜூலையில் நரேலாவுக்கும் பஹாதுர் காருக்குமிடையே பஸ் போக்குவரத்து நடத்த, சங்கத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது.

இவ்வாறு அலுவல்களைப் பெருக்கிக்கொண்டு வந்த கோகா கிராமக் கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர் எண்ணிக்கை இப்போது 218 ஆக உயர்ந்திருக்கிறது. கிராமத்திலுள்ள எல்லா விவசாயக் குடும்பங்களும் இதில் அங்கம் வகிக்கின்றன. சங்கத்தின் செலுத்தப்பட்ட மூலதனம் (அரசாங்கம் கொடுத்துள்ள ரூ. 10,000ஐயும் சேர்த்து) ரூ. 30,000 ஆக ஆகியிருக்கிறது. சங்கத்திடம் இப்போது ரூ. 70,000 வரை மொத்த நிதியிருக்கிறது. ஆண்டுக்கு ரூ. 4 லட்சத்திற்குமேல் பண அலுவல்கள் நடக்கின்றன. ரூ. 40,000 வரை உறுப்பினர்களுக்குக் கடன் வழங்கிய சங்கம், உறுப்பினர்களிடமிருந்து ரூ. 42,000க்கு மேல் டிபாசிட் பெற்றிருக்கிறது. 1963-64ம் ஆண்டில் ரூ. 16,056 நிகர வருமானம் கிடைத்திருக்கிறது.

### இந்தியாவிலேயே..

பகுதி நேர ஊழியர்கள் இரண்டொருவரைக் கொண்டு நடக்கும் கிராமக் கூட்டுறவுகளே, நாட்டில் மிகச் சொற்பம். ஆனல் கோகா சங்கத்திலோ முழுநேர ஊழியர்கள் 21 பேரும், பகுதி நேர ஊழியர்கள்9 பேரும் வேலை செய்கிருர்கள்!

சங்கத்திற்குச் சொந்தமாக மாவு அரைக்கும் மில் ஒன்றும், கரும்பாட்டும் ஆலை (இயந்திரம்) ஒன்றும், வெல்லம், சர்க்கரை உற்பத்திக்கான இயந்திர சாதனங்களும், மற்றும் கத்தி சாணைப் பிடிப்பது போன்ற கருவிகளும், பஞ்சு அடிக்கும் ஆலையும் இருக்கின்றன. இவை தவிர விவசாயத்திற்குத் தேவைப்படும் நவீன கருவிகள், பொறுக்கு விதைகள், ரசாயன உரம், பூச்சி மருந்துகள், மண்ணெண்ணெய், மற்றும் மக்கள் உபயோகப் பொருள்கள் பலவற்றையும் சங்கம் வியாபாரம் செய்கிறது. உண்மையில் சொல்லப்போனால், கிராம மக்களுக்குத் தேவைப்படும் பலதரப்பட்ட பொருள்களையும் வழங்க சங்கம் முயற்சிக்கிறது. குறிப்பாக, உற்பத்தி பெருகுவதற்கு வேண்டிய விவசாய உதவி சாதனங்களைத் தேடித் தருவதில் சங்கம், விசேஷ அக்கறை எடுத்துக்கொள்கிறது.

### லாபத்தைக்கொண்டு பொதுப் பணிகள்

சங்கம், தன் அலுவல்கள் மூலம் கிடைக்கும் லாபத்தைக் கொண்டு, கிராமத்தின் பொது நன்மைக்கான முக்கிய பணிகளைச் செய்து முடிக்கிறது. உதாரணமாக, பிரதான சாலையுடன் கிராமத்தை இணைக்க, தரமான சாலையொன்றை நிர்மாணித்தது. அதேபோல் கிராம வீதிகளில், செங்கல்—சுண்ணும்பு கட்டுமானத்துடன் கூடிய நடைபாதைகளை அமைத்துத் தந்திருக்கிறது. கிராமத்திற்கு அருகில் பிரதான நெடுஞ்சாலை வழியாகச் செல்பவர்களுக்கு குளிர்ந்த குடிநீர் வழங்க ஏற்பாடு செய்திருக்கிறது. கிராமத்தில், துவக்கப்பள்ளிக் கான கட்டடம் கட்டுவதில் சங்கம் உதவி அளித்திருக்கிறது.

இன்னும், எத்தனை எத்தனை போற்றத்தக்க பணிகள்? சங்க அலுவலகத்தில், 20 வசதியான படுக்கைகள் இருக்கின்றன. அவை, சங்க உறுப்பினர்களின் விருந்தினராக கிராமத்திற்கு வரும் வெளியாரின் உபயோகத்திற்காகத் தரப்படுகின்றன. திருமணம் அல்லது வேறு விசேட காலங்களில் தேவைப்படும் பெரிய பெரிய பாத்திரங்கள் 100 (இப்படி இரண்டு செட்) சங்கத்திடம் இருக்கின்றன, இவை, உறுப்பினர்களுக்கு வேண்டும்போது தரப்படுகின்றன. ஏழை ஹரிஜனங்களுக்கு மெத்தை படுக்கைகளையும், போர்வைகளையும் சங்கம் இனமாக வழங்குகிறது. கிராமக் காவலுக்கென இரண்டு காவல்காரர்களை, சங்கம், தன் செலவில் வைத்திருக்கிறது. சங்கம் தான் நடத்தும் மாவு மில்லில் தானியங்களை அரைக்க, கிலோ ஒன்றுக்கு 1 காசு வீதம் குறைந்த கட்டணமே வசூலிக்கிறது. வெளியில் இந்தக் கட்டணம் 2 காசு முதல் 3 காசு வரை இருக்கிறது. கிராம விவசாயிகள் உற்பத்தி செய்யும் கரும்பை, 40 கிலோவுக்கு ரூ. 2·50 வீதம் சங்கம் வாங்கிக் கொள்கிறது. சர்க்கரை ஆலைகளிலோ ரூ. 2·00 வீதம் வாங்கப்படுகிறது. சங்கக் கட்டிடத்தில் வாசக சாலையும், வானொலி பெட்டியும் இருக்கின்றன. இவற்றை கிராம மக்கள் அனைவரும் தாராளமாக அனுபவிக்கலாம்.

### உறுப்பினர்களுக்கு விசேஷ சலுகைகள்

இவ்வாறு, கிராமத்திற்குப் பொதுச் சேவை புரிந்துவரும் சங்கம், தன் உறுப்பினர்களுக்குச் சில விசேஷ வசதிகளைச் செய்து தருகிறது. உதாரணமாக பற்றுக்குறையாக, தட்டுப்பாடாக உள்ள பொருள்களை வழங்குவதில் உறுப்பினர்களுக்கு முதற் சலுகை காட்டப்படுகிறது. அதேபோல் பொறுக்கு விதைகள், ரசாயன உரங்கள் விஷயத்திலும் உறுப்பினர்களுக்குச் சலுகை உண்டு. சங்கத்திற்குச் சொந்தமான பஸ்களில், உறுப்பினர்கள் குறைந்த தூரங்களுக்கு, கட்டணம் ஏதும் இல்லாமல் சென்று வரலாம்.

பொதுப் பணி 'ஆசை'க்கு அளவேது? கூட்டுறவு விவசாயப் பண்ணை ஒன்றையும், காய்கறி பண்ணை ஒன்றையும், நடத்த சங்கம் திட்டமிட்டிருக்கிறது. உறுப்பினர்கள் கால்நடை, கோழிப் பண்ணைகள் நடத்தவும், சிறிய அளவில் தொழில் கூட்டுறவுகள் ஆரம்பிக்கவும் சங்கம் ஊக்கம் அளித்து வருகிறது. கோகா கிராமத்திலோ, அதன் சுற்றுப்புறத்திலோ உள்ள எவருக்கும் படிப்பு வசதி கிடைக்காமற் போகக்கூடாது என்ற உயர்ந்த எண்ணம் கொண்ட சங்கம், உள்ளூர் பள்ளியில் படிக்கும் ஏழை மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம், புத்தகங்கள் வழங்கவும் யோசித்து வருகிறது.

நேருஜியின் கனவை நனவாக்க இன்னும் என்ன வேண்டும்? அதையும் செய்யத் தயார் என்பது போல், வீறு கொண்டு நிற்கிறது கோகா கிராமக் கூட்டுறவு.

---

"பஞ்சாயத்து ராஜ்" இதழிலிருந்து இடம் பெறுபவை :
பக்கங்கள் ; 8, 9, 10, 11, 28, 29, 30, 31 (8 பக்கங்கள்)
Reproduced from "Panchayati Raj" on pages 8, 9, 10, 11, 28, 29, 30 and 31 (8 pages)



# விவசாய உற்பத்திப் பெருக்கமும் மண்வளப் பாதுகாப்புத் திட்டமும்



(திரு. வி. கக்கன், விவசாய அமைச்சர்)

[மாநில வேளாண்மை ஆலோசனைக் குழுவின் (State Agricultural Advisory Board) கூட்டமும், நில அபிவிருத்திக் குழுவின் (State Land Improvement Board) கூட்டமும் கோவில்பட்டியில் 1965-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 9-ம் தேதி நடைபெற்றன. இவ்விரு கூட்டங்களையும், விவசாய அமைச்சர் திரு. பி. கக்கன் அவர்கள் துவக்கி வைத்துப் பேசுகையில், மண்வளப் பாதுகாப்பின் அவசியத்தைப் பற்றியும், தமிழ்நாட்டில் அண்மையில் நடைபெற்றுள்ள விவசாய அபிவிருத்திக்கான வேலைத் திட்டங்கள் பற்றியும், சுருக்கமாகவும் தெளிவாகவும் எடுத்துரைத்தார். அவருடைய பேச்சுக்களின் சாரத்தை, கீழே கொடுத்துள்ளோம்—ஆசிரியர்.]

### உற்பத்திப் பெருக புதிய முயற்சிகள்

விவசாய உற்பத்தி பெருகுவதற்கான வழி வகைகள் ஆராயப்பட்டு, கடந்த ஓர் ஆண்டில் அதற்கான வேலைத் திட்டங்கள் பல மேற்கொள்ளப் பட்டுள்ளன. எல்லாவற்றையும் விவரிக்கத் தேவை யில்லை. சுருக்கமாக, விவசாய அபிவிருத்தி வேலை களாக கீழ்க்கண்டவற்றைக் குறிப்பிடலாம்.

ஜப்பானிய இந்திய ரகங்களில் கருச்சேர்க்கை யினால் ஆடுதுறை ஆராய்ச்சி நிலையத்தில் கண்டு பிடிக்கப்பட்ட ஏ.டி.டீ. 27 என்ற உயர்வள ரக நெல் வெளியிடப்பட்டுள்ளது. 1965-ல் பெரு மளவில் இந்த ரக விதைப் பெருக்கத்திற்கு அரசாங்கம் திட்டம் வகுத்துள்ளது. குறுவையில் 5,000 ஏக்கர் விதைப் பண்ணை மூலம் தஞ்சாவூர், தென் ஆற்காடு, திருச்சி மாவட்டங்களில் உள்ள 2 லட்சம் ஏக்கருக்கு 1966-ல் விநியோகிக்க ஏற்பாடாகியுள்ளது. இப் பகுதிகளில் சாகுபடி செய்யப்படும் ஏ.டி.டீ. 20 ரகத்திற்கு பதிலாக இது பயிரிடப்படும். இந்த ரகம் அதிக அளவு ரசாயன உரத்தை தாங்குவதுடன் ஏக்கருக்கு சராசரி 1,800 கிலோ கிராம் மகசூல் கொடுக்கிறது. இது ஏ.டி.டீ. 20 மகசூலை விட இரண்டு மடங்கு அதிகம். ஏ.டி.டீ. 3-ம் சைனு ரகம் கருச்சேர்க்கை ஆராய்ச்சி ஆடுதுறையில் முடிவடையும் தறுவாயில் இருக்கிறது. இது மற்றொரு குறுகிய காலப் பயிராகும். வீரிய சோளம் விதைப் பெருக்கத்திலிருக்கிறது. கோவில் பட்டி ஆராய்ச்சி நிலையத்திலிருந்து கே. 7 என்ற புதிய பருத்தி ரகம் வெளியிடப்பட்டுள்ளது. மானு வாரியாக கம்போடியா பருத்தி பயிரிடப்படும் கரிசல் மண் நிலங்களுக்கு இது ஏற்றது. மற்ற மட்ட கம்போடிய ரகங்களுக்கு பதிலாக இது பயிரிடப் படும். ரஷ்ய பருத்தி ரகத்தை தஞ்சாவூர், கோயம் புத்தூர் ஜில்லாக்களில் தரிசு-நெல் வயலில் காவிரி டெல்டாவிலும், கீழ் பவானி திட்ட பகுதியிலும் பெருமளவில் பரிசோதனையாக பயிரிட முடிவு செய்யப் பட்டுள்ளது. மானுவாரி—பாசன பயிர்களுக்கு பரவ கீழ்பவானி பாசனத் திட்ட பகுதியில் டிசம்பர்—மார்ச்சில் 40,000 ஏக்கரில் படிப்படியாக நிலக் கடலை பயிரிட முடிவு செய்யப்பட்டுள்ளது. பண்ணைத் திட்டம் தயாரித்து, வேண்டிய பணவசதி பொருளாகவும், பணமாகவும் கொடுக்கப்படும்.

1,000 வடிமுனைக் குழாய் இறக்க ஒரு அதி தீவிர திட்டம் தஞ்சாவூர் ஜில்லாவில் ஒப்புறுதி பெற்று வேலை நடந்து கொண்டிருக்கிறது.

செங்கல்பட்டு, கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி ஜில்லாக்களில் தீவிரமாக நெல், சிறு தானியங்கள் உற்பத்தி செய்ய சமீபத்தில் அரசாங்கம் உத்திரவிட்டுள்ளது. இதன் முக்கிய மான குறிக்கோள் தழை உரம், மண்சத்து, தொழு உரங்கள் அதிகமாக உபயோகிக்கப்பட வேண்டும் என்பது. மேற்கூறிய நான்கு மாவட்டங் களிலுள்ள வட்டார வளர்ச்சி பகுதிகளில் பண்ணைத் திட்டம், பணவசதி முதலியன படிப்படியாக அமுலில் வரும். பழங்கள், காய்கறிகள், உருளைக் கிழங்கு உற்பத்தியைப் பெருக்கி உள்நாட்டு தேவையை பூர்த்தி செய்வதுடன் வாழை ஏற்றுமதியின் மூலம் அந்நிய செலாவணி பெறவும் கீழ்க்கண்ட திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன ;—

1. தென் ஆற்காடு, திருச்சி, கோயம்புத்தூர், மதுரை மாவட்டங்களில் வாழை உற்பத்தி பெருக்கு திட்டம்.
2. கொடைக்கானலில் உருளைக்கிழங்கு உற்பத்தி தீவிரப்படுத்தி புதிதாக 1,000 ஏக்கர் உருளைக்கிழங்கு பயிர் செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

3. ஈரோடு, சேலம், வேலூர், தஞ்சாவூரிலும் தற்போதுள்ள காய்கறி உற்பத்தி திட்டத்தை சென்னை, மதுரை, கோயம் புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல் வேலி நகரங்களிலும், கன்னியாகுமரி மாவட்டத்தின் பகுதிகளிலும் விரிவாக்கும் திட்டம்.

4. மலைப் பகுதிகளில் பயிராகும் காய்கள் நீலகிரி, கொடைக்கானல், சேர்வராயன் மலைப் பகுதிகளில் அதிகரிக்கத் திட்டம்.

இதைத் தவிர பவானிசாகர், கூனூரில் காய்கறி விதை உற்பத்தி நிலையம் அமைக்க திட்டமிடப் பட்டுள்ளது. மதுரையில் பழம் பக்குவப்படுத்தும் நிலையம் ஒன்றை அமைக்கவும், காய்கறி உற்பத்தியை சென்னை, மதுரை நகர சுற்றுப் புறங்களில் அதிகரிக்க தீவிர உற்பத்தி திட்ட அடிப் படையில் திட்டமிடப்பட்டு இந்திய அரசாங்கத்தின் பரிசிலனையிலுள்ளது.

(மாநில வேளாண்மை ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் பேசியது.)

## மண்வளப் பாதுகாப்பு

தமிழ் நாட்டில் நில அரிப்புப் பிரச்சினை மிகக் கடுமையாக உள்ளது, சாகுபடியின் கீழுள்ள சுமார் 100 லட்சம் ஏக்கர் புஞ்சை நிலங்கள் பற்பல அளவுகளில் மண் அரிப்பினால் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த நிலங்களின் பெரும் பகுதியில் 5 அங்குல ஆழத்திற்கும் குறைவாகவே உழுது சாகுபடி செய்ய முடிகிறது. ஏறக்குறைய 5 லட்சம் ஏக்கர் நிலங்கள் உவர் நிலங்களாகவும், களர் நிலங் களாகவும் அல்லது சதுப்பு நிலங்களாகவும் உள்ளன. இரண்டு லட்சம் ஏக்கராவுக்கு மேற்பட்ட நிலங்கள் ஆங்காங்கு ஆழமான மலைப் பிளவுகளால் அறுத்துக் கொண்டு போகப்பட்டுள்ளதாக மதிப்பிடப் படுகிறது. தஞ்சாவூர், திருநெல்வேலி, இராமநாத புரம், தென் ஆற்காடு மாவட்டங்களின் கடலோரப் பகுதிகளில் பெரும்பாலான நிலங்கள் மண் மேடிட்டோ, உவர் நிலமாகவோ, சதுப்பு நில மாகவோ உள்ளன. காற்றினால் அரிக்கப்படும் நிலங்கள் நம் மாநிலத்தில் உள்ள எல்லா மாவட்டங்களிலும், குறிப்பாகப் போடிநாயக் கனூரிலும், ஆற்றங்கரைகள் நெடுகவும் பரவலாக அமைந்துள்ளன.

இத்தகைய நிலச் சிக்கல்கள் அனைத்திற்கும் நாம் தீர்வு காண வேண்டியிருக்கிறது. மதுரை மாவட்டம், போடிநாயக்கனூரில் காற்று அரிப்புப் பகுதிகளில் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளன. மதுரை மாவட்டத்தில் பாதிக்கப் பட்ட பகுதிகள் அனைத்திலும் காப்பு ஏற்பாடுகளை மேற்கொள்வதுபற்றி அரசாங்கம் ஆலோசனை செய்து வருகிறது. மலைப் பிளவுகளில் நில மீட்பு வேலை தென் ஆற்காடு மாவட்டத்தில் சிறியதொரு பகுதியில் 1964-65-ல் துவக்கப்பட்டது. பல்வேறு மாவட்டங்களில் மலைப் பிளவுகளினால் பாதிக்கப் பட்ட பகுதியை சர்வே செய்யும் வேலை தொடர்ந்து நடந்து வருகின்றது. சேலம் மாவட்டம், கிருஷ்ண கிரியில் உவர் நிலம், களர் நிலம், சதுப்பு நிலம் ஆகியவற்றைச் சாகுபடிக்கேற்ற நிலமாக்குவதற் கான முன்னோடித் திட்டம் ஒன்று 100 ஏக்கரா நிலத்தில் துவக்கப்பட்டுள்ளது. கடலோரப் பகுதிகளில் சர்வே செய்வதற்காகவும், அங்குள்ள நிலங்களை சாகுபடிக்கேற்றவையாய்ச் செய்வதற் கான வழிவகைகள்பற்றி ஆலோசனைகள் கூறவும் குழு ஒன்றை அமைப்பதுபற்றி அரசாங்கம் ஆலோசனை செய்து வருகிறது. இவ்வாறாக, நில அரிப்பு குறித்து பல்வேறு சிக்கல்களுக்குத் தீர்வு காணவும், மென்மேலும் நிலங்களை நல்ல முறையில் சாகுபடிக்குக் கொண்டுவந்து உற்பத்தியைப் பெருக்கவும் முயற்சி செய்யப்பட்டு வருகிறது.

நிலம் ஆழமாக அறுத்துக்கொண்டு போகப்படும் வரையில் அல்லது பெரிய மணல் மேடுகள் ஏற்படுகிற வரையில், இந்த நில அரிப்புச் சிக்கல் நமக்கு எளிதாகவே தோன்றும். ஆனால் இச் சிக் கல்களை ஆழ்ந்து சிந்தித்தால், உழவர்களுக்கு இடையூறாகவுள்ள சில சிக்கல்களைப் போலவே இவற்றிற்குத் தீர்வு காண்பதும் அவ்வளவு எளிதல்ல என்று தோன்றும். எனவே, வேளாண் மையின் இந்த அம்சத்திற்கு நாம் மிகமிக முக்கியத்துவம் அளிக்க வேண்டியிருக்கிறது.

### 1952 முதலே நடவடிக்கை

மண் அரிப்புத் தடுப்பு வேலைகளைத் தவிர தரிசு நிலம், உவர் நிலம், களர் நிலம் இவற்றைச் சாகுபடிக்கேற்றவையாகச் செய்தல், வடிகால் வசதிகள் செய்தல், பயன்படுவதற்கேற்ப நிலங்களை வகைப்படுத்துதல், மண்வளப் பாதுகாப்புப் பண்ணை முறைகளைக் கையாளுதல் ஆகியவையும் மண்வளப் பாதுகாப்பில் அடங்குகின்றன. இந்த வேலைகளெல்லாம் சாகுபடி செய்யத்தக்க நிலங் களுக்கும், சாகுபடி செய்யத் தகாத நிலங்களுக்கும் அவசியமாகும். இம் மாநிலத்திலுள்ள பயிரிடும் நிலங்களில் மண்வளப் பாதுகாப்பும், நீர்வளப் பாது காப்பும் செய்ய வேண்டிய அவசியத்தை உணர்ந்து மண்வளப் பாதுகாப்புத் திட்டங்களும், நீர்வளப் பாதுகாப்புத் திட்டங்களும் 1951-52-ம் ஆண்டிலேயே தொடங்கப்பட்டன. முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 17,000 ஏக்கர் நிலம் மண் அரிப்பினின்றும் பாதுகாக்கப்பட்டது. இரண்டாவது திட்டக் காலத்தில் சமவெளியில் 1,22,000 ஏக்கர் நிலங்களும், மலைப் பகுதிகளில் 8,305 ஏக்கர் நிலங்களும் மண் அரிப்பினின்றும் பாதுகாக்கப்பட்டன. மூன்றாவது திட்டக் காலத்தில் 11,500 ஏக்கர் நிலம் மலைப் பகுதி

களிலும், 3,05,000 ஏக்கர் நிலம் சமவெளிப் பகுதிகளிலும் மண் அரிப்பிலிருந்து பாதுகாக்கப் படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நான்காவது திட்டக் காலத்தில் ஆண்டுதோறும் சுமார் 2 லட்சம் ஏக்கர் நிலங்களை மண் அரிப்பினின்றும் பாதுகாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது, மூன்றாவது திட்டத்தில் மண்வளப் பாதுகாப்பிற்காக ரூ. 210·00 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது: ஆனல், நான்காவது திட்டத்தில் ரூ. 652·5 லட்சம் ஒதுக்கலாமென்று உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### மண்வள ஆய்வுத் திட்டம்

மண்ணின் பௌதிக, ரசாயன குணங்கள் இவற்றை விரிவாக அறியவும், நிலத்தின் திறனிற்கேற்ப நிலங்களைத் தரம் பிரிக்கவும், பயன்படுத்த வேண்டிய உரங்களின் அளவு, மேற்கொள்ள வேண்டிய உழவு முறைகள், மண்வளப் பாதுகாப்பு, நில மீட்பு முறைகள் ஆகியவை குறித்து விரிவாக அறியவும், மண்வள ஆய்வு நடத்த வேண்டியிருக்கிறது, ஆனல் முன்பெல்லாம் நடத்தப்பட்டு வந்த மண்வள ஆய்வு குறிப்பிட்ட சில காரியங்களுக்காகவே நடத்தப்பட்டது. உதாரணமாக, ஒரு நிலம் பாசனத்திற்கு ஏற்றதா, உவர் நிலங்களைப் பண்படுத்த முடியுமா, நிலத்திற்குப் போட வேண்டிய உர அளவு என்ன என்பவை போன்றவற்றிற்காகவே மேற்கொள்ளப்பட்டது. இதுவரை மாநிலம் முழுவதற்கும் பயன்படும் வகையில் பொதுவான மண்வள ஆய்வு எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. வேளாண்மை உற்பத்திப் பெருக்கத்திற்கு இத்தகைய ஆய்வு செய்வது இன்றியமையாததாகும். எனவே தமிழ் நாட்டின் பற்பல மாவட்டங்களில் விரிவான மண்வள ஆய்வு வேலையை மேற்கொள்ள அரசாங்கம் அனுமதியளித்துள்ளது என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த மண்வள ஆய்வுத் திட்டத்தின் நோக்கங்களாவன :

1. நிலத்தின் முக்கிய மண்வள இயல்புகளை அறிதல்.

2. மண்வளத்தைப் பல்வேறு பிரிவுகளாகவும் தரங்களாகவும் பிரித்தல்.

3. பல்வேறு மண்வள வரம்புகளை நிச்சயிக்கப் படங்கள் தயாரித்தல்.

4. பற்பல வேளாண்மை முறைகள் எந்தெந்த வகை நிலங்களுக்கு ஏற்றவை என்பதை நிச்சயித்தல்

நமது அன்றாட வாழ்க்கைத் தேவைகளில் பெரும்பாலானவை மண்ணிலிருந்தே கிடைப்பதால், மண்வளம் நமது அடிப்படைத் தேவையாகும். அத்தகைய மண்வளத்தை நாம் தலைமுறை தலைமுறையாகப் பாதுகாக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். மண்வளம் பெருகினல்தான் நாட்டின் செழிப்பிற்கு ஆதாரமான நமது ஐந்தாண்டுத் திட்டங்கள் எல்லாம் நன்கு நிறைவேறும். நமது மாநிலத்தில் நில அரிப்பினல் பாதிக்கப்பட்டுள்ள பல்வேறு நிலங்களைக் காப்பதன் அவசியத்தை நாம் பலமுறை வலியுறுத்தத் தேவையில்லை. பயிராகும் நிலங்களில் தீவிரமாகச் சாகுபடி செய்யவும் பயிரிடுவதற்கேற்ற தரிசு நிலங்களை சாகுபடிக்குக் கொண்டுவரவும் நமது மாநிலத்தில் உணவு தானிய உற்பத்தியைப் பெருக்கவும் மண்வளப் பாதுகாப்பு ஒன்றுதான் சிறந்த வழியாகும்.

(நில அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் பேசிய பேச்சு)

---

29-ம் பக்கத் தொடர்ச்சி.

துப் பள்ளியில் படிக்கும் சிறுவர், சிறுமியர் 120 பேர்களுக்கு நண்பகல் உணவளிக்கும் ஐ.நா. நிறுவனத்திற்கும் (UNICEF) தம் நன்றி பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறார். கிராமத்தில் ஏற்பட்டுள்ள மாதர் சங்கத்தின் மூலம் கிராமப் பெண்களிடையே ஒரு புதிய ஒளி தோன்றியிருப்பதாக அவர் மகிழ்ச்சியுடன் குறிப்பிடுகிறார்.

இத்தனையையும் பெருமையோடு கூறும் பஞ்சாயத்துத் தலைவர், ஒருவித ஏக்கம் கலந்த ஆவலுடன், எங்களுக்கு மட்டும் "மின்சாரம் கிடைத்தால்......" என்று சொல்லி, எங்கோ பார்க்கிறார். ரயில் பாதைக்கப்பால், நகர் பகுதிகளில் மின்சார சக்தி துணைகொண்டு அங்கு காரியங்கள் பலப்பல எளிதாக, துரிதமாக நடைபெறுவதையும், அங்கு மக்கள் பலவசதிகளுடன் நவீன வாழ்க்கை நடத்துவதையும் மனக்கண்ணால் பார்ப்பதுபோல் தோன்றும் அவர் "ஆமாம், மின்சாரம் மட்டும் கிடைத்துவிட்டால், நாங்கள் இன்னும் எவ்வளவோ ஆரோக்கியமாக, வசதியாக மகிழ்ச்சியோடு வாழ்வோம் ;" என்கிறார்.

மாநில அரசாங்கம் தந்த ரூ. 15,000 ரொக்கப் பரிசைப்பற்றி குறிப்பிடும் அவர் அடுத்த ஆண்டில் இன்னும் சிறப்பாக நாங்கள் செயல்பட இப் பரிசு ஒரு சவாலும். அதே நேரத்தில் ஒரு நல்ல வாய்ப்பும் ஆகும்- ஆகையால், பரிசுக்கு உரியவர்களான நாங்கள் அதற்கேற்ற முறையில் நடந்துகொள்ள உண்மையான விருப்பம் கொண்டிருக்கிறோம். அதைச் செயல் முறையில் காட்ட எங்கள் கிராமத்திலுள்ள ஒவ்வொருவரும் மனப்பூர்வமாக, ஏகமனதாக ஒருமுறை செய்திருக்கிறோம். அதாவது நிலவரியையும், தொழில் வரியையும், இந்த ஆண்டு 50 சதவிகிதம் அதிகமாக செலுத்துவோம்," என்று உறுதியாகச் சொல்கிறார்.

ஆக, கெரவெள்ளி, 'சுய உதவியின் சின்னம் எனத் திகழ்கிறது. சமுதாய நல அபிவிருத்தித் திட்ட லட்சியங்கள், இங்கு ஒவ்வொன்றாக செயல் உருவம் எடுத்து வருகின்றன. எதிர்காலத்தில் இக் கிராமம், முன்னேற்றப்பாதையில், ஏறு நடை போடும் என்பதில் ஐயமில்லை. அடுத்த சந்ததியாரின் இதய பூர்வமான நன்றி வணக்கம், இன்றைய இக் கிராம மக்களுக்கு நிச்சயம் கிடைக்கத்தான் போகிறது.

"GRAMA NALAM"

கிராம நலம் பகுதி-2
GRAMA NALAM PART 2

பஞ்சாயத்து அரசிதழ்
PANCHAYAT GAZETTE

(பஞ்சாயத்து அபிவிருத்திபற்றி அரசாங்க ஆணைகள், விதிகள் முதலியவற்றின் சுருக்கம் இந்தப் பகுதியில் இடம் பெறுகிறது.)

# பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள்; தலைவர் தேர்தல் முடிவுகள்.

தமிழ்நாட்டில், ஏப்ரல் மாத இறுதியில் நடைபெற்ற பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் தலைவர்கள் தேர்தல் முடிவு விவரம் கீழே தரப்படுகிறது.

டவுன்ஷிப்பாக மாறுவது, கோர்ட்டில் வழக்கு இருப்பது முதலிய காரணங்களால் தேர்தல் நடைபெறாத இடங்களில் பெயர்களுக்கெதிராகக் கோடிட்டுக் காட்டப்பட்டிருக்கிறது.

உபதலைவர்கள் விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

## வடஆர்க்காடு மாவட்டம்

1. திருப்பத்தூர்—வி. கே. எஸ். மணி.
2. கந்திலி—எஸ். கே. ராஜகோபால்.
3. நட்டறம்பள்ளி—ஆர். சி. சாமண்ணக் கவுண்டர்.
4. ஆலங்காயம்—எம். பி. வடிவேல், எம்.எல்.ஏ.
5. காட்பாடி—ஜி. நடராஜன்.
6. குடியாத்தம்—ஏ. வெங்கடாத்திரி நாயுடு.
7. பேரணும்பட்டு—பி. எஸ். பாலாஜி நாயுடு.
8. கே. வி. குப்பம்—ஆர். ராமானுஜம்.
9. மாதனூர்—ஏ. கே. ராமமூர்த்தி.
10. அணைக்கட்டு—கே. முருகேசன்.
11. வேலூர்—எஸ். கந்தசாமி ரெட்டியார்.
12. கணியம்பாடி—கே. ஆர். செல்வமூர்த்தி.
13. ஆர்க்காடு—எம். ஜெயராமன்.
14. சோளிங்கபுரம்—ஏ. எம். பொன்னுரங்கம், எம்.எல்.ஏ.
15. வாலாஜா—ஆர். கண்ணப்ப நாயகர்.
16. திமிரி—என். ஆர். எத்திராஜுலு.
17. அரக்கோணம்—எஸ். கே. சுப்பிரமணிய முதலியார்.
18. நெமிலி—ஏ. ஜி. வெங்கடாசலம் பிள்ளை.
19. காவேரிப்பாக்கம்—கே. முனுசாமி.
20. வெம்பாக்கம்—பெருமாள்சாமி நாயக்கர்.
21. செய்யார்—கே. எம். கங்கன்.
22. அனக்காவூர்—என். கோபாலகிருஷ்ண முதலியார்.
23. கஸ்தம்பாடி—எம். முனுசாமி.
24. ஆரணி—ஆர். யு. வீரபத்ர கவுண்டர்.
25. வந்தவாசி—ஏ. அப்பாய் கவுண்டர்.
26. தெள்ளார்—என். கிருஷ்ணக் கவுண்டர்.
27. பேரணமல்லூர்—பி. எட்டியப்பன்.
28. துரிஞ்சாபுரம்—ஏ. நடேச கவுண்டர்.
29. திருவண்ணாமலை—ஆர். பாலகிருஷ்ணன்.
30. கீழ்ப் பெண்ணாத்தூர்—ஆர். கேசவ ரெட்டியார்.
31. செங்கம்—ஜெ. ரங்கநாத முதலியார்.
32. புதுப்பாளையம்—ஜி. சுப்பிரமணிய முதலியார்.
33. தண்டராம்பட்டு—என். சி. ராமசாமி கண்டர்.
34. சேத்துப்பட்டு—எஸ். கே. கிருஷ்ணசாமி.
35. கலசப்பாக்கம்.—கே. எல். வெங்கடாசல உடையார்.
36. போளூர்—கே. தர்மலிங்கம்.

## தென்ஆர்க்காடு மாவட்டம்

1. திருநாவலூர்—கே. ராமசாமி.
2. உளுந்தூர்ப்பேட்டை—எம். கந்தசாமி படையாச்சி.
3. திருவெண்ணெய் நல்லூர் டி. சீத்தாராம ரெட்டியார்.
4. முகையூர்—பி. ஜி. கிருஷ்ணசாமி.
5. திருக்கோவிலூர்—எம். சுந்தரம்.
6. கோலியனூர்—பி. துரைராஜன்.
7. கண்டமங்கலம்—கே. சீனிவாசன்.
8. விக்ரவாண்டி—டி. எஸ். ராமபத்திர ரெட்டி.
9. கானை—எல். ஆதிகேசவலு நாயுடு.
10. வானூர்—வி. நாராயணசாமி.
11. மரக்காணம்—வேணுகோபால் கவுண்டர்.
12. மயிலம்—ராஜாராம்.
13. ஒலக்கூர்—வி. சுப்பிரமணியம்.
14. மேல் மலையனூர்—அம்பரஞ்சி நயினூர்.
15. செஞ்சி—வி. பெருமாள் நயினூர்.

16. வல்லம்—ஐங்கால் ரெட்டி.
17. கடலூர்—வி. எம். சௌந்தரராமானுஜ ரெட்டி.
18. குறிஞ்சிப்பாடி—சக்ரபாணி நாயுடு.
19. நெல்லிக்குப்பம்—எல். சுப்பராயலு.
20. பண்ருட்டி—ரங்கநாதன், பி.ஏ. பி.எல்.
21. காட்டுமன்னார்கோவில்—ஆர். வி. ராசு படையாச்சி.
22. குமராட்சி—தட்சணாமூர்த்தி.
23. பறங்கிப்பேட்டை—வி. கே. பாலசுப்பிரமணியம்.
24. கீரபாளையம்—எம். அனந்தபத்மநாபன்.
25. மேல் புவனகிரி—வி. ஜி. கணேசமூர்த்தி.
26. மங்களூர்—கே. பெருமாள் ரெட்டியார்.
27. நல்லூர்—ஆர். லக்ஷ்மணன்.
28. விருத்தாசலம்—எஸ். ஆர். சுப்பிரமணிய பிள்ளை.
29. கம்மாபுரம்—ராமச்சந்திரன்.
30. தியாகதுருகம்—டி. தங்கவேல் வாண்டையார்.
31. சங்கராபுரம்—என். வரதராஜுலு நாயுடு.
32. ரிஷிவந்தியம்—இ. ஆர். சீத்தாராம ரெட்டி.
33. சின்ன சேலம்—வி. டி. இளைய பிள்ளை.
34. கள்ளக்குறிச்சி—ஏ. தாக பிள்ளை.
35. கல்ராயன் குன்று—

## செங்கல்பட்டு மாவட்டம்

1. மீஞ்சூர்—எஸ். தர்மலிங்க முதலியார்.
2. சோழவரம்—பி. கோவிந்த ரெட்டி.
3. கும்மிடிப்பூண்டி—பி. ஓபல் ரெட்டி.
4. திருவள்ளூர்—சுந்தரராம அய்யா.
5. கடம்பத்தூர்—சுப்பராய முதலியார்.
6. பூண்டி—பி. சுப்பரத்தினம்.
7. ஊத்துக்கோட்டை—ஜி. ஓ. சவுத்தரி.
8. ஸ்ரீபெரும்புதூர்—எஸ். ஏ. எஸ். காதர்.
9. பூந்தமல்லி—மதன்ராஜ்.
10. குன்னத்தூர்—மாங்காடு, எம். வி. சோலையப்பன்.
11. செபிண்ட் தாமஸ் மவுண்ட்—டி. எல். ரகுபதி.
12. வில்லிவாக்கம்—புண்டேஸ்வர வெங்கடேஸ்வர நாயுடு
13. மாதவரம்—பி. ஆர். அண்ணாமலை.
14. காஞ்சிபுரம்—
15. உத்திரமேரூர்—ஆர். ஜவஹர்.
16. வாலாஜாபாத்—வி. சி. சம்பந்த நாயக்கர்.
17. திருக்கழுக்குன்றம்—ஏ. கோவிந்தராஜுலு நாயக்கர்.
18. காட்டங்கொளத்தூர்—பி. எஸ். கணபதி முதலியார்.
19. திருப்போரூர்—கே. எஸ். சுப்பிரமணிய முதலியார்.
20. மதுராந்தகம்—பி. ஜானகிராம்.
21. சித்தாமூர்—கே. ஆதிகேசவலு.
22. லத்தூர்—வி. கோபால் ரெட்டி.
23. அச்சரப்பாக்கம்—எம். ஸ்ரீராமலு ரெட்டியார்.
24. திருத்தணி—பி. ஸ்ரீராமுலு நாயுடு.
25. திருவாலங்காடு—சுந்தர முதலியார்.
26. இராமகிருஷ்ணராஜபேட்டை—ஈ. ஸி. லோகநாத முதலியார்
27. பள்ளிப்பட்டு—ஏகாம்பர ரெட்டி

## கோயம்புத்தூர் மாவட்டம்

1. போரூர்—கே. ரங்கசாமி.
2. சர்க்கார்சாமக்குளம்—எஸ். பி. ஷண்முகசுந்தரம்.
3. பெரியநாயக்கன்பாளையம்—பி. எஸ். வீரபத்திர கவுண்டர்.
4. தொண்டாமுத்தூர்—டி. டி. எஸ். திப்பியா.
5. மதுக்கரை—எம். மைல்சாமி.
6. அவினாசி—கே. மாரப்ப கவுண்டர், எம்.எல்.ஏ.
7. அன்னூர்—டி. சி. சுப்பிரமணியம்.
8. காரமடை—என். பி. காரண்ண கவுண்டர்.
9. பொள்ளாச்சி—எம். கண்ணப்பன்.
10. ஆனமலை—கே. எஸ். காசியப்பன்.
11. கிணத்துக்கடவு—எஸ். பெரியசாமி.
12. சூலூர்—இ. கே. குப்புசாமி.
13. பல்லடம்—என். வெங்கிடசாமி.
14. சுல்தான்பேட்டை—பி. என். பரமசிவம்.
15. திருப்பூர்—பி. குப்புசாமி கவுண்டர்.
16. பொங்களூர்—ஜி. சாமி கவுண்டர்.
17. மடத்துகுளம்—கே. வி. ஆறுமுகம்.
18. குடிமங்கலம்—ஆர். சுப்பா நாயுடு.
19. உடுமலைப்பேட்டை—ஜி. ஆர். குருசாமி நாயுடு.
20. பவானிசாகர்—என். ராமசாமி கவுண்டர்.
21. நம்பியூர்—கே. கே. முத்துக்குமாரசுவாமி.
22. சத்தியமங்கலம்—ஏ. கே. காளியப்ப கவுண்டர், எம்.எல்.ஏ.
23. கோபிச்செட்டிபாளையம்—கே. எம். சுப்பிரமணியம்.
24. துக்கநாயக்கன்பாளையம்—கே. கோதண்டராமக் கவுண்டர், எம்.எல்.ஏ.
25. தாளவாடி—சி. ஆர். ராஜப்பா.
26. அந்தியூர்—கே. கே. சுப்பிரமணியம்.
27. பவானி—பி. ஆர். வெங்கடாசலபதி.
28. அம்மாபேட்டை—ஜி. குருமூர்த்தி.
29. தாராபுரம்—பி. முத்துசாமி.
30. குண்டடம்—கே. எஸ். நடராஜ கவுண்டர், எம்.எல்.ஏ.
31. மூலனூர்—எம். கோவிந்தசாமி.
32. காங்கேயம்—ஆர். பி. ராமசாமி.
33. வெள்ளக்கோயில்—டி. ராமசாமி.
34. பெருந்துறை—சுப்பையா.
35. ஊத்துக்குளி—கே. என். பழனிசாமி.
36. ஈரோடு—எஸ். வி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர்.
37. கொடுமுடி—டி. எஸ். காசிலிங்க கவுண்டர்.
38. மோடக்குறிச்சி—டி. பெரியசாமி.
39. சென்னிமலை—கே. சின்னசாமி கவுண்டர்.

## நீலகிரி மாவட்டம்.

1. கூடலூர்—கே. கோபாலகிருஷ்ணன் நாயர்.
2. உதகமண்டலம்—என். பெல்லி கவுடர்.
3. கூனூர்—எம்.எம். பெல்லி.
4. கோட்டகிரி—எம். கே. நஞ்சா கவுடர்.

## கன்னியாகுமரி மாவட்டம்.

1. அகஸ்தீஸ்வரம்—எஸ். ராமசாமி நாடார்.
2. இராஜக்கமங்கலம்—ஏ. ராம உடைய மார்த்தாண்டன்.
3. கிள்ளியூர்—என். டென்னிஸ்.
4. மேல்புரம்—பி. தாமஸ்.
5. முஞ்சிரா—ஆர். செல்லசாமி.
6. தோவாளை—டி. சி. சுப்பிரமணிய பிள்ளை.
7. குருத்தன்கோடு—ஏ. பவுலியா.
8. தக்கலை—ஜே. நேசமணி.
9. திருவட்டார்—பி. ஸி. நாடார்.

## மதுரை மாவட்டம்.

1. திண்டுக்கல்—வெங்கடசாமி ரெட்டியார், எம்.எல்.ஏ.
2. சானுர்ப்பட்டி—ஆர். கோபாலகிருஷ்ணன்.
3. வட மதுரை—பி. ஆர். பால்சாமி.
4. பாளையம்—கே. பெருமாள் நாயக்கர்.
5. ஆத்தூர்—ஜி. வரதராஜுலு.
6. ரெட்டியார்சத்திரம்—பி. வி. எஸ். சோமசுந்தரம்.
7. வேடசந்தூர்—எம். சவடமுத்து கவுடர்.
8. கொடைக்கானல்—பாலுசாமி மன்ருடியார்.
9. ஒட்டன்சத்திரம்—ஏ. பி. பழனியப்பன்.
10. தொப்பம்பட்டி—கே. குமாரவேல் கவுண்டர்.
11. பழனி—ஆர். லட்சுமணசாமி.
12. வாடிப்பட்டி—வி. பாலகுருவ ரெட்டியார்.
13. அலங்காநல்லூர்—ஆர். சுந்தரராஜன் சேர்வை.
14. வத்தலக்குண்டு—டி. வி. ஆர். வி. ராதாகிருஷ்ண செட்டி.
15. நிலக்கோட்டை—கே. ஆர். தங்கபாண்டியன்.
16. மதுரை கிழக்கு—அய்யணன்.
17. மதுரை மேற்கு—எஸ். வீரணன் சேர்வை.
18. திருப்பரங்குன்றம்—கே. பெரியகருப்பன் அம்பலம்.
19. மேலூர் தெற்கு—டி. தேவநந்தி.
20. மேலூர் வடக்கு—மு. கரு. அழகு சேர்வை.
21. நத்தம்—பி. தம்பி நாயகர்.
22. பெரியகுளம்—ஆர். எஸ். சுப்பிரமணியம்.
23. தேனீ—பி. எல். லக்ஷ்மண நாயக்கர்.
24. போடிநாயக்கனூர்—சுருளிசாமி.
25. ஆண்டிப்பட்டி—கே. சடையாண்டி.
26. சின்னமனூர்—எஸ். சிவசிதம்பர சூரியநாராயண பிள்ளை.
27. உத்தமபாளையம்—வி. தனுஷ்கோடி.
28. கம்பம்—கே. எஸ். நந்தகோபால்.
29. உசிலம்பட்டி—ஏ. எம். நல்லதம்பி.
30. செல்லம்பட்டி—எஸ். மொக்கமாயன்.
31. திருமங்கலம்—எம். சி. ஏ. ரத்தினசாமி தேவர்.
32. கள்ளிகுடி—திருவேங்கடம் ரெட்டியார், எம்.எல்.ஏ.
33. கல்லுப்பட்டி—ராஜகோபால் நாயக்கர்.
34. சேடப்பட்டி—எஸ். அருணுசலம்.

## இராமநாதபுரம் மாவட்டம்.

1. கல்லல்—என். மாணிக்கம் செட்டியார்.
2. சிங்கம்புனேரி—வி. வால்மீகி.
3. திருப்பத்தூர்—ஏ. ஆர். நாகராஜன்.
4. சாக்கோட்டை—ஓ. ஏ. பி. ஆர். எம். அருணுசலம் செட்டியார்.
5. காளையார்கோயில்—வி. வேலாயுதம் செட்டியார்.
6. மானுமதுரை—ஆர். முத்து சேர்வை.
7. திருப்புவனம்—கே. ஆர். சீமைச்சாமி, எம்.எல்.ஏ.
8. சிவகங்கா—எஸ். பி. கெ. ஏ. எல். லட்சுமணன் செட்டியார்.
9. திருவாடானை—ஏ. டி. எம். ராமநாதன்.
10. கண்ணங்குடி—கெ. ஆர். ஆர். எம். கரியமாணிக்கம் அம்பலம், எம்.எல்.ஏ.
11. ஆர். எஸ். மங்கலம்—கே. எஸ். ராமநாதன்.
12. தேவகோட்டை—வி. கைலாசம்.
13. இளையன்குடி—டி. தங்கசுவாமி தேவர்.
14. போகலூர்—ஆர். முனியாண்டி தேவர்.
15. பரமக்குடி—கே. ஏ. தங்கசாமி பிள்ளை.
16. கமுதி—எஸ். காதர் பாட்சா (என்கிற) வெள்ளைச் சாமி.
17. கடலாடி—வி. வி. எஸ். அண்ணுசாமி.
18. முதுகுளத்தூர்—என். ஹசன் முகமது.
19. ராமனுதபுரம்—எஸ். ஆர். அழகர்சாமி பிள்ளை.
20. திருப்புல்லாணி—ஏ. எஸ். வி. எம். சையத் அப்துல் காதர்.
21. மண்டபம்—
22. விருதுநகர்—ஆர். வி. ராமசுவாமி நாய்க்கர்.
23. சிவகாசி—கே. ராமசுவாமி.
24. சாத்தூர்—எஸ். வி. வீரப்ப நாய்க்கர்.
25. வெம்பகோட்டை—எனிகை ஏ. ராமசாமி நாய்க்கர்.
26. ஸ்ரீ வில்லிபுத்தூர்—என். கிருஷ்ணசுவாமி நாயுடு.
27. ராஜபாளையம்—கே. பி. திருமலை வாடைய்யா தேவர்.
28. வத்ராயிருப்பு—வி. எஸ். ஜி. நடராஜன்.
29. அருப்புக்கோட்டை—டி. ஏ. சுப்பா ரெட்டியார்.
30. திருச்சுழி—எம். முத்துசுவாமி தேவர்.
31. காரியப்பட்டி—கே. கல்யாணி.
32. நரிக்குடி—எம். முத்துவேல் சேர்வை.

## சேலம் மாவட்டம்.

1. ஒசூர்—கே. அப்பாவு பிள்ளை.
2. சூளகிரி—எஸ். கம்பகிரி நாயுடு.
3. கெலமங்கலம்—என். கிருஷ்ணமூர்த்தி.
4. தளி—டி. எஸ். ராமசந்திர ராவ்.
5. கிருஷ்ணகிரி—எஸ். ராமசுவாமி.
6. வேப்பனபள்ளி—பி. எம். முனுசாமி.
7. காவேரிபட்டிணம்—ஏ. கந்தசாமி நைனர்.
8. பருகூர்—எம். கமலநாதன். எம்.எல்.ஏ.
9. ஊத்தங்கரை—எம். ஆறுமுகம்.
10. தர்மபுரி—எம். கே. காவேரி கவுண்டர்.
11. பாலக்கோடு—பி. பி. அண்ணாமலை.
12. பெண்ணாகரம்—எஸ். ஏ. முனிநாத செட்டியார்.
13. நல்லம்பள்ளி—பி. கே. சி. முத்துசுவாமி, பி. ஏ.
14. அரூர்—டி. தீர்த்தகிரி கவுண்டர்
15. மொரப்பூர்—டி. சொக்கலிங்க கவுண்டர்.
16. பாப்பிரெட்டிபட்டி—வி. ஆ. வேங்கன்.
17. கடயம்பட்டி—எம். வெங்கடாசலம்.
18. ஓமலூர்—எம். பெருமாள் கவுண்டர்.
19. தாராமங்கலம்—எம். கே. சித்தா கவுண்டர்.
20. மேச்சேரி—டி. சொக்கலிங்க கவுண்டர்.
21. குளத்தூர்—டி. செங்கோட கவுண்டர்.
22. நங்கவள்ளி—என். சுப்பராயன்.
23. கெங்கவள்ளி—கே. பரசன்னன்.
24. தலைவாசல்—என். அலகுவேல் உடையார்.
25. பெத்தநாய்க்கன்பாளையம்—பி. என். சதானந்தம்.
26. ஆத்தூர்—ஏ. வி. வரதராஜ பிள்ளை.
27. வாழப்பாடி—பி. நாதப்பன் கவுண்டர்.
28. காரிப்பட்டி—என். அருணாசல உடையார்.
29. வீரபாண்டி—எஸ். ஆறுமுகம், எம்.எல்.ஏ.
30. சேலம்—ஏ. ஆர். பாலசுப்பிரமணயம்.
31. பனைமரத்துப்பட்டி—சின்னு (*என்கிற*) சேப்பெருமாள்.
32. ஏர்க்காடு——
33. புதுச்சத்திரம்—ஏ. ராமசுவாமி உடையார்.
34. சேந்தமங்கலம்—ஆர். வேலுசாமி.
35. எருமைப்பட்டி—பி. பி. கே. தியாகராஜ ரெட்டியார்.
36. நாமக்கல்—கே. செங்கோடன்.
37. மோகனூர்—என். கிருஷ்ணன்.
38. பரமத்தி—எஸ். மாரப்ப கவுண்டர்.
39. கபிலமலை—எம். மாரப்ப கவுண்டர்.
40. கொல்லிமலை—சக்ரவர்த்தி துரைசாமி.
41. நாமகிரிபேட்டை—எஸ். வரதராஜன்.
42. ராசிபுரம்—எஸ். வரதராஜன்.
43. வெண்ணந்தூர்—ஏ. எஸ். பழனிசுவாமி.
44. திருச்செங்கோடு—ஜி. ராமச்சந்திரன்.
45. பள்ளிபாளையம்—கே. பழனிசுவாமி.
46. மல்லசமுத்திரம்—எம். சுப்பராய கவுண்டர்.
47. இளச்சிபாளையம்—கே.பரமேஸ்வரன்.
48. சங்கரி—எஸ். கந்தசாமி கவுண்டர்.
49. கொங்கணபுரம்—கே. எஸ். ராமச்சந்திர கவுண்டர்.
50. எடப்பாடி—எஸ். செல்லப்பன்.
51. மகுடஞ்சாவடி—கே. கந்தசாமி.

## தஞ்சாவூர் மாவட்டம்.

1. நீடாமங்கலம்—எஸ். சொக்கலிங்கம்.
2. மன்னார்குடி—ஆர். ராஜப்பா.
3. கோட்டூர்—எஸ். ஜி. முருகையன்.
4. முத்துப்பேட்டை—எஸ். ராஜகோபால்.
5. திருத்துறைப்பூண்டி—எஸ். சண்முகசுந்தரம்.
6. தலைஞாயிறு—பி. சி. வேலாயுதம்.
7. வேதாரண்யம்—பி. வெங்கடாசல தேவர், எம்.எல்.சி.
8. மாயூரம்—பி. கோவிந்தசாமி சேர்வை.
9. செம்பனார்கோயில்—எஸ். ராமலிங்கம்.
10. குத்தாலம்—எம். சிவகடாட்சன்.
11. கொள்ளிடம்—கே. பாலசுப்பரமண்யம்.
12. சீர்காழி—டி. எம். சீனிவாசன் பிள்ளை.
13. நாகப்பட்டினம்—பி. ஆர். வரதராஜுலு நாயுடு.
14. திருவாரூர்—எம். பஷீர் அகமத்.
15. கிவளூர்—எஸ். சண்முகசுந்தரம் பிள்ளை.
16. திருமருகல்—கே. ராமச்சந்திர நாயுடு.
17. நன்னிலம்—கே. எம். ஹபிப் முகமது.
18. குடவாசல்—பி. வி. தட்சணாமூர்த்தி கலிங்கராயர்.
19. கொரடாச்சேரி—பாவா பி. சொக்கப்பா.
20. தஞ்சாவூர்—என். வையாபுரி வன்னியர்.
21. திருவையாறு—எம். ராதாகிருஷ்ணகாடி ராவ் சாகிப்.
22. பூதலூர்—ஆர். சுவாமிநாத மேற்கொண்டர்.
23. திருவோணம்—முத்து தங்கப்பா.
24. ஒரத்தநாடு—சிவஞானம்.
25. பட்டுக்கோட்டை—
26. சேதுபாவாசத்திரம்—ஏ. வைரவன் சேர்வை.
27. பேராவூரணி—வி. ஏ. திருவேங்கட தேவர்.
28. மதுக்கூர்—
29. அறந்தாங்கி—ராஜன் (*என்கிற*) ஆர். சிவசுப்பிரமண்யம்.
30. ஆவுடையார்கோயில்—கே. கருப்பையா சேர்வை.
31. கும்பகோணம்—வி. ராமகிருஷ்ணன்.
32. திருவிடமருதூர்—ஏ. கல்யாண சுந்தரம்.
33. திருப்பனந்தாள்—ஏ. மாரிமுத்து.
34. அம்மாபேட்டை—கே. துளசி அய்யா வன்னியர்.
35. வலங்கிமான்—எம். பக்கீர் முகமது.
36. பாபநாசம்—ஆர். சௌந்தரராஜன்.

## திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

1. தாத்தையங்கார்பேட்டை—எஸ். என். அழகன்.
2. முசிரி—எஸ். சுப்ரமணியம்.
3. தொட்டியம்—ஆர். விஸ்வநாதன்.
4. துறையூர்—டி. எஸ். நல்லதம்பி.
5. உப்பிலியபுரம்—எஸ். வேணுராஜன்.
6. லால்குடி—ஏ. டி. தர்மலிங்கம், எம். எல். ஏ.
7. புள்ளம்பாடி—வி. என். முத்தமிழ்ச் செல்வம்.
8. மணச்சநல்லூர்—பி. வேலாயுதம் பிள்ளை.
9. வேப்பந்தட்டை—ஆர். மன்னுது உடையார்.
10. பெரம்பலூர்—வி. ஆர். சின்னசாமி.
11. ஆலத்தூர்—கே. சி. பெரியசாமி.
12. வேப்பூர்—எம். வரதராஜ பெருமாள்.
13. திருமானூர்—ஆர். சாம்பசிவ மூப்பனுர்.
14. அரியலூர்—பி. தங்கவேலு.
15. ஜயங்கொண்டம்—கே. சுந்தரமூர்த்தி.
16. தா. பழூவூர்—டி. செல்வராஜன்.
17. செந்துரை—என். வி. வெங்கடாசல படையாச்சி.
18. ஆண்டிமடம்—எம். எஸ். தங்கராஜுலுப் படையாச்சி.
19. திருவெரும்பூர்—வி. சுவாமிநாதன்.
20. மணிக்கண்டம்—எம். சூசை உடையார்.
21. ஆண்டா நல்லூர்—ஏ. ஓ. மங்கன் அம்பலக்காரர்.
22. கே. பரமாத்தி—பி. சிவசுப்ரமணியக் கவுண்டர்.
23. தாந்தோணி—சி. ஆர். நல்லசாமி.
24. அரவக்குறிச்சி—பி. கஸ்தூரி.
25. கரூர்—எஸ். முருகையன்.
26. குளித்தலே—எராட்சி ரெட்டியார்.
27. மருங்காபுரி—வி. சுப்பய்யா கோனுர்.
28. மணப்பாறை—பி. பொன்னுரங்க கவுண்டர்.
29. கடவூர்—வி. பி. சுவாமிநாதன்.
30. வையம்பட்டி—ஆர். வெங்கம நாய்க்கர்.
31. கிருஷ்ணராயபுரம்—எம். பி. ஆண்டியப்பன்.
32. அன்னவாசல்—சிவசாமி என்கிற டி. ராமசாமி.
33. விராலிமலே—மீனுட்சி சுந்தரம்.
34. கிரனூர் (குன்னுண்டார் கோவில்)–எம். சத்தியமூர்த்தி.
35. திருவரங்குளம்—தங்கவேலு.
36. கரம்பகுடி—டி. விஜயரகுநாத பல்லவராயர்.
37. பொன் அமராவதி—பி. ராமசாமி.
38. திருமயம்—பி. ஆர் . சின்ன கருப்பன்.
39. அரிமலம்—எம். முத்து வைரவ அம்பலக்காரர்.

## திருநெல்வேலி மாவட்டம்.

1. தூத்துக்குடி—பி. எஸ். பெரிய நாயகம்.
2. கருங்குளம்—காம் இப்ரஹீம்.
3. ஸ்ரீவைகுண்டம்—அப்பாதுரை நாடார் என்கிற எஸ். வி. பி. எஸ். ராயப்பன்.
4. சாத்தாங்குளம்—ஞானக்கண் முத்தையா.
5. உடன்குடி—ஜி. நாராயணன்.
6. திருச்செந்தூர்—ஆர். வித்யாசாகர்.
7. ஆழ்வார் திருநகரி—ஏ. எம். வேத நாயகம்.
8. சங்கரன்கோயில்—டி. ராமச்சந்திர தேவர்.
9. வாசுதேவநல்லூர்—வி. என். பெரியசாமி பிள்ளை.
10. குருவிகுளம்—ஏ. ராமலிங்கசாமி நாயக்கர்.
11. மேலநீலிதநல்லூர்—எஸ். முத்து பாண்டிய தேவர்.
12. கோவில்பட்டி—கே. நந்திராஜ்.
13. ஒட்டப்பிடாரம்—பி.ஸி. சென்னப்ப ரெட்டியார்.
14. புதூர்—பி. கிருஷ்ணசாமி நாயக்கர்.
15. விளாத்திகுளம்—கே. சுப்பா ரெட்டியார். —
16. கயத்தாறு—எஸ். கோதண்டராம தேவர்.
17. மானூர்—எஸ். உக்கிரமப் பாண்டியன்.
18. பாளையங்கோட்டை —எஸ். ராஜகோபாலன்.
19. ஆலங்குளம்—எச். நவநீதகிருஷ்ணன் மருதப்ப பாண்டியன்.
20. தென்காசி—எஸ். நமசிவாயம்.
21. கடையநல்லூர்—புத்திய தேவர்.
22. கீழ்ப்பாவூர்—எம். சற்குணம்.
23. செங்கோட்டை—சிவராமகிருஷ்ண ஐயர்.
24. வள்ளியூர்—என். சவுந்தர பாண்டியன், எம். எல். ஏ.
25. ராதாபுரம்—எம். எல். ஆசீர்வாதம்.
26. நாங்குனேரி—ஜி. சுப்ராயுலு ரெட்டி.
27. களக்காடு—என். ஸ்ரீநிவாச அய்யங்கார்.
28. சேரன்மாதேவி—எஸ். இசைக்கிமுத்து பாண்டியன்.
29. பாப்பக்குடி—ஹரிகெங்காராம்.
30. கடயம்—ஏ. குமரேச சீனிவாஸன்.
31. அம்பாசமுத்திரம்—எஸ். சங்கு முத்து தேவர்.

*(தேர்தல் கண்ணோட்டம்—அடுத்த பக்கம்)*

## தேர்தல் கண்ணோட்டம்.

| மாவட்டங்கள். | தலைவர்கள் மொத்த எண்ணிக்கை. | | | மறுபடியும் தேர்ந்தெடுக்கப் பட்ட பழைய தலைவர்கள் எண்ணிக்கை. | | | புதிய வேட்பாளர்கள். | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்கள். | தேர்தல் நடைபெற்றவை. | ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் எண்ணிக்கை. | ஏகமனதாக. | வாக்குப் பதிவு மூலம். | மொத்தம். | ஏகமனதாக. | வாக்குப் பதிவு மூலம். | மொத்தம். | தலைவர்களான எம்.எல்.ஏக்கள். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
| 1. வடஆர்க்காடு. | 36 | 36 | 8 | 3 | 9 | 12 | 5 | 19 | 24 | 2 |
| 2. தென் ஆர்க்காடு | 34 | 34 | 6 | 4 | 15 | 19 | 2 | 13 | 15 | .. |
| 3. செங்கல்பட்டு. | 27 | 26 | 6 | 5 | 7 | 12 | 1 | 13 | 14 | .. |
| 4. கோயம்புத்தூர் | 39 | 39 | 15 | 8 | 6 | 14 | 7 | 18 | 25 | 4 |
| 5. நீலகிரி .. | 4 | 4 | 3 | 2 | .. | 2 | 1 | 1 | 2 | .. |
| 6. கன்னியாகுமரி. | 9 | 9 | 2 | 2 | 4 | 6 | .. | 3 | 3 | .. |
| 7. மதுரை .. | 34 | 34 | 5 | 1 | 7 | 8 | 4 | 22 | 26 | 2 |
| 8. இராமநாதபுரம் | 32 | 31 | 2 | 1 | 14 | 15 | 1 | 15 | 16 | 2 |
| 9. சேலம் .. | 50 | 50 | 13 | 9 | 7 | 16 | 4 | 30 | 34 | 2 |
| 10. தஞ்சாவூர் .. | 36 | 34 | 8 | 2 | 10 | 12 | 6 | 16 | 22 | 1 |
| 11. திருச்சிராப்பள்ளி. | 39 | 39 | 7 | 1 | 14 | 15 | 6 | 18 | 24 | 1 |
| 12. திருநெல்வேலி. | 31 | 31 | 6 | 3 | 6 | 9 | 3 | 19 | 22 | 1 |
| மொத்தம் .. | 371 | 367 | 81 | 41 | 99 | 140 | 40 | 187 | 227 | 15 |

## மான்யம் XXIII.—சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள், தேசிய வளர்ச்சிப்பணித் திட்டங்கள், தல அபிவிருத்திப்பணிகள்.

### கூடுதல் செலவிற்குத் தேவையான தொகை பற்றிய மதிப்பீடு.

அனுமதித்த தொகை (Voted.) .. .. .. ரூ. 33,00,000

சாட்டிய தொகை (Amount Charged) .. .. .. ரூ. இல்லை.

### சுருக்கம்.

| வரிசை எண். | பெருந் தலைப்பு. (Major Head.) | சிறு தலைப்பு. (Minor Head.) | நிதி ஒதுக்க உள் தலைப்புகள். (Sub heads of appropriation.) | 1964–65–ல் கூடுதலாகச் செலவாகுமென எதிர்பார்க்கப்படும் தொகை. | |
|---|---|---|---|---|---|
| | | | | சாட்டியது. (Charged) | அனுமதித்தது. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| (i) | 37. சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள், தேசிய வளர்ச்சிப்பணிதிட்டங்கள். தல அபிவிருத்திப் பணிகள். | I. சாதாரண மானவை—A. சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள்—வட்டாரத் தலைமையிடங்கள். | (iv) மூன்று ஆண்டுகள் செயல்படுவதைப் பூர்த்தி செய்த I-ம் நிலை வட்டாரங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கும், II-ம் நிலை வட்டாரங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கும் ஆகும் செலவு —5. இதர செலவுகள். | .. | .. 7,00,000 |

| வரிசை எண். (1) | பெருந் தலைப்பு (Major Head). (2 | சிறு தலைப்பு (Minor Head). (3) | நிதி ஒதுக்க உள் தலைப்புகள் (Sub heads of appropriation). (4) | 1964—65-ல் கூடுதலாகச் செலவாகுமென எதிர்பார்க்கப்படும் தொகை. சாட்டியது. (5) | அனுமதித்தது. (6) |
|---|---|---|---|---|---|
| (ii) | 37. சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள் தேசிய வளர்ச்சிப் பணித் திட்டங்கள் தல அபிவிருத்திப் பணிகள். | I, சாதாரணமானவை D. பொது—(b) இதர வேலைத் திட்டங்கள். | 2. மனித ஆற்றலைப் பயன்படுத்துவதற்கான செலவு—பஞ்சாயத்து யூனியன்களுக்கு உதவி மானியங்கள், 3. ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதி நிறுவன உதவியுடன் சத்துணவுத் திட்டம். | .. | .. 3.00,000 |
| (iii) | ஷை | ஷை | (vi) கிராமத் தொழில்களின் தீவிர அபிவிருத்திக்கான முன்னோடித் திட்டம் (Pilot Project)—7. பொதுப் பண வசதிகள். | .. | .. 5,00,000 |
| (iv) | ஷை | ஷை | 5. கட்டிடங்களின் பராமரிப்புக்கான செலவு — மற்றத் துறைகளிடமிருந்து மாற்றப்பட்ட தொகை. | .. | .. 6,00,000 |
| (v) | ஷை | II. அபிவிருத்தித் திட்டங்கள்— மூன்றுவது ஐந்தாண்டுத் திட்ட வேலைகள்--A சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள். | F. சமூகக் கல்வி— 3. பஞ்சாயத்து யூனியன்களுக்கு உதவி மானியங்கள். (i) சமூகக் கல்வி மானியங்கள். | .. | .. 7,00,000 |
| | | | (ii) மகளிர் சிறுவர் நல மானியம். | .. | .. 5,00,000 |
| | | | மொத்தம். .. | .. | .. 33,00,000 |

## விளக்கக் குறிப்பு

வரிசை எண் (i).—1964-65 திட்ட மதிப்பீட்டில் ரூ. 2,00,000 ஒதுக்கப்பட்டுள்ளது. ஜீப் வண்டிகளுக்காக டயர்கள், இதர பாகங்கள், பெட்ரோல் செலவு முதலியவற்றை வழங்க இந்த நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. 246 வட்டாரங்களின் தேவைகளைச் சமாளிக்க இது போதுமானதல்ல என்பதால், துணை மதிப்பீட்டில் ரூ. 7,00,000 கூடுதலாக சேர்க்கப்பட்டுள்ளது. (எஞ்சியுள்ள 129 வட்டாரங்கள் விஷயமாக ஏற்படும் செலவு II. அபிவிருத்தித் திட்டங்கள் என்பதன்கீழ்க் காட்டப்பட்டுள்ளது.)

வரிசை எண் (ii).—இது மத்திய அரசாங்கம் ஊக்குவிக்கும் ஒரு திட்டமாகும். இதற்கு இந்திய அரசாங்கத்தின் முழு உதவி கிடைக்கின்றது. முதலில் இந்தத் திட்டம் 35 வட்டாரங்களில் செயல் பட்டது. பின்னர் அது மேலும் 20 வட்டாரங்களுக்கு விஸ்தரிக்கப்பட்டது. கூடுதல் செலவினைச் சமாளிக்க துணை மதிப்பீட்டில் ரூ. 3,00,000 சேர்க்கப்பட்டுள்ளது.

வரிசை எண் (iii).—இதுவும் மத்திய அரசாங்கம் ஊக்குவிக்கும் ஒரு திட்டமாகும். இதற்கும் இந்திய அரசாங்கத்தின் முழு உதவி கிடைக்கிறது. 1964–65-ல் நிறைவேற்றப்படவேண்டிய வேலைத் திட்டங்கள் பற்றி அப்போது தெரியாதபடியால், 1964–65 திட்ட மதிப்பீட்டில் ரூ. 1·78 லட்சம் மட்டும் ஒதுக்கப் பட்டது. பல்வேறு வேலைத்திட்டங்களை நிறைவேற்றுவதற்காக பின்னர் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. செய்முறை விளக்கப்பட்டுப் பண்ணையையும் (Demonstration of silk farms), பொதுக் காரியப் பொறி யியல் பட்டறையையும் (General Purpose Engineering Workshops) நிறுவுதல், பொதுப் பணி வசதி நிலையங்களைத் துவக்குதல் போன்ற வேலைத் திட்டங்கள் நிறைவேற்றப்பட ஆணைகள் பிறப்பிக்கப்பட் டுள்ளன. சேலம் மாவட்டத்திலுள்ள நங்கவல்லி, கடயம்பட்டி, மேச்சேரி, தாராமங்கலம் வட்டாரங்களில், பொது வசதிப் பட்டறையை நிறுவுவதற்காகவும், கிராமத் தொழில் திட்டங்களின் நிர்வாக அமைப்பை வலுப்படுத்துவதற்காகவும், நான்குநேரி திட்டப் பகுதியைச் சேர்ந்த வள்ளியூர் கிராமத்திலும், ஸ்ரீபெரும்புதூர் திட்டப் பகுதியைச் சேர்ந்த திருவள்ளூர் கிராமத்திலும் பொதுக் காரியப் பொறியியல் பட்டறைகளை நிறுவுவதற்காகவும் ஆகும் செலவு "புதுப் பணிக்குரிய" செலவாகும். (கிராமத் தொழில் திட்டங்களின்) ஆரம்பச் செலவைச் சரிக்கட்ட, எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ரூ. 1,300 முன்பணம் அனுமதிக்கப்பட்டது. புதுப் பணித் திட்டங்கள் முதலியவை சம்பந்தமானத் தேவைகளைச் சமாளிப்பதற்காக துணை மதிப்பீட்டில் ரூ. 5 லட்சம் சேர்க்கப்பட்டுள்ளது.

வரிசை எண் (iv).—ஆரம்பச் சுகாதார நிலையங்கள், விலங்கின மருந்தகங்கள், விவசாய டிப்போக்கள் முதலிய கட்டிடங்களை பராமரிப்பதற்கான செலவு, ஆரம்பத்தில் சம்பந்தப்பட்ட துறையின் வரவு–செலவுத் திட்டத்திற்கு பற்றெழுதப்பட்டு, பின்னர் திரும்பப் பெறப்பட்டு, "37 சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள்" என்பதற்கு பற்றெழுதப்பட்டு சரிக்கட்டப்பட வேண்டும் என்று அரசாங்கம் முடிவு செய்தது. இம் முடிவெடுப்பதற்கு முன்பே, 1964–65 மதிப்பீடுகள் முடிவாகத் தயாரிக்கப்பட்டு விட்டதால், இதற்காக 1964–65 திட்ட மதிப்பீட்டில் எந்த நிதி ஒதுக்கமும் செய்யப் படவில்லை. துணை மதிப்பீட்டில் ரூ. 6,00,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

வரிசை எண் (v).—பஞ்சாயத்து அபிவிருத்தி (திட்டமிடப்பட்ட) வரவு–செலவுத் திட்டம் ஒன்றை அனுசரித்து பஞ்சாயத்து யூனியன்கள் வேலைத் திட்டங்களை நிறைவேற்றுகின்றன. அதிலுள்ள விதிகளின்படி ஐந்தாண்டுக் காலத்துக்கு சமூகக் கல்வி மானியம் நபர் ஒன்றுக்கு 50 காசு என்ற வீதத்திலும், மகளிர்–சிறுவர் நல மானியம் நபர் ஒருவருக்கு $33\frac{1}{3}$ காசு என்ற வீதத்திலும் கணக் கிடப்படுகிறது. 1964–65 திட்ட மதிப்பீட்டில் சமூகக் கல்வி மானியத்துக்காக ரூ. 14,00,000-ம், மகளிர்–சிறுவர் நல மானியத்துக்காக ரூ. 5,00,000-ம் ஒதுக்கப்பட்டுள்ளது. வருவாய்க் கோட்ட அதிகாரிகள் சரிக்கட்டுகிற தொகைகளின் அடிப்படையில் மேற்சொன்ன நிதியைக்காட்டிலும் அதிகமான நிதி ஒதுக்க வேண்டியிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கூடுதலான தேவைகளை சமாளிக்க, சமூகக் கல்வி மானியத்தின்கீழ் ரூ. 7,00,000 தொகையும், மகளிர்–சிறுவர் நல மானியத்தின்கீழ் ரூ. 5,00,000 தொகையும், துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

[ஆதாரம்.—"துணை மானியக் கோரிக்கைகளும், விரிவான துணை மதிப்பீடுகளும் 1964–65ம் ஆண்டு" என்ற பிரசுரம்.]

---

## கிராம சேவக்குகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு அளிக்கப்பட்டுவரும் பயிற்சிப் பாடத் திட்டம் நீடிக்கப்படுகிறது.

## Training - Preservice training to the candidates selected for gramasevaks—Continuance of the exising syllabus—Instructions—Issued.

### (Memorandum No. 153588/TI. R. D. & L. A. dated 15-3-1965.)

கிராம நல தல நிர்வாகத் துறையின் என்று உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருந்தபோதி 1964-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21-ம் லும், இப்போதுள்ள இரண்டாண்டுகள் முன் தேதியிட்ட அரசாங்க ஆணை 949-ல் கிராம சேவை முழுமைப் பயிற்சிப் (Integrated Course of சேவக்குகள் விவசாய சம்பந்தப்பட்ட வேலை Pre-service) பாடத்திட்டத்தில், மாற்றம் தேவை களுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் யில்லை என்று கிருஷ்ணகிரியில் 1964-ம் ஆண்டு

நவம்பரில் கூடிய கிராமிய விஸ்தரிப்பு பயிற்சி நிலைய முதல்வர் மகாநாட்டில் முடிவு செய்யப்பட்டுள்ளது. கிராம சேவக் பயிற்சி பெறுபவர்களுக்கு இப்போதுள்ள இரண்டாண்டுகள் முழுமைப்பயிற்சிப் பாடத் திட்டத்தில், பெரும்பாலான பகுதி, விவசாயத்தைப் பொறுத்தே இருப்பதாலும், மற்ற பாடங்களைப் பற்றியும் கிராம சேவக்குகள் அறிந்திருப்பது அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்றுவதற்கு பெரிதும் துணை செய்யுமென்றும், ஆகவே நடைமுறையில் உள்ள பாடத் திட்டம் நீடிக்கப்படவேண்டும் என்று உதவி அபிவிருத்தி கமிஷனர் (பயிற்சி) கூறியுள்ளார்.

கிராம சேவக் பயிற்சி பெறுபவர்களுக்கு இப்போது அளிக்கப்பட்டுவரும் முன்-சேவை பயிற்சி பாடத்திட்டம், நீடிக்கப்பட வேண்டும் என்ற உதவி அபிவிருத்திக் கமிஷனரின் (பயிற்சி) கருத்து ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

(கிராம நல தல நிர்வாகத் துறையின் 1965 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 15ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை 153588.)

---

## துறைத் தலைவர்கள் அலுவலகங்கள் மற்றும் சில பிராந்திய அலுவலகங்களில் கடிதப்போக்குவரத்தை தமிழில் கொண்டுவருதல்.

## Official Language—Tamil—Introduction in the Offices of Heads of Departments and some Regional Offices—Second stage of the scheme—Orders Issued.

### [G. O. Ms. No. 603, Public (General—M) dated 24th March 1965.]

துறைத்தலைவர்களின் அலுவலகங்களில் கடிதப் போக்குவரத்தை தமிழில் (நான்கு கட்டங்களில்) கொண்டுவருவதற்கான ஒரு திட்டத்தை பொதுத் துறையின் 13-2-1963 தேதியிட்ட அரசாங்க ஆணை 225-ல் அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளது. அதற்கேற்ப 1956-ம் ஆண்டு தமிழ்நாடு ஆட்சி மொழிச் சட்டத்தின் (1956-ம் ஆண்டு தமிழ் நாடுச்சட்டம் 39) பிரிவு 4-ன் கீழ் அரசாங்கம் அறிவிப்புகளை வெளியிட்டு, துறைத்தலைவர்கள் அலுவலகங்கள் மற்றும் பிராந்திய அலுவலகங்கள் ஆகியவற்றில் நடைபெறும் கடிதப்போக்குவரத்தில் ஒரு பகுதியை தமிழில் நடத்தவேண்டுமென்று அரசாங்கம் ஆணைகள் பிறப்பித்தது. இத்திட்டத்தின் முதல் கட்டமானது, பொது மக்களிடமிருந்து தமிழில் கிடைக்கப் பெறும் எல்லா கடிதங்களுக்கும் தமிழிலேயே பதிலளிக்க வேண்டும் என்பதாகும். இந்த திட்டத்தின் இரண்டாம் கட்டத்தில், துறைத்தலைவர்கள் தங்கள் கீழுள்ள அலுவலகங்களுடனும், மற்ற மாவட்ட அலுவலகங்களுடனும், படிப்படியாக தமிழில் கடிதப்போக்குவரத்து செய்யவேண்டும் என்பதாகும். இந்த திட்டத்தின் இரண்டாம் கட்டத்தில, அரையாண்டுக்கு ஒருமுறை, துறைத்தலைவர்கள் எந்தெந்த விஷயங்களில் எந்தெந்த தேதி முதற்கொண்டு தங்களுக்கு கீழுள்ள அலுவலகங்களுடனும், மாவட்ட அலுவலகங்களுடனும் தமிழில் கடிதப்போக்குவரத்து வைத்துக்கொள்ள தேர்ந்தெடுக்கிறார்கள் என்பதை தெரிவிக்குமாறு (துறைத் தலைவர்கள்) கேட்டுக்கொள்ளப்பட்டார்கள். மேற்கண்ட இரண்டாம் கட்டத்திலும் அதற்குபிறகு உள்ள கட்டங்களிலும், தமிழை கடிதப்போக்குவரத்தில் கொண்டுவருவதில் சீரான விரிவான மாற்றத்தை உண்டுபண்ண அரசாங்கம் தேவையான அறிவிப்புகள் வெளியிடுவதை தவிர்த்து, அரசாங்க ஆணைகளை பிறப்பிக்க பொதுத்துறையின் 13-2-1963 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 225 வகை செய்கிறது.

(2) மேற்கூறிய இரண்டாம் கட்டத்தில் தமிழில் கடிதப்போக்குவரத்தை கொண்டு வருவதைப் பொறுத்து பல்வேறு துறைத் தலைவர்களிடமிருந்து கிடைத்துள்ள அறிக்கைகளை, ஆட்சி மொழிக்குழுவின் காரியதரிசி, அரசாங்கத்திற்கு அனுப்பியுள்ளார்.

(3) ஆட்சிமொழிக் குழுவின் சிபாரிசுகளை பரிசீலனை செய்தபிறகு அரசாங்கம் கீழ்க்கண்ட ஆணைகளைப் பிறப்பிக்கிறது. இது 13-4-1965 (தமிழ்ப் புத்தாண்டு தினம்) முதல் அமுலுக்கு வரும் :—

(i) துறைத் தலைவர்கள், தங்களுக்கு கீழுள்ள அலுவலகங்களுடனும், மற்றும் மாவட்ட அலுவலகங்களுடனும் நடத்தும் கடிதப்போக்குவரத்து—தொழில் நுட்பத்துறையைப் பொறுத்த விஷயங்களை தவிர்த்து—எளிய விஷயங்களில் தமிழிலேயே இருக்கவேண்டும்,

(ii) இவ்வாணையின் இணைப்பு 1ல் தரப்பட்டுள்ள துறைத் தலைவர்கள், தங்களுக்கு கீழுள்ள அலுவலகங்கள் மற்றும் மாவட்ட அலுவலகங்களுடன் தமிழிலேயே அவர்களின் பெயர்களுக்கு எதிரே கொடுக்கப்பட்டுள்ள விஷயங்களில் கடிதப் போக்குவரத்து வைத்துக்கொள்ளவேண்டும்.

குறிப்பு;—இவ்வாணையின் இணைப்பு 1-ல் துறைகளின் பெயர்களும், அந்தந்த துறைகள் தமிழில் கடிதப் போக்குவரத்து செய்யவேண்டிய விஷயங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றை இவ்வாணையில் காண்க.

(பொதுத் துறையின் 24-3-1965 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 603-ன் சுருக்கம்.)

# அறிவிப்பு

**தமிழ்நாடு விவசாயத்துறை விவசாயப் பள்ளிகள்.**

தமிழ்நாடு விவசாயத் துறையினரால் நிர்வகிக்கப்படும் விவசாயப் பள்ளிகளில், ஜூலை மாதம் முதல், 12 மாத கால வகுப்புகள் நடைபெறும். ஒவ்வொரு பள்ளியிலும் 20 மாணவர்கள் மட்டும் சேர்க்கப்படுவர். மாணவர்களுக்கு இலவச ஜாகை, உணவு வசதி, மேற்படி பள்ளிகளிலேயே ஏற்பாடு செய்து கொடுக்கப்படும். உணவு வசதிக்குப் பதிலாக, நீலகிரி பள்ளி தவிர மற்ற பள்ளி மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ. 35 (ரூபாய் முப்பத்தைந்து மட்டும்) நீலகிரி மாணவருக்கு ரூ. 40 (ரூபாய் நாற்பது மட்டும்) வீதம் உதவித் தொகை கொடுக்கப்படும். மற்றும், இதர செலவுகளுக்காக, மாதம் ரூ. 5 (ரூபாய் ஐந்து மட்டும்) அளிக்கப்படும்.

தகுதி.—1965-ம் ஆண்டு ஜூலை மாதம் 1-ந் தேதியன்று 18 வயதுக்குக் குறையாமலும், 30 வயதுக்கு மேற்படாமலும் உள்ள விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த இளைஞர்களே இப் பள்ளிகளில் சேரத் தகுதி உடையவர் ஆவர். மற்றும் 8-ம் வகுப்பு அல்லது 3-ம் படிவம் படித்து தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். மேலும், இரண்டு வருடங்கட்குக் குறையாமல் விவசாய அநுபவம் பெற்றிருக்க வேண்டும். சொந்த நிலத்தில் விவசாயம் செய்பவர்களும், அல்லது பண்ணைகளில் வேலை செய்பவர்களும் இதற்குத் தகுதியுடையவர் ஆவர். 1965-ம் வருஷம் ஜூன் மாதம் 1-ம் தேதிக்குள் கீழ்க்கண்ட விவசாய அதிகாரிகளுக்கு மனு செய்தல் வேண்டும். மனுக்கள் பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் மூலமாக மாவட்ட விவசாய அதிகாரிகளுக்கு அனுப்பப்படல் வேண்டும். கோவை மாவட்ட மனுதாரர்கள் மட்டும், பவானிசாகர் விவசாய ஆராய்ச்சிப் பண்ணை கண்காணிப்பாளருக்கு விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும். அலுவலர்கள் அடங்கிய தேர்வுக் குழு முன், அவர்கள் சொந்தச் செலவுவில், குறிப்பிட்ட இடங்களில் ஆஜராக வேண்டும். அந்தக் குழு, மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும்.

விண்ணப்பத் தாள் மாவட்ட விவசாய அதிகாரியிடமும் (District Agricultlural Officer) வட்டார வளர்ச்சி அலுவலகத்திலும் தமிழ்நாடு விவசாயத் துறை நெறியாளர் அலுவலகத்திலும் (Office of the Director of Agriculture, Madras) கிடைக்கும்.

விவரம்

| மாவட்டம். | பள்ளி உள்ள இடம். | மனு பெறும் அதிகாரி. |
|---|---|---|
| 1 செங்கல்பட்டு .. | காஞ்சிபுரம் | மாவட்ட வேளாண்மை அதிகாரி, செங்கல்பட்டு. |
| 2 தென்னார்க்காடு .. | காக்குப்பம் | மாவட்ட வேளாண்மை அதிகாரி, விழுப்புரம். |
| 3 தஞ்சாவூர் .. | சாக்கோட்டை | மாவட்ட வேளாண்மை அதிகாரி, கும்பகோணம். |
| 4 திருச்சிராப்பள்ளி | திருவரங்குளம் | மாவட்ட வேளாண்மை அதிகாரி, புதுக்கோட்டை. |
| 5 இராமநாதபுரம் | பரமக்குடி | மாவட்ட வேளாண்மை அதிகாரி, சிவகங்கை. |
| 6 கோயம்புத்தூர் | பவானிசாகர் | கண்காணிப்பாளர், விவசாய ஆராய்ச்சி நிலையம், பவானிசாகர். |
| 7 திருநெல்வேலி .. | கரையிருப்பு | மாவட்ட வேளாண்மை அதிகாரி, திருநெல்வேலி. |
| 8 சேலம் .. .. | பாப்பார்பட்டி | மாவட்ட வேளாண்மை அதிகாரி, கிருஷ்ணகிரி. |
| 9 நீலகிரி .. .. | உதகமண்டலம் | மாவட்ட வேளாண்மை அதிகாரி, உதகை. |
| 10 வட ஆர்க்காடு | காட்பாடி | மாவட்ட வேளாண்மை அதிகாரி, வேலூர். |
| 11 கன்னியாகுமரி .. | முழுக்கோடு | மாவட்ட வேளாண்மை அதிகாரி, நாகர்கோயில். |

குறிப்பு.—மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு மாவட்டத்தைச் சேர்ந்தவர்களும், அந்தந்த மாவட்டத்திற்கு நேராகக் குறிப்பிட்ட மாவட்ட அதிகாரிகளுக்குத்தான் விண்ணப்பம் அனுப்ப வேண்டும்.

# முக்கிய அறிவிப்பு

## கிராம நலம் சந்தாதாரர்களுக்கு

கீழ்க்கண்டுள்ள சந்தா எண்களுடைய "கிராமநலம்" சந்தாதாரர்களின் ஆண்டுச் சந்தா, 1965-ம் ஆண்டு மே மாதத்துடன் முடிவடைகிறது, "கிராம நலம்" இதழ்களைத் தொடர்ந்து பெறுவதற்கு இந்தச் சந்தா எண்களுடைய சந்தாதாரர்கள், தங்களுடைய சந்தா எண்ணைக் குறிப்பிட்டு ஆண்டுச் சந்தா ரூ 1–50 வீதம், சந்தாத் தொகையை "மானேஜர், 'கிராம நலம்' கிராம நலத் நிர்வாகத்துறை, சென்னை–9" என்ற முகவரிக்கு உடனே மணியாடர் மூலம் அனுப்ப கோரப்படுகிறார்கள். சந்தா எண் "கிராம நலம்" இதழ்கள் அனுப்பப்படும் மேல் உறையில் பொறிக்கப்பட்டிருக்கிறது.

சந்தா எண்கள்

| | | |
|---|---|---|
| 8073 | 23105 to | 24287 to |
| 10264 | 23136 | 24342 |
| 14204 | 23163 | 24344 to |
| 14213 | 23175 to | 24369 |
| 14332 | 23406 | 24371 to |
| 14440 | 23408 to | 24534 |
| 14442 | 23633 | 24536 to |
| 14465 | 23676 | 24550 |
| 14943 | 23677 to | 24558 |
| 16073 | 23796 to | 24717 to |
| 20889 | 23799 | 24723 |
| 23051 | 24041 | 25361 |
| 23052 | 24043 to | 25730 |
| 23056 | 24203 | |
| 23065 to | 24205 to | |
| 23072 | 24259 | |
| 23079 to | 24267 to | |
| 23090 | 24278 | |

வெளியிடுபவர் :

திரு என். அனந்தபத்மநாபன், ஐ. ஏ. எஸ்.

ஆசிரியர் :

திரு. எஸ். வேங்கடசாமி, எம். ஏ.

Printed by the Director of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras, Edited by the Public Relations Officer and published by the Secretary, Rural Development and Local Administration Department, Government of Madras. Wrapper printed at Screen Designs, Madras-2.

# மீன் பண்ணைகள்



பஞ்சாயத்து வேலைத்திட்டங்களில் ஒன்றுதம்.

REGD. NO. M. 7277
©
தமிழ்நாடு அரசாங்கம் 1965



புதிய
விவசாயக்
கருவிகளைப்
பயன்படுத்தினால்...



